சிவபெருமான்
உமாதேவிக்கு உபதேசித்த

ஞானசுர நூல்

புதிய உரையுடன்



தாமரை நூலகம், சென்னை-26.

சிவபெருமான்

உமாதேவிக்கு உபதேசித்த

ஞான சரநூல்

புதிய உரையுடன்

ஔவையார்-உயர் ஞான சரநூல்
பீர்முகமது - திருமெய் ஞான சரநூல்

பதிப்பாசிரியர்
எஸ்.பி. இராமச்சந்திரன்

தாமரை நூலகம்
7, என். ஜி. ஓ. காலனி 3வது தெரு
வடபழனி, சென்னை - 600 026
தொலைபேசி எண் - 044 - 23620249
9940073194

பதிப்புரை

மனிதன் ஒரு சந்தேகப் பிராணி! எப்பொழுதும் அவன் எதைப் பற்றியாவது நினைத்துச் சந்தேகப் பட்டுக் கொண்டே வாழ்கிறான். சஞ்சலப் பட்டுக் கொண்டே இருக்கிறான்.

தான் விரும்பிய பொருள் கிடைக்குமா? எடுத்த காரியம் வெற்றிகரமாக முடியுமா? பிரயாணம் சென்றவன் நலமாகத் திரும்பி வருவானா? நோய் கண்டவன் பிழைப்பானா?

இந்தக் காரியத்தைச் செய்யலாமா? வேண்டாமா? இப்போது வெளியூர் செல்லலாமா? கூடாதா? இப்படி எதையாவது பற்றிச் சந்தேகப் பட்டுக் கொண்டே இருப்பது தான் மனித சுபாவம்.

உலகம் முழுவதிலுமுள்ள எல்லா மனித இனங்களுக்கும் இது பொருந்தும்.

ஒரு செயல் நடந்து முடிந்தபின் அதன் பலனைத் தெரிந்து கொள்ளலாம் என்பதைவிட செயல் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதே அல்லது செயலைத் தொடங்குவதற்கு முன்பே கூட அதன் முடிவைத் தெரிந்து கொள்ளத் துடிக்கிறது மனித மனம்.

கற்பத்தில் இருக்கும் குழந்தை பிறக்கத்தான் போகிறது. அது ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும் வளர்க்கத்தான் போகிறோம். ஆனாலும் அது ஆணா, பெண்ணா என்பதை முன்னதாகவே தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஒரு அளவு கடந்த ஆசை! பைத்தியம் என்று கூடச் சொல்லலாம்.

இப்படிப்பட்ட பிரச்சனைகளுக்காகத்தான் மனிதன் குறி கேட்பது, சகுனம் பார்ப்பது, ஆரூடம், சோதிடம் கேட்பது போன்ற செயல்களில் ஈடுபடுகிறான்.

சோதிடத்திற்காவது, கிரகங்களின் சஞ்சாரம் என்ற ஒரு அடிப்படை இருக்கிறது. குருவி இழுத்துக் கொடுக்கும் சீட்டிலிருந்தும்

2

சின்னக் குழந்தை தொட்டுக் காட்டும் எண்ணிலிருந்தும் நடக்கப்போவதைப் பற்றித் தெரிந்து கொள்ள முடியும் என்று நிலைப்பதற்கு என்ன பொருள் இருக்க முடியும்?

இதைத்தான் மூடநம்பிக்கை என்று பொதுப்படையாக ஒதுக்கித் தள்ளுகின்றனர். காக்கை உட்காரவும் பனம்பழம் விழவும் சரியாக இருந்தாற்போல் சில மூட நம்பிக்கைகள் பலித்து விடுவதும் உண்டு. அதை வைத்துக் கொண்டு குருவி ஜோதிடம் சொன்னது பலித்து விட்டது என்றும், புல்லி சொன்னது சரியாகப் போயிற்று என்றும் அடித்துப் பேசுவதைக் கேட்கும்போது வெறுப்பாகவே இருக்கும்.

இந்த மாதிரி மூட நம்பிக்கைகள் எவ்வாறு தோன்றின என்பதை ஆராயப் புறப்பட்டால் அதற்கு ஒரு எல்லையே காண முடியாதபடி மிகப் பழங்காலத்துக்கும் பழங்காலத்திற்குள் போய்க் கொண்டே இருக்கலாம்.

முத்தொள்ளாயிரம் சங்க காலத்தைச் சேர்ந்த ஒரு நூல். அழகான இனிமையான பாடல்களைக் கொண்ட ஒரு நூல். அதில் ஒரு பாடல்,

கூடல் பெருமானைக் கூடலார் கோமானைக்
கூடப் பெறுவேனேல் கூடென்று - கூடல்
இழைப்பாள் போல் காட்டி இழையாதிருக்கும்
பிழைப்பில் பிழைபாக் கறிந்து.

தலைவிக்குப் பாண்டிய இளவரசன் மேல் காதல். அவன் தனக்குக் கிடைப்பானா கிடைக்க மாட்டானா என்ற ஐயம் அவள் நெஞ்சைத் துளைக்கிறது. அக்கால வழக்கப்படி கூடல் போட்டுப் பார்க்கிறாள்.

கண்களை மூடிக் கொண்டு மணல்மேல் வளையம் வளையமாகப் போட்டுக் கொண்டே வருவது ஒரு வகையான நிமித்த ஜோதிடம். கடைசி வளையம் முன் வளையத்தோடு சேர்ந்தால் காரியம் நடக்கும். அப்படிச் சேராவிட்டால் நடக்காது.

வெற்றி தோல்விகளை அறிந்து கொள்ள எவ்வளவு சுலபமான வழி பார்த்தீர்களா?

தலைவி கூடல் இழைத்துப் பார்க்க நினைக்கிறாள். ஆனால் ஒரு வேளை கூடல் கூடாமல் போனால்....? ஐயோ அந்த துக்கத்தை தன்னால்

தாங்கவே முடியாதே என்று நினைத்து கூடல் போடாமலேயே நிறுத்தி விடுகிறாள்.

மூட நம்பிக்கை எவ்வளவு ஆழமாக வேரூன்றியிருக்கிறது பார்த்தீர்களா?

கையில் வளையம் போடுவதற்கும் பாண்டிய இளவரசன் அவளைத் தேடி வருவதற்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது?

இதே போல் தான் கோவிலில் பூக்கட்டிப் போட்டுக் கேட்பது. தொடுகுறி சாஸ்திரம் பார்ப்பது எல்லாமே ஏதோ ஒரு வகை நம்பிக்கை!

இந்த நம்பிக்கையால் வாழ்ந்தவர்களும் உண்டு. வாழ்வை இழந்தவர்களும் உண்டு. அதனால்தான் இவை எல்லாவற்றையும் மூடநம்பிக்கைகள் என்று ஒதுக்கித் தள்ளிவிட வேண்டும் என்கிறார்கள் பகுத்தறிவுவாதிகள்.

ஆனால் வேறு சிலர் அப்படி இல்லை. இவற்றுக்கெல்லாம் ஒரு அர்த்தம் இருக்கிறது. நம்பினால் நடராஜா இல்லாவிட்டால் எமராஜா என்பது போல் மனதில் நம்பிக்கை வைத்துப் பின்பற்றினால் இவற்றால் நல்ல பயனை அடைய முடியும் என்று கூறுகின்றனர்.

என் வாழ்க்கையில் நிகழ்ந்த ஒரு சம்பவத்தை இங்கே எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

என் நண்பர் ஜகதீசன் என்பவர் பெரிய நாடி ஜோதிடர் நந்தி நாடி என்ற நூல் ஓலைச் சுவடிகளாக அவரிடம் இருந்தது. கோவையில் இருந்தார்.

ஒரு நாள் நானும் வேறொரு நண்பரும் ஜகதீசனுடன் வெஸ்ட்டி உறால் ரோடில் நடந்து கொண்டிருந்தோம். ஒரு இடத்தில் இரத்தக் கறை காணப்பட்டது. அதைப் பார்த்தவுடன் ஜகதீசன் நாயோ பூனையோ ஒரு நாற்கால் பிராணி அடிப்பட்டிருக்கிறது. இந்த இடத்தில் ஒரு நாற்கால் பிராணி அடிபடவேண்டுமென்றால் இன்று கேட்டை நட்சத்திரமாக இருக்க வேண்டும் என்றார். சற்று தூரத்தில் இருந்த குப்பைத் தொட்டியில் ஒரு அடிபட்ட பூனை கிடந்தது. பக்கத்தில் இருந்த கடையில் மாட்டப்பட்டிருந்த நாட்காட்டி மூலம் அன்று கேட்டை நட்சத்திரம் தான் என்பது தெரிய வந்தது.

இதை இங்கே குறிப்பிட விரும்பிய காரணம் இயற்கையில் ஏதோ ஒரு சக்தி ஒவ்வொரு அணுவையும் கட்டுப்படுத்துகிறது. எந்த ஒரு சிறு செயலும் அந்தச் சக்தியை மீறி இயங்குவதில்லை.

அப்படியென்றால் குருவி ஜோதிடனிடம் உள்ள குருவியின் மூக்கிலும் கோயிலில் கட்டிப்போடும் பூக்களிலிருந்து பூவை எடுக்கும் குழந்தையின் கைவிரலிலும் அதே சக்தி வேலை செய்யக் கூடும் என்று நினைப்பதில் தவறென்ன?

இந்த மூட நம்பிக்கைகள் தொன்றுதொட்டு இன்றுவரை அப்படியே அழியாமல் நீடித்து நிலைத்து வருவதன் காரணம் என்ன?

மனிதனின் பலவீனம் மட்டும்தான் என்று அவ்வளவு சுலபமாக ஒதுக்கிவிட முடியாது. எந்த ஒரு நம்பிக்கையும் அதில் உண்மை இல்லாவிட்டால் அதிக காலம் நீடித்து நிற்க முடியாது. எத்தனை கொள்கைகள் கோட்பாடுகள் கால வெள்ளத்தில் எதிர் நீச்சலடித்து நிலைக்க முடியாமல் அழிந்து போயிருக்கின்றன. ஆனால் குறி, நிமித்தம், சகுனம் பார்ப்பது என்ற இந்தப் பழக்கம் மட்டும் மனிதனை விடாமல் உறுதியாகப் பிடித்துக் கொண்டிருக்கிறனவே? இதற்குக் காரணம் என்ன?

சோதிடத்திற்கு அடுத்தபடியாகச் சித்தர்கள் கையாண்ட முறைகளில் ஒன்று பஞ்சபட்சி சாஸ்திரம். அடுத்து நிற்பது சரநூல் சாஸ்திரம்.

பஞ்சபட்சி சாஸ்திரத்திலும் சரம் பார்ப்பதிலும் சிறந்த நிபுணர்கள் இருந்திருக்கிறார்கள். ஆனால் இன்று அந்த சாஸ்திரங்கள் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து கொண்டிருக்கின்றன.

பஞ்சபட்சி சாஸ்திரம் என்பது ஒருவன் பிறந்த நட்சத்திரத்திற்கேற்ற ஒரு பறவையைத் தேர்ந்தெடுத்து அந்தப் பறவை அந்த நேரத்தில் என்ன தொழிலில் இருக்கும் என்பதை அடிப்படையாகக் கொண்டு பலன் சொல்கிறது.

சரம் என்பது மூச்சுக்காற்றை அடிப்படையாகக் கொண்டது. நல்ல ஒழுக்கமும், பண்பும் உடையவனாய் மூச்சுப் பயிற்சி மூலம் மூச்சைக் கட்டுப் படுத்தும் வாசியோகம் அறிந்தவனாலேயே சரம் பார்க்க முடியும்.

ஒரு கேள்வியை மனதில் தாங்கி ஒருவன் வரும்போது தன் மூச்சு வலது நாசியில் ஓடுகிறதா அல்லது இடது நாசியில் ஓடுகிறதா என்பதைக் கொண்டும், அவன் வந்து நிற்கும் இடம், நிற்கும் நிலை, அவனுடைய அங்க சேட்டைகள், அசைவுகள் முதலானவற்றைக் கொண்டும் அவனுடைய கேள்விக்குத் தக்க பதிலைக் கூறுவதே சரநூல்.

பழங்காலத்தில் ரிஷிகள் தங்களைப் பார்க்க வருகிறவர்களைப் பார்த்தவுடனே அவர்களுக்கும் நேரம் இருக்கும் நன்மை தீமைகளை உணர்ந்து கொண்டார்கள். அதற்குத் தக்க படி ஆசிகள் வழங்கினாரார்கள். ஆலோசனை கூறினார்கள். அது சரம் பார்க்கும் முறையை அறிந்திருந்த தாலேயே என்று துணிந்து கூறிவிடலாம். தவிர அவர்கள் ஒவ்வொரு வினாடியும் கோளும் நாளும் உள்ள நிலையை அறிந்தும் வைத்திருந்தார்கள்.

அங்கறையுள்ளவர்கள் சிறிதளவேனும் சரம் பார்க்கும் குறையைக் கற்றுக் கொண்டால் நல்ல பயன் பெறுவார்கள்.

உமாதேவியார் சிவபெருமானிடம் நாள் நட்சத்திரம் முதலான ஜோதிட நுட்பங்களை அறியாதவர்களுக்குத் தங்களுடைய ஐயங்களைத் தீர்த்துக் கொள்ள வழியிருக்கிறதா என்று கேட்கச் சிவபெருமான உமாதேவிக்கு இந்த சரநூலை உபதேசித்ததாகக் கூறி அகஸ்தியர் நூலைக் கூறுகிறார்.

இது ஒரு அருமையான கலை, ஆசனம், யோகம் ஆகிய நெறிகளில் செல்பவர்கள் தங்கள் அனுபவத்தில் இதன் பெருமையை உணர முடியும்.

****

சரநூல்

இந்த நூலில் நான்கு பகுதிகள் உள்ளன :-

1. சிவபெருமான் உமாதேவியாருக்கு உபதேசித்த உயர் மெய்ஞான சரநூல்.:- கீழ்த்திசை சுவடிகள் நூலகத்தில் இத்தலைப்பில் மூன்று ஓலைச் சுவடிகள் உள்ளன. மூன்றிலும் மூலம் மட்டும் ஒன்றாக இருந்த போதிலும் உரைகள் மட்டும் வெவ்வேறாக உள்ளன. உரைகளுக்கிடையே கருத்து வேறுபாடும் காணப்படுகிறது. இந்நூலை அவரவர்கள் புரிந்து கொண்ட முறையில் உரை எழுதியிருக்கிறார்கள் என்று கருதுவதற்கு இடம் உள்ளது.

ஏனென்றால் இப்பாடல்களில் மிகவும் நுட்பமான கருத்துகள் கூறப்பட்டுள்ளன. இடது அல்லது வலது நாசித் துளையில் ஓடும் சரத்தை பஞ்சபூதக் கூறுகளாகப் பிரிக்கவும் அவற்றுக்குத் தக்கவாறு பலன் கூறவும் முறைகள் கூறப்பட்டுள்ளன. சில இடங்களில் பாடல்களில் உட்கருத்து என்ன என்பதை புரிந்து கொள்ள முடியாதபடி குழப்பம் ஏற்படுகிறது. அதனா லேயே உரை ஆசிரியர்கள் வெவ்வேறு விதமாக பொருள் கண்டிருக்கிறார்கள்.

இந்த நூலில் கூடுமானவரை பாடலை ஒட்டிய கருத்து மட்டுமே உரையாகத் தரப்பட்டுள்ளது. பயிற்சி செய்வோர்கள் தக்க குருவின் உதவியாலும், துணையாலும் சொந்த அனுபவத்தின் வாயிலாகவும் உண்மையைக் கண்டு உணரலாம்.

2. ஔவையார் திருவாய் மலர்ந்தருளிய உயர் ஞான சரநூல்:- இதுமுற்றிலும் உரைநடைப் பகுதியாக அமைந்துள்ளது. சரம் பார்ப்பதில் முக்கியமான விஷயங்கள் மட்டுமே கூறப்பட்டுள்ளன. இந்நூல் தெளிவாகவும் தடுமாற்றத்திற்கு இடம் இல்லாமலும் அமைந்துள்ளது. பாடல்களால் ஆன மூலநூல் கிடைத்திருந்தால் மிகவும் உதவியாக இருந்திருக்கும்.

3. தினக்கிரம அலங்கார சருக்கம்:- இந்த நூலில் நோய் அணுகாமல் இருப்பதற்கும் உடல் நிலைத்திருப்பதற்கும் ஒவ்வொரு நாளும் அனுசரிக்க வேண்டிய முறைகள் கூறப்பட்டுள்ளன.

உணவு எப்படி இருக்க வேண்டும். எப்படி புசிக்க வேண்டும். குளிப்பதற்கான விதிமுறைகள் அதிகாலையில் எழுந்தவுடன் பார்க்கத்தக்கவை தகாதவை இப்படியாக ஒவ்வொன்றைப் பற்றியும் இந்தநூல் கூறுகிறது. இதில் மனிதர்களின் நலமான வாழ்வுக்கு மிகவும் இன்றியமையாத விஷயங்கள் கூறப்பட்டுள்ளன. படித்து அதன்படி நடந்து பயன்பெற வேண்டும். ஏனென்றால் இதில் கூறப்பட்டுள்ளவை நலமான வாழ்வுபெற விரும்புபவர்களால் தவிர்க்கப்படக் கூடியவை அல்ல.

4. பீர்முகமது திருமெய்ஞ்ஞான சரநூல்:- முப்பது பாடல்களில் பீர்முகமது சரம்பார்க்கும் முறையைக் கூறியிருக்கிறார். மிகத் தெளிவான பாடல்கள் அதிநுட்பமாக ஆழத்தில் இறங்கிச் செல்லாமலும், குழப்பமடையாமலும் எளிதாக சரம் நடக்கும் முறையில் இருந்து நன்மை தீமைகளை அறிந்து கொள்ள வழி கூறியிருக்கிறார். இந்த நூலைப் படிப்பதன் மூலம் பிராணாயாமம் செய்யக்கூடிய யாரும் சரம்பார்க்கும் முறையை எளிதில் அறிந்து கொள்ளலாம்.

இவை தவிர கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில் காலசரம் என்ற பெயரிலும் ஏழுவார சூக்ஷம சரம், மூலசரம் என்ற பெயர்களிலும் நூல்கள் உள்ளன.

இவற்றில் காலசரம் பதினைந்து பாடல்களைக் கொண்டது.

காலசரம் :-

வெள்ளி வெண்டிங்கள் விளங்குபுதன் இடம்
ஒள்ளிய மைந்தனிரவி செவ்வாய் வலம்
வள்ளிய பொன்னே வளரும்பிறையிடம்
தள்ளிய தேய்பிறைத்தாளம் வலமாமே. (1)

பாற்கரன் பிழைக்கில் நோயாம் பயின்றிடத் துற்றதன்மே
லாற்றரும் போக்குண்டென்னு மம்புலி பிழைக்குமாகில்
போற்கை சேய் பிழைக்குமாகில் சாவது கேட்க வேணும்
புதல்வனே பிழைக்குமாகி லூர்க்கொரு அழிவுண்டென்று
முண்மை யீதறிந்து கொள்ளீர். (2)

அந்தணன் பிழைக்குமாகி லரசனுக் காவியில்லை
முந்தவே வெள்ளிதப்பில் மூத்தவர் முனிவர் சண்டை
மைந்தனே பிழைக்குமாகில் வையகம் பஞ்சமென்ற
இந்த நூலறி வோர்தங்கட் கிடரில்லை கண்டுகொள்ளே. (3)

ஏழுவார சூட்சும சரம்

இந்நூலில் ஆறு பாடல்களே உள்ளன. இப்பாடல்கள் ஒவ்வொரு நாளில் சரம் ஓடுவதன் சூட்சுமமான பலன்களைக் கூறுகின்றன.

அண்டத்தக்கினி கீழப்பு வருகேயோடில் வாயுவதாம்
தண்டைத் தண்டிற்பிருதிவி தனிலோட வாகாச
கொண்ட குருவினருளாலே குறித்து நோக்க வல்லீரேல்
அண்டத்தவர்கள் வாழ்நாளு மருவி நாளுமறிவீரே. (1)

இது நாசியிலேதானே பஞ்சசரம் ஐந்தும் நடக்கிற கட்டளை. இதுக்குப் பலம்? ஏழு வாரத்துக்குஞ் சொன்னது.

புதனோடு கதிரோன்தானும் பூமியிலுதிக்கில் நன்மை
பதமுறு புனல் தூரப்போம் பரிசன மக்கட் சேதம்
இதமுறுமங்கி வெப்பாம் வான் மேலே மழையுண்டன்றே.
.. (2)

விதமுறு மதிகாற்றாகில் விளங்கிடும் புவியின்மீதே
திதமுறவுதிக்கில் கண்ணோந்துலங்கிய வாயுக்கானோம்
பதமுறுமங்கி வெப்பாம் வானமேற் சாவாமென்றே
திதமுறவுமையாள் கேட்பச் செப்பினார் ஈசன்றானே. (3)

ஏழு வாரத்துக்கும் சூட்சமசர விவரம் கவி

வாரத்துக்கும் பலம்:- புதன் ஞாயிறு நாள் 2. பிருதிவி நன்மையாம். அப்பு ஊர்போம். ....

திங்கள் நாள் ஒன்றுக்குப் பிருதிவி கண்ணோய். அப்புக்குக் கால் நோய். தேயு சோகம். வாயு கீர்த்தி. ஆகாயம் சாவு ஆக வாரம் ஏழுக்குப் பலம் முற்றும்.

இவை தவிர மூலசரம் என்ற பெயரில் இரு ஏட்டுபிரத்திகள் உள்ளன, ஒன்றில் ஐந்து பாடல்களும், இன்னொன்றில் பத்துப் பாடல்களும் உள்ளன. இவையாவும் மனிதனுக்கு உண்டாகும் நன்மை, தீமைகள், நோய், நொடிகள் முதலியவற்றைப் பற்றியும் கூறுகின்றன.

மருத்துவம் பயிலும் மாணவர்கள் இவற்றை முழுமையாக ஆராய்ந்து அறிவது நல்ல பலன் அளிக்கும்.

சிவயோக சாரம்

பூரணானந்தர் அருளிய சிவயோக சாரம் என்னும் நூலில் காணப்படும் சரம் பற்றிய விபரங்கள் கீழே கூறப்பட்டுள்ளன. இதைப் படித்துக் கொண்டால் சரநூல் நன்கு புரியும்

பிராண வாயுவின் நிலை:- மாணாக்கன் ஆரம்பத்தில் கவனிக்க வேண்டிய விதிகள் யாவையெனில், அவை சூரியன் சந்திரன் அக்கினி என்னும் மூன்று நாடிகளின் நடைகளென்னப்படும்.

மூன்று கலையின் சுவாசத்தினாலுண்டாகும் சத்தத்தைக் கண்டறிய வேண்டும்.

அச்சத்தத்துக்கு 'அஜபா' என்பது பெயராம்.

அந்தச் சத்தத்தைக் கண்டுபிடிக்க சில விதிகள் கூறப்பட்டிருக்கின்றன. அவையாவன: வாயுக்கள் மூன்று. அவை இடகலை, பிங்கலை, என்பவையாம். இடக்லை என்பது இடது நாசியிலும், வலது நாசியிலும், சுழுமுனை என்பது இரண்டு நாசிகளிலும் வரவும் போகவுமிருக்கிற சுவாசம். இதற்கு அஜபா என்பது பெயராம். இடைகலை என்பது சந்திரனும், பிங்கலை என்பது சூரியனும், சுழுமுனை என்பது அக்கினியுமாம்.

அன்றியும், இடை கலையானது சுக்கிலபட்சமாகிற அமாவாசையின் பிரதமை முதல் மூன்று நாளைக்குக் காலையில் தொடர்ச்சியாய் வர வேண்டும்.

சதுர்த்தி முதல் மூன்று நாளைக்குப் பிங்கலை நடக்க வேண்டும்.

இதே மாதிரியாகச் சுக்கிலபட்சம் முழுமையும் மூன்று நாளைக்கு இடகலையும் மூன்று நாளைக்குப் பிங்கலையுமாய் நடக்க வேண்டும்.

இவ்வண்ணமாகச் சுக்கில பட்சத்தில் சந்திரகலை வராவிடில், அவனுக்குத் தேகம் அசவுக்கியப்பட்டுக் கவலை மேலிடுமென்றறிக. அதைச் சரிப்படுத்த வேண்டிய விஷயத்தைப் பற்றிப் பின் வரும் வாக்கியத்திற் காண்க.

கிருஷ்ணபக்ஷம், அதாவது பௌர்ணமி, பிரதமை முதல் மூன்று நாட்களும் பிங்கலை நடக்க வேண்டும்.

பின் மூன்று நாளைக்கும் இடகலை நடக்க வேண்டும்.

இத்தன்மையாய் இரண்டு கலைகளும் மும்மூன்று நாளைக்கொரு முறை மாறி மாறி நடக்க வேண்டும்.

இதை மாணாக்கன் குறிப்பாகத் தினம் தினம் கவனிக்க வேண்டும்.

சுழுமுனை கூடுவது கஷ்டமானதால், அதைச் சாக்கிரதையாய் அப்பிய சித்துப் பழகல் வேண்டும்.

மாணாக்கனுக்கு முக்கிய வேலை, இடகலையும் பிங்கலையும் திதிக்குத் தவறி நடந்தால், அதை மாற்ற வேண்டிய விஷயத்தைப் பற்றிக் குரு மூலமாய்க் கேட்டுக் கொள்ளுதலே.

இடகலையின் பலன்:- இடகலை நடக்குங் காலம் தாகம், ஜலவிருத்தி, தீர்மானம் செய்ய, வேலை செய்ய, நகை செய்ய, நகை அணிந்து கொள்ள, அன்னிய தேசத்திற்கு யாத்திரை போக, வீடு சத்திரம், கோவில் கட்ட, தருமஞ் செய்ய, சாமான் சேகரஞ் செய்ய, கிணறு, குளம் வெட்ட, கலியாணம் செய்ய, வஸ்திரம் கட்ட, வைத்திய சாஸ்திர அப்பியாசம், மருந்து கற்பங்கள் முதலியவை செய்ய, சினேகிதரைக் காண வியாபாரஞ் செய்ய, தானியம் இருப்புச் செய்ய, வீட்டிற்குக் குடிபோக, விதை விதைக்க, சமாதானஞ் செய்ய, அன்னிய பாஷை அப்பியாசஞ் செய்ய, உதேசஞ் செய்ய, பலனைப் பற்றி யாத்திரை போக, யானை குதிரை ஏறி வேட்டைக்குப் போக, எஜமானாக, ஆடல் பாடல் கற்க, ஒரு புதிய ஊருக்குப் போக, பத்துக்களைக் காண ஆகிய நடவடிக்கைகளுக்குப் பயன்படும்.

இடகலையானது சரிவர நடந்தால், தேகம் சௌக்கியமாயிருக்கும். இதில் ஆகாசத்தின் அம்சமிருக்குமானால், முன் சொன்ன நடவடிக்கைகளுள் ஒன்றும் செய்யக் கூடாது. இரவாய் இருந்தாலும், பகலாய் இருந்தாலும் மேற்சொன்ன வேலைகளை இடகலையில் நடத்த வேண்டும்.

பிங்கலையின் பலன்:- வல நாசியில் உண்டாகிற பிங்கலையின் அதாவது சூரியநாடிக் காலத்தில், கஷ்டமான வேலை எதுவும் அப்பியசிக்க,

எவ்விதக் கொடூரமான செய்கையும் செய்ய, போஜனம் செய்ய, மலம் கழிக்க போகம் செய்ய, கடல் யாத்திரை போக, சண்டை செய்ய, படை எடுக்க, கஷ்டமான சாஸ்திரம் கற்க, குதிரை முதலாகிய நாற்கால் ஜீவன்களை வாங்க விற்க, மட்டமான மலை ஏற, குதிரை மல்யுத்தம் முதலாகிய பழக்கம் செய்ய, ஆறு, குளம், கடல் முதலாகிய இடங்களில் நீந்த, உலோகங்களைக் குறித்த சாஸ்திரங்களைப் படிக்க பாட எழுத, பணம் வாங்கக் கொடுக்க, எஜமானத்துவமான வேலை பார்க்க, அரசனைக் காண, இரண வைத்தியத்திற்கு மருந்து செய்ய, கடினமான ஆகாரம் ஜீரணிக்க, முயற்சி செய்யலாம்.

சுழுமுனையின் பலன்:- சுழுமுனை நாடி இரண்டு நாசியிலும் வரும் சுவாசம். அதை அதன் நடவடிக்கைக் காலத்திலே தான் அறியலாம்.

ஒரு கணத்தில் இட நாசியிலும், ஒரு கணத்தில் வல நாசியிலும் வரும் வாயுவானது. இரண்டு நாசிகளிலும் வரும் போது சுழுமுனையாம்.

இந்தச் சுழுமுனை நடக்கும் காலத்தில் உலக நடவடிக்கைகளை நிறுத்திவிட வேண்டும். தவறி நடந்தால் அபஜயமாம்.

எண்ணத்துக்கு விரோதமாய் நடக்கும் இந்த வாயுவின் காலத்தில் ஆத்துமத்தியானமும் பூஜையும் செய்யலாம்.

இந்த வாயு நடக்கும் காலத்திலேதான் சுவாசபந்தனம் செய்யக் கூடும்.

இந்தச் சுவாசம் கட்டுவதனால் மனத்திற்கும் தேகத்திற்கும் இன்பம் உண்டாகிறது.

நாடிகளின் நிலை:- முதல் ஆதாரமாகிய மூன்று நாடிகளைப் பற்றியும் விவரமாகச் சொல்லுவோம்.

மனிதர்களுக்கு எழுபத்தீராயிரம் நாடி நரம்புகள் இருக்கின்றன. அவற்றுள் முக்கியமானவை இருபத்து நான்கு. இவை எப்போதும் உறங்கிக் கொண்டிருக்கின்றன. இவைகளைக் குண்டலி சத்தி என்று ஆதிநாதர் அருளிச் செய்திருக்கின்றனர்.

****

பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்னும் ஐந்து தத்துவங்களும் மூன்று நாடிகளில் நிமிஷத்திற்கு ஒருமுறை மாறிக் கொண்டே வருகின்றன. இந்தத் தத்துவங்களைக் கண்டறிவதற்குரிய வகையைக் கூறுவோம்.

எவர்கள் இந்த மூன்று வாயுக்களை அப்பியசித்திருக்கிறார்களோ, அவர்களே இந்த யோகத்திற்குரியவர்கள். இந்த உலகம் பஞ்சபூதத்தால் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது. இது கண்டு கொள்பவர்களுக்கு ஆயுள் விருத்தியாகும். அப்படிப்பட்டவர்கள் பூஜை முதலாகிய உபசாரங்கள் செய்யப்பெற்று மேலாவார்கள்.

இந்த ஐந்து தத்துவங்களும் சத்தியலோகம், பூலோகம், மிருத்தியு லோகம் முதலாகிய இடங்களில் வியாபித்திருக்கின்றன. இவைகட்கு அன்னியமாக ஒரு வஸ்துவும் ஏற்படாது.

இப்பஞ்ச தத்துவத்தைக் கண்டறிவதற்கு விவரம் சொல்லுவோம்.

1. தத்துவங்களின் நடை; 2. சுவாசத்தினால் தத்துவங்களை அறிதல்; 3. சுவாசத்தில் தத்துவத்தின் அடையாளம்; 4. தத்துவங்களின் நிறம்; 5. தத்துவங்களின் சுவை; 6. சுவாசத்தின் அளவு; 7. தத்துவங்களின் அசைவு; 8. தத்துவங்களின் பலன்.

இந்த எட்டு விதங்களினால் பஞ்ச தத்துவத்தைக் கண்டறிய வேண்டும்.

மாணாக்கன் எந்த வாயுவில் எந்தத் தத்துவம் நடக்கிறதோ, அதைக் கண்டறிய வேண்டும். மேலும், முக்கியமாகக் கவனிக்க வேண்டும் பஞ்சேந்திரியங்களைச் சண்முகி முத்திரையால் மூடிக்கொண்டு, தினம் தினம் கொஞ்சங் கொஞ்சமாக அப்பியசிக்க வேண்டும். அதிகமாக அப்பியசித்தால், அசௌக்கியம் நேரிடும் குரு எவ்வளவு பிரமாணஞ் சொல்லுவாரோ, அவ்வளவுதான் நடக்க வேண்டும்.

1. இந்தச் சண்முகி முத்திரையை மூடிக்கொண்டு அப்பியசிக்கும் காலத்தில், மஞ்சள் நிறம் தோன்றினால் பிருதிவி என்றும்; வெண்ணிறம் தோன்றினால் அப்பு என்றும், சிவப்பு நிறம் தோன்றினால் தேயுவென்றும்; பச்சை நிறம், தோன்றினால் வாயுவென்றும், கறுப்பு நிறம் தோன்றினால் ஆகாயமென்றுஞ் சொல்லப்படும்.

2. மாணாக்கன் கண்ணாடியைத் தனக்கு முன்னால் வைத்துக் கொண்டு, அதன் மேல் சுவாசத்தை விட்டால் அது நாற்சதுரமாயிருந்தால் பிருதிவி என்றும்; அரையுருண்டை வடிவமாய் இருந்தால் அப்புவென்றும், முக்கோணமாய் இருந்தால், தேயுவென்றும் அறுகோண உருண்டை வடிவமாயிருந்தால் வாயுவென்றும் சிறுபுள்ளிகள் மாதிரியாயிருந்தால், ஆகாயமென்றும் அறிய வேண்டும்.

3. மாணாக்கன் சுவாசம் விடும்போது சுவாசம் நேராகப் போனால், பிருதிவி; கீழாகப் போனால், அப்பு, மேலாகப் போனால் தேயு, ஒழுங்கீனமாய்ப் போனால் வாயு, அடங்கிப் போனால், ஆகாசமென்று அறிய வேண்டும்.

4. பிருதிவி, மஞ்சள்; அப்பு, வெண்மை; அக்கினி, சிவப்பு; வாயு பச்சை; ஆகாயம், கறுப்பு என இவைகளைக் கண்டறிய வேண்டும்.

உணரும் விவரம்; ஒவ்வொரு வண்ணமுள்ள குண்டுகள் ஐந்தைத் தனக்குப் பின்னால் வைத்துக் கொண்டு பதுமாசனத்தில் உட்கார்ந்து தனது எண்ணத்தைக் கூட்டி, நிஷ்டையிலிருந்து கொண்டு, பஞ்ச தத்துவத்தின் எதையாகிலும் ஒன்றை நினைத்துப் பின்னால் இருக்கிற குண்டுகளில் ஒன்றை எடுப்பானாகில், அதுதான் எண்ணிய நிறம் போல இருந்தால், இதை அறிந்தவன் ஆகிறான். இவ்வண்ணமே ஒவ்வொரு குண்டையும் எடுப்பானானால், முற்றும் முணர்ந்தவனாகிறான்.

5. தித்திப்பு, பிருதிவி;
துவர்ப்பு அப்பு;
புளிப்பு தேயு;
உவர்ப்பு வாயு;
ஆகாயம் கார்ப்பாகும்.

6. சுவாசம் 12 அங்குலம் நீண்டால், பிருதிவி;
16 அங்குலம் நீண்டால், அப்பு;
4 அங்குலம் நீண்டால், தேயு;
8 அங்குலம் நீண்டால் வாயு;
மூக்கினுள்ளாகவே இருந்தால் ஆகாயம்.

7. அசையாத வேளை, பிருதிவி;
அசையும் வேளை அப்பு;
கஷ்டமான வேளை, தேயு;
நஷ்ட வேளை, வாயு;
பூசை வேளை, ஆகாயம்.

8. பிருதிவி தத்துவத்தில் ஆரம்பிக்கும் வேலை, கண்டிப்பாக இலாபத்தில் முடியும். ஜல தத்துவத்தில் அசையும்படியான வேலைகள் செய்யத் தக்கவை. ஏனென்றால் ஏதாவது ஒரு முடிவான வேலையை ஆரம்பித்தால் சீக்கிரத்தில் முடிந்து விடும்.

அக்கினி, வாயு, ஆகாயம் ஆகிய மூன்று தத்துவத்தில் எந்த வேலையை ஆரம்பித்த போதிலும் அது அபஜெயமாகவே முடியும். ஆகையால் மாணாக்கன் இவைகளை எந்தக் காலத்தில் உபயோகப்படுத்த வேண்டுமோ, அந்தக் காலத்தில் தத்துவத்தை அறிந்து உபயோகப்படுத்த வேண்டும்.

****

சுவாசாங்குலப் பிரமாண நிலை, இந்த மனித ஜன்மத்துக்குச் சாதாரணமாய்ச் சுவாசம் உள்ளே பத்தங்குலமும், வெளியில் பன்னிரண்டங்குலமும் போகும்: இதுவல்லாமல் நடக்கும்போது 24 அங்குலமும், ஓடும்போது 42 அங்குலமும் போகஞ் செய்யும் போதும் தூங்கும்போதும் 50, 60 அங்குலமும் போகும். சாப்பிடும்போதும் வாந்தியாகும் போதும் 18 அங்குலம் ஓடும். சாதாரணமாய் 12 அங்குலம் ஓடும். ஆகையால், இந்தச் சுவாசத்தை யோக அப்பியாசிகள் கவனிக்க வேண்டும். இவ்வளவு நீளமாகப் போகிற சுவாசத்தைத் தன்னால் கூடிய அளவு சிறிதாகக் குறைக்க வேண்டும்.

அது ஏனென்றால், இந்த மனித ஜன்மத்திற்குக் கலைகளாகிய சுவாசம் 12 அங்குலம் ஓடி, 4 அங்குலம் கழித்து, 8 அங்குலம் தான் நின்ற இடத்தில் நோக்கும். இப்படிச் சாதாரணமாக 4 அங்குலம் கழிந்ததனால் 120 வயதாகின்றது. *மக்கள் படிப்படியாகச் சுவாசத்தைப் பந்தனம் பண்ணுவதனால் நீண்ட ஆயுளை உடையவர்களாய் இருப்பார்கள்.*

சாதாரணமாய் மனிதர்களுக்கு உண்டாகிய சுயபுத்தி போதாது. ஆகையால் அனுபவமுடைய யோகிகளின் புத்தியைக் கேட்டு நடக்க வேண்டும், இல்லாவிட்டால் துன்பம் நேரிடும். இந்த மூன்று வாயுக்களையும், பஞ்ச தத்துவங்களையும், சுவாசத்தையும் கணிக்க அறிந்து கொண்டால், வரப்போவதைச் சொல்லலாம். தைரியத்தினால் சுறுசுறுப்பாய் மாணாக்கன் இந்த ராஜயோகத்தை அப்பியசிப்பானாகில், இரண்டு மூன்று வருஷத்தில் அறியப்படுகிறான்.

மரண நிலை அறிதல்: இடைகலை அல்லது பிங்கலையில் ஓர் இராத்திரி சுவாசம் முழுவதும் இடைவிடாமல் நடந்தால், அம்மனிதன் மூன்று வருஷத்தில் மரணமடைவான். இதே மாதிரியாகப் பிங்கலையில் மாறுதலில்லாமல் இரண்டு இராத்திரி இரண்டு பகல் இடைவிடாமல் நடக்கும் மனிதனுக்கு மரணம் இரண்டு வருஷத்தில் நேரிடும். இடைவிடாமல் ஒரு நாசியில் சுவாசம் மூன்று நாளைக்கு நடக்கும் மனிதனுக்கு ஒரு வருஷத்தில் மரணம் நேரிடும். இராத்திரி முழுவதும் இடைகலை பகல் முழுதும் பிங்கலையும் இடைவிடாமல் நடக்கும் மனிதனுக்கு ஆறு மாதத்தில் மரணம் நேரிடும். பிங்கலை தொடர்ச்சியாக இடைவிடாமல் ஒருபாகம் நடக்கும் மனிதனுக்குப் பதினைந்து தினத்தில் மரணம் நேரிடும். இடைகலையானது இதே மாதிரியாக ஒரு மாதம் நடந்தால் இந்த விதிப்பிரகாரம் முடியும்.

புருவத்தைப் பார்த்தால் தெரியாதவர்களுக்கு ஒன்பது நாளிலும், காது கேளாதவர்களுக்கு ஏழு நாளிலும் நக்ஷத்திரம் தெரியாதவர்களுக்கு ஐந்து நாளிலும், மூக்கு நுனி தெரியாதவர்களுக்கு, மூன்று நாளிலும், இரண்டு கண்களையும் கையால். அமுக்கினால் கண்ணீர் வராதவர்களுக்குப் பத்து நாளிலும் மரணம் நேரிடும் என்பது ஒரு வாக்கியம்.

யோகிகளுக்கு மேலே கூறிய அடையாளங்கள் நேரிட்டால், உடனே வாயுவைச் சோதித்து, அதைச் சரிப்படுத்திக் கொள்ளுந்தன்மை உண்டு.

யோகிகளுக்கு மரணம் நேரிடுவது கஷ்டம், யோகிகள் அப்பியாசத்தால் வாயுக்களையும் தத்துவங்களையும் உணர்ந்து முத்திரையைப் பின் தொடருவார்கள்.

பிறகு கேசரி முத்திரை எவ்வளவு காலம் ஜீவித்திருக்க வேண்டுமோ, அவ்வளவு காலம் ஜீவித்திருப்பார்கள். இந்த யோகி மூன்று வாயுக்களையும் அதிகமாகக் கவனித்து ஸ்திரப்படுத்த வேண்டும்.

சாதாரணமாய் மனிதர்களுக்கு இருபத்தோராயிரத்து அறுநூறு சுவாசம் நடக்கும் பக்ஷத்தில் 120 வருஷம் ஜீவித்திருக்கலாம்.

இப்போது மனிதர்கள் அறுபத்தோராயிரத்து அறுநூறு சுவாசத்துக்கு மேல் விடுகிறார்கள். எப்படியெனில், ஓடுவதனாலும்,

நடப்பதனாலும், தூங்குவதனாலும், போகம் செய்வதனாலும் சுவாசம் அதிகரிப்பதனால், இந்த நூற்றிருபது வயதுக்குக் குறைவு நேரிடுகின்றது.

சாதாரணமாய் மனிதர் விடும் சுவாசம் எவ்வளவு குறையுமோ, அவ்வளவு வயது ஏறி வரும். திடீரென்று சுவாசத்தைக் கட்டக் கூடாது.

மக்கள் அதிக விரைவாக ஓடக் கூடாது: அதிகம் சாப்பிடக் கூடாது: வேகமாய் நடக்கக் கூடாது: அதிக போகம் செய்யக் கூடாது.

****

வாசியையடக்கி அடையும் பலன்: இந்த யோக அப்பியாசிகள், சூரிய சந்திர கலைகளில் பிராண வாயு செல்லுங்கால், பிருதிவி, அப்பு, தேயு, வாயு என்னும் நான்கு தத்துவங்கள் வந்து விலகும். அப்போது அப்பிராண வாயு, ஆகாய தத்துவத்தில் அடையும், அச்சமயத்தில் சுவாசம் குறைந்து வரும். அக்காலத்துச் சுவாசபந்தனம் செய்யக்கூடும்.

அப்போது ஓர் அங்குலம் குறைந்தால், இவ்வுலகத்திச்சையினின்று சுவாதீனப்படுவான். இரண்டங்குலம் குறைந்தால், மனம் ஆனந்திக்கப்பட்டு ஞானச் செல்வமுண்டாகும். மூன்றங்குலம் குறைந்தால், விவேகியாவான். நாலங்குலம் குறைந்தால், தூர தேசத்தில் நடக்கும் நடவடிக்கைகளைச் சொல்லப்படுவான். ஆறங்குலம் குறைந்தால் ஆகாசத்திலுள்ள சகலமும் கண்டுணர்வான். ஏழுங்குலம் குறைந்தால், சரீரம் காயசித்தி பெறுவான். எட்டங்குலம் குறைந்தால், அணிமாதி சித்திகளை அடைவான். ஒன்பதங்குலம் குறைந்தால், நவகண்டங்களில் சஞ்சரிப்பான். பத்தங்குலம் குறைந்தால், ஒரு தேகத்தை விட்டு மற்றொரு தேகத்தில் பிரவேசிப்பான். பதினோரு அங்குலம் குறைந்தால், தனது ஆன்மாவைக் கண்டு வசனிப்பான். பன்னிரண்டங்குலம் அடங்கும் சுவாசமானது, உதித்த இடத்திலேயே சுழன்று கொண்டிருக்கிறபடியால், அந்தப் பரமயோகி நெடுங்காலம் அன்ன பானாதிகளை நீக்கி, அவாவற்றிருப்பான். சமாதியிலுட்கார்ந்து மாணாக்கன் இடகலையைப் பிங்கலையிலும் பிங்கலையை இடகலையிலும், மாற்றக் கற்றுக்கொண்ட பின், பகல், முழுவதும் இடகலையிலும், இரவில் அதை அடைத்து விட்டுப் பிங்கலையிலும் நடத்தப்படுவான்.

இதற்காகப் பழம்பருத்தியிற் கொஞ்சம் சுத்தம் பண்ணி வைத்துக் கொண்டு, இடகலை நடத்த வேண்டியிருந்தால் வல நாசியிலும், பிங்கலை நடத்த வேண்டியிருந்தால் இட நாசியிலும் அடைத்துவிட வேண்டும். இப்படிச் சரிவர நடந்தால், மனிதர்கள் நூற்றிருபத்தைந்து ஜீவித்திருக்கலாம்.

மற்றச் சங்கதிகளைச் சிந்திக்கும பக்ஷத்தில் யோகிகளுக்கு வயதே இல்லை.

ஈந்த விதிகள் எப்படியிருந்தாலும், இந்த விதிகள்யாவும் கிருகஸ்தர்களுக்காகவே ஏற்பட்டிருக்கின்றன.

இதை அப்பியாசிகள் எப்போதும் இவ்விதிப் பிரகாரம் நடத்துவார்கள். அப்போது தேக சௌக்கியமும், நீண்ட ஆயுளும், மன ஒடுக்கமும், சித்த சாந்தியும் உடையவர்களாய் இருப்பார்கள்.

❖❖❖❖❖❖

உ

குருவே துணை

ஞான சரநூல்.

உமையவளுக்குச் சங்கரனார் திருவுளமகிழ்ந்து அருளிச்செய்தது

காப்பு
நேரிசை வெண்பா.

வாழ்த்துவா முள்ளம் வருவிப்பாம் நெஞ்சமுன்பிற்
சூழ்த்துவா மேன்மேற் றுதிசெய்வாம் - தாழ்த்த
பரநூலை முற்றும் பாலித்தருள்கூட்டுஞ்
சரநூலை யோதமுன்னோன் தாள்.

நாமகள் துதி.

உமைமாதுக் கீச னுரைத்த சரநூலின்
அமையாப் பொருளும் அமையு மெம்மையாள்
புவிமடந்தை பூமடைந்தை போத மெய்ஞ்ஞானக்
கவிமடந்தை யிக்கலைக் கோர் காப்பு.

அவையடக்கம் வெண்பா

செய்ய மனந்துணிந்து சீர்முன்னோர் சொற்சரநூல்
ஐயமற வோத அருள்புரியைங் கையரென்றென்
முன்னிற் பாரென்று மொழிந் தேன்போற் கற்றுணர்ந்தோர்
மன்னிப்பா ரென்றுமனு.

வாழ்த்துவாம் - முன்னம் வருவிப்பாம் - நெஞ்சம் முன்பின் சூழ்த்துவாம் - மேன்மேல் துதிசெய்வாம் - தாழ்த்த பரநூலை முற்றும் அறப்பாலித்து அருள் கூட்டும் சரநூலை ஓத முன்னோன் தாள்

உமை மாதுக்கு ஈசன் உரைத்த சரநூலில் அமையாப் பொருளும், அமையும் பொருளும் எமையாளும் புவிமடந்தை பூமடந்தை போத மெய்ஞ்ஞானக் கவிமடந்தை இக்கலைக்கு ஓர் காப்பு.

செய்ய மனம் துணிந்து சீர்முன்னோர் சொல்சரநூல் ஐயமற ஓத அருள்புரி ஐங்கையர் என்றன் முன் நிற்பர் என்று மொழிந்தேன். போற் கற்றுணர்ந்தோர் என்று மனு.

இந்நூற்பயன்
ஆசிரியவிருத்தம்

சந்திரப்பா னிலக்கணமுங் கோளும் நாளும்
தயங்கிய பக்கங் கரணம் யோகம் வாரம்
வந்துசொல்லுஞ் சோதிடத்தை அறியா தார்கள்
மனநினைவால் அறியும் வகை யுளதோ யென்ன ?

இந்த வுடலுயிர் நிலையை அறியா தாருக்
கியாமறிய இயம்பும்வகை யாதொவென்னிற்
பைந்தோடியே யாம்சொல்லுஞ் சரநூற்றன்னைப்
பரிந்து நீபாரென்று பரமன் சொல்வான்.

இந்த உடல் உயிர்களின் நிலையை அறியாதவர்கள் அறிந்துக் கொள்ளத்தக்க வகை யாதென்றால் நாம் சொல்லுகின்ற சரநூலை நீ பரிவுடன் கவனிப்பாயாக என்று கூறிப் பரமன் கூறுகிறார்.

சூரிய சந்திரர்கள் அமைந்துள்ள முறையும் நாள் நட்சத்திரம், பக்கம், கரணம், யோகம், வாரம் இவைகளைக் கொண்டுதான் சோதிடத்தை அறிய வேண்டும். சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி இந்த கிரகங்கள் ராசி மண்டலத்தில் அமைந்துள்ள விதம் சோதிடத்திற்கு ஆதாரமாகும். நாள் என்பது ஒவ்வொரு நாளும் சந்திரன் நிற்கும் நட்சத்திரத்தை குறிக்கும். பக்கம் என்பது சந்திரன் சூரியனிலிருந்து விலகிச் செல்லும் வளர்பிறை காலத்தையும் சூரியனை நோக்கி நெருங்கிச் செல்லும் தேய்பிறை காலத்தையும் குறிப்பதாகும். கரணம் யோகம் என்பவை சந்திரனுக்கும் சூரியனுக்கும் உள்ள இடைவெளியைக் கொண்டு அறியப்படுபவை இக்காரணங் களால் சோதிடம் என்பது கிரகங்களின் நிலையை வைத்து அறியப்படும் ஒரு அருமையான அறிவியல் கலை என்பது நன்கு தெரியவரும்.

கோள்களுக்கும் மனித வாழ்க்கைக்கும் உள்ள தொடர்பை விளக்குவதே சோதிட சாஸ்திரம். ஆனால் கிரகங்களின் நிலையை எல்லோரும் அறிந்து வைத்திருக்க முடியாது. பஞ்சாங்கத்தை பார்த்து தெரிந்து கொள்ளவும் எல்லோராலும் முடிவதில்லை.

தவிர, போகிற இடத்திற்கெல்லாம் பஞ்சாங்கக் கட்டைத் தூக்கிக் கொண்டு போகவும் முடியாது. இதையெல்லாம் எண்ணிப் பார்த்த உமையன்னை பரம்பொருளாகிய சிவபெருமானைப் பார்த்து ஜோதிடத்தை அறியாதவர்களும் நன்மை தீமைகளைத் தெரிந்துக் கொள்ள வகை செய்யக்கூடிய வழி ஏதாவது இருக்கிறதா, என்று கேட்க சிவபெருமான் புன்னகை புரிந்தபடி அப்படிப்பட்ட சாஸ்தி ,, ஒன்று உள்ளது. அதற்கு சரநூல் என்று பெயர். அதை உனக்கும் கூ..கிறேன். கேட்பாயாக! என்று கூறிச் சொல்லலானார்

சரம் என்றால் மூச்சு. நாம் சுவாசிக்கும் மூச்சுக்காற்று சில சமயங்களில் வலது நாசித்துளை வழியாகவும், சில சமயங்களில் இடது நாசித் துளை வழியாகவும் மற்றும் சில சமயங்களில் பொதுவாகவும் இயங்குவதைக் காணலாம். இதையே சரம் என்ற சொல் குறிப்பிடுகின்றது.

இடது நாசி வழியாக இயங்கும் மூச்சு இடகலை என்றும், வலது நாசித் துளை வழியாக இயங்கும் மூச்சு பிங்கலை என்றும், பொதுவாக இயங்கும் மூச்சு சுழினை என்றும் பெயர் பெறும். இந்த நாடிகள் இடகலை, பிங்கலை சுழினை நாடிகள் எனப்படும். இந்த நாடிகளில் மூத்த, அதாவது சரங்கள் இயங்கும் வகையைக் கொண்டு நன்மை தீமைகளை அறியும் முறையே சரநூல் பார்ப்பது என்றப் பெயரால் விளங்குகிறது.

மூச்சைக்கட்டுப்படுத்தி, மூச்சுப் பயிற்சி செய்து, மூச்சு எப்படி இயங்குகிறது என்பதை அறிந்தவர்களாலேயே சரம் பார்க்க முடியும். இதைப் பயிற்சி மூலம் யார் வேண்டுமானாலும் தெரிந்து கொள்ள முடியும். ஆனாலும் எல்லோரும் முயற்சி செய்வதில்லை.

சரம் பார்க்கத் தெரிந்தவர் தம்மை நோக்கி வருவதையும் நிற்பதையும் அவருடைய மற்ற செயல்களையும் கொண்டே, அவர் வந்த நோக்கம் அது நல்லதா? கெட்டதா? என்பதையும் அது வெற்றிகரமாக முடியுமா? அல்லது தோல்வியில் முடிந்து துன்பத்தை உண்டாக்குமா? என்பதையும் தெரிந்து கொள்ள முடியும்.

வேறு புறப்பொருள் எதனுடைய உதவியும் இல்லாமல் நன்மை தீமைகளை உணர்த்தக்கூடிய ஒரு அரிய கலையே சரம் பார்ப்பதாகும்.

சொல்லாரும் நெடுங்கயிற்றின் வருண மான
சூஸ்த்திரனாற் றுவக் கெனுமாச் சிர்மந் தன்னில்
கல்லாரு மூக்கணாங் கயிறு கோத்து
நலந்தீங்காய் வருகின்ற நஞ்சுட் கொண்டு
பொ்லாத காலப்பாம் புண்டு உமிழ்ந்து
பூதலத்திற் பிறந்திறந்து போவரேனும்
எல்லாரும் யாஞ்சொல்லுஞ் சரநூல் தன்னை
இகழாதார் சுரர் மூகர் இகழ்வோர் தாமே. (2)

சொல்லாரும் நெடும் கயிற்றின் வருணமான சூஸ்திரனார் துவக்கு எனும் ஆசீர்மம் தன்னில் நல்லாரும் மூக்கணாங்கயிறு கோர்த்து நலம் தீங்காய் வருகின்ற நஞ்சு உட்கொண்டு பொல்லாத காலப் பாம்பு உண்டு உமிழ்ந்து பூதலத்தில் பிறந்து இறந்து போவாரேனும் எல்லாரும் சரநூல் தன்னை இகழாதார் சுரர் மூகர் இகழ்வோர் தாமே.

நெடுங்கயிற்றின் வருணமான சூஸ்திரனார் என்பது முடிவே இல்லாத நீளமான கயிறு போல் நீண்டு வருகிற வருணாசிரம தர்மத்திற்கு உட்பட்ட நான்கு வருணங்களை.

நல்லாரு மூக்கணாங்கயிறு என்ற வரிகள் எருதுக்கு மூக்கணாங்கயிறு போல ஒருவன் செய்கின்ற நன்மை தீமைகளால் விலைகிற புண்ணிய பாவங்கள் அவனுடைய வாழ்க்கையை பிணைத்து ஆட்டுவிக்கின்றன என்பதைக் குறிப்பதாம்.

பொல்லாத காலப்பாம்பு என்ற வரிகள் காலம் என்கின்ற பாம்பு மனித உயிர்களைக் குடித்தும். பிறகு மீண்டும் பிறப்பித்தும் வருகின்ற தன்மையை குறிப்பதாயிற்று. காலத்தை பாம்பிற்கு ஒப்பிட்டது அதன் அழிக்கும் தன்மையை குறிப்பதற்காம்.

சுரர் - தேவர்கள்
மூங்கர் - ஊமைகள்

மனித சமுதாயம் பிராமணர், சத்திரர், வைசியர், சூத்திரர் என நான்கு வருணங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. இதை சாதிப் பிரிவுகளாக மேல்ச்சாதி, கீழ்ச்சாதி பிரிக்கப்பட்டுள்ளதாக தற்காலத்தவர்கள் நினைக்கின்றனர். ஆனால் உண்மை அதுவன்று மனித சமுதாயத்தின்

அமைதியான வாழ்விற்கு நான்கு வகையான தொழில்கள் தேவைப்பட்டன. அறிவைத் தேடுவதும், அதைப் பிறர்க்குக் கற்றுக் கொடுப்பதும் ஒன்று. வெளியிடங்களிலிருந்து வரும் பகைவர்களையும் உள்ளேயே இருக்கும் பகைவர்களையும் வென்று அடக்கி சமுதாயத்தை காப்பாற்ற வேண்டிய கடமை ஒன்று, சமுதாயத்தில் மனித வாழ்க்கைக்கு தேவையான பொருள்களைக் கொண்டு வந்து சேர்ப்பதும் முறையாக விநியோகிப்பதும் எப்பொருளுக்கும், எக்காலத்தும் தட்டுப்பாடு ஏற்படாமல் பார்த்துக் கொள்வதும் ஆகிய கடமை ஒன்று, வாழ்க்கை வசதிகளுக்கான பொருள்களைச் செய்வதும் அவை சீர்கெடாமல் பராமரிப்பதும் ஆன தொழில்களைச் செய்வதும் ஒன்று ஆகிய இந்த நான்கு தொழில்களும் ஒழுங்காக நடை பெற்றால் தான் சமுதாயத்தில் அமைதியான வாழ்க்கை நடைபெற முடியும். இதற்காகவே மனித குலம் நான்குப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. இந்த நான்கு குலங்களில் உயர்வு, தாழ்வுகள் ஆரம்பக் காலத்தில் இருக்கவில்லை. ஆனால் பிற்காலத்தில் நடைமுறைப் பழக்கங்களால் உயர்வு தாழ்வு தோன்றி வலுவடைந்துவிட்டன.

இந்த நான்கு பிரிவு மக்களுக்கும் பொதுவாக மேல்ச்சாதி கீழ்ச்சாதி என்றில்லாமல் மூச்சு இயங்கிக் கொண்டிருக்கிறது. எருதின் மூக்கில் மாட்டப்பட்ட மூக்கணாங்கயிறு அதைக் கட்டுப்படுத்தி நடத்துவது போல மனிதனின் மூக்கில் இயங்கும் சரம் நன்மை தீமைகளை உணர்ந்து நடக்க உதவுகிறது.

காலமெனும் பாம்பு உண்பதும், உமிழ்வதுமான செயல்களில் பிறந்தும் இறந்தும் போகின்ற மனிதர்களிலே இந்த சரத்தின் தன்மையை உணர்ந்துக் கொண்டவர்கள் தேவர்களுக்கு ஒப்பாவார்கள். உணராதவர்களை ஊமைகள் என்றே சொல்லி விடலாம்.

சரம்பார்க்க ஆசனவிதி கூறுகின்றார்

மூங்கிற்பாய் மிடி கல்லுநோய் மண் துக்கம்
முறிபலகை நன்மையிலை முடைந்த புல்லு
நீங்கிவிடுங் கீர்த்தி தாழை மனநடுக்கம்
நிகரில்கலைத் தோல் ஞானம் நிறைபுலித்தோல்
ஓங்கிய செல்வம் வீடு முன் குசைப்புல்
ஒளிர் தூசு நன்மை உயர் படர்தா னென்று
தூங்கிய தூக் கம்போக்கும் நன்மை யாகத்
துலங்கியவா தனத்திருந்து தோகை சொல்வாம். (3)

மூங்கில்பாய் மிடி - கல்லுநோய் - மண் துக்கம் - முறி பலகை நன்மையில்லை - முடைந்த புல்லு நீங்கிவிடும் கீர்த்தி - தழை மனம்நடுக்கம் - நிகரில் கலைத்தோல் ஞானம் - நிறை புலித்தோல் ஓங்கிய செல்வம், வீடு - முன்குசைப்புல் ஒளிர்தூசு நன்மை - உயர் படர் தான் என்றும் தூங்கிய துக்கம் போக்கும் நன்மையாகத் துலங்கிய ஆசனத்திலிருந்து தோகை சொல்வாம்.

மிடி	-	வறுமை
முறிபலகை	-	பலகையிலிருந்து துண்டாக்கப்பட்டது
முடைந்தபுல்	-	புல்லை முடைந்து உண்டாக்கிய பாய்
தழை	-	தழைகளால் ஆன ஆசனம்
கலைத்தோல்	-	மான்தோல்
வீடு	-	மோட்சம்
குசைப்புல்	-	தர்ப்பைப் புல்
உயர் படர்	-	இரத்தின கம்பளம்
துலங்கிய	-	மேற்கூறியவற்றால் விளங்கானின்ற
தோகை என்றது	-	உமையவளை முன் நிறுத்திக் கூறியதாம்.

சரம் பார்க்கும் விதிகளை எல்லோரும் அறிந்து கொண்டிருப் பதில்லை. எல்லோரும் மூச்சு வாங்கி, விட்டுக்கொண்டிருந்த போதிலும் அதனால் நன்மை தீமைகளை அறிவதென்பது ஒரு தனிக் கலை. அது இயற்கையிலேயே சிலருக்கு நன்றாக வரக்கூடும். அப்படிப்பட்டவர் இயல்பாகவே தம்முடைய மூச்சின் தன்மையறிந்து நன்மை அல்லது தீமை நடக்கப் போவதை அறிந்துகொள்ள முடியும். அப்படிப்பட்டவர்க்கு சரம் பார்ப்பவர் என்ற ஒரு தனிச் சிறப்பும் ஏற்பட்டு விடுகிறது.

சரம் பார்ப்பவர் எப்படிப்பட்ட ஆசனத்திலிருந்து சரம் பார்க்க வேண்டுமென்பதை இந்தப் பாடல் கூறுகின்றது. மூங்கில் தடுக்காலான பாய் வறுமையையும் கல் நோயையும் குறிப்பிடும். வெறும் மண் தரை துக்கத்தையும், உடைந்த பலகை தீமையையும் குறிப்பிடும் கோரைப்பாய் போன்ற புல்பாய்கள் புகழை நாசம் செய்யும். மனதில் அச்சத்தையும் உண்டாக்கும். தழைகளாலான ஆசனம் மன நடுக்கத்தையுண்டாக்கும். மான்தோல் ஞானத்தைக் கொடுக்கும். புலித்தோல் செல்வத்தை உண்டாக்கும். தர்ப்பை ஆசனம் மோட்சத்தைக் கொடுக்கும். வெள்ளைத்துணி தீமை இல்லை. இரத்தின கம்பளம் அல்லது சித்திரங்கள் அமைந்த துணி போன்ற ஆசனம் மேன்மை உண்டாக்கும்.

இவற்றில் நன்மைதரத்தக்க ஆசனம் ஏதாவது ஒன்றின்மேல் அமர்ந்து சரம்பார்க்க வேண்டும்.

சரம்பார்க்க மார்க்கம் கூறுகின்றார்

சொல்லியவா தனங்கள் பல; அவற்றுள் ஒன்றில்
துய்யபங்க யாதனமாயிருந்து தோன்றும்
அல்ல லறுத் தேகமன மாக்கி ஒட்டி
யாணபந்த பிராணாயா மங்கள் பண்ணி
எல்லையிலுந் தியின்கீழா மெழுத்தைப் பற்றி
எழுபத்தீ ராயிரநா டியிலீ ரைந்து
நல்லனவாம் அதில்மூன்று நாடி யோடும்
நலந்தரும்பே ரவ்வெழுத்தை நவிலப்! பாரே? (4)

சொல்லிய ஆதனங்கள் பலவற்றுள் துய்ய பங்கய ஆதனமாய் இருந்து - தோன்றும் அல்லல் அறுத்து ஏக மனமாக்கி ஒட்டியாண பந்த பிராணாயாமங்கள் பண்ணி.

எல்லையில் உந்தியின் கீழாம் எழுத்தைப் பற்றி எழுபத்தீராயிரம் நாடியில் ஈரைந்து நல்லனவாம் அதில் மூன்று நாடியோடு நலந்தரும் பேர் அவ்வெழுத்தை நவிலப்பாரே.

ஆசனங்கள் பல உண்டு அவற்றுள் பத்மாசனமே மேலானது. மனதில் வரும் துன்பங்களை அகற்றி ஏகமனதாக இருந்து வயிற்றை இருக்கி பிராணாயாமங்கள் செய்து உந்தியின் கீழாய் இருந்து தோன்றும் எழுத்தைப்பற்றி உடம்பில் இயங்குகின்ற 71 நாடிகளில் முக்கியமான 10 நாடிகளில் மூச்சு இயங்கும்படியான இடகலை, பிங்கலை, சுழினை என்கின்ற மூன்று நாடிகளில் மட்டுமே ஓடக்கூடிய சரம் பற்றி நாம் கூறத் தெரிந்து கொள்வாயாக. (உந்தியின் கீழ் இருந்து தோன்றும் எழுத்து ஓம்).

சரம் பார்ப்பவர் முன்பாட்டில் சொல்லப்பட்ட ஆசனங்களில் ஒன்றின் மேல் பத்மாசனத்தில் அமர்ந்து கொள்ள வேண்டும். யோகாசனங்கள் பலவற்றுள்ளும் பத்மாசனமே சிறந்தது. பத்மாசனத்தில் வீற்றிருக்கும் போது சுலபமாக திரும்பவும், பார்க்கவும், பேசவும் முடியும். அதனாலேயே அது தேர்தெடுக்கப்பட்டது.

தவிர சரம் பார்க்கும் நேரத்தில் சரம் பார்ப்போர் மனதில் வேறு நினைவுகள் இல்லாமல் இருக்க வேண்டும். மனம் களங்கம் இல்லாமல் இருக்கும்பொழுதே உண்மையான பலனைச் சொல்ல முடியும்.

சரம் பார்ப்பவர் அதிகாலையில் எழுந்து காலைக் கடன்களை முடித்துக் கொண்டு பிராணாயாமம் செய்து பின் குளித்து லேசான ஆகாரம் அருந்திய பின் அமர்ந்து சரம் பார்ப்பது நல்லது.

மனித உடம்பில் 72000 நாடிகள் ஓடுகின்றன. அவற்றில் 10 நாடிகளே அறிந்துகொள்ளக் கூடியவை. அவற்றிலும் எப்பொழுதும் இயங்கிக் கொண்டிருப்பது மூன்று நாடிகளே ஆகும். அந்த மூன்று நாடிகளே சரம் பார்ப்பதற்குத் துணை புரியக் கூடியனவாகும்.

நவ்விவிழி யாய் இதய கமலந் தன்னில்
நன்றாக அசவையுயிர் நடக்கும் போதுஞ்
செவ்வையுடன் மீளும்போ திருபத் தோரா
யிரத்தறுநூ றதுசெப்பி லொருநா ளாகும்
அவ்வியல் மூலாதாரஞ் சுவாதிட்டானம்
மணிபூரம் அனாகதம்விசுத்தி ஆஞ்ஞை
பவ்வமற யாஞ் சொல்லுஞ் சரநூல் தன்னைப்
பார்ப்பவரே பராபரத்தில் பயன்பார்ப்பாரே. (5)

நவ்வி விழியாய் இதய கமலம் தன்னில் நன்றாக அசவை உயிர் நடக்கும் போதும் செவ்வியுடன் மீளும் போதும் 21600 ஐ - செபிக்கில் ஒரு நாளாகும். அவ்விய மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்னை, பவ்வம் அற யாம் சொல்லும் சரநூல் தன்னைப் பார்ப்பவரே பராபரத்தின் பயன்பார்ப்பாரே.

நவ்வி விழி	-	மான்விழி
அசனை உயிர் நடக்கும்	-	அசவா மந்திரகதியாக உயிர் மூச்சாக நடக்கின்ற தன்மையால்
நடக்கும்போதும்		
மீளும்போதும்	-	மூச்சு உள்ளே வாங்கிவெளியே விடுகின்ற இருகாலத்திலும்
செவ்வி	-	செம்மையாக

ஒரு நாளைக்கு இருபத்தோராயிரத்து அறுநூறு முறை சுவாசம், நடைபெறும் போது மூலாதாரம் சுவாதிட்டாணம் மணிபூரகம், அநாகதம், விசுத்தி ஆக்ஞை என்ற ஆறு ஆதாரங்களிலும் இயங்குகிறது.

பவ்வம்அற	-	குற்றம் நீங்கும் படியாக.

மனிதன் ஒரு நாளில் இருபத்தோராயிரத்து அறுநூறு (21600) முறை மூச்சு வாங்கி விடுகிறான். இது ஒரு நாளில் அறுபது நாழிகை நேரம் முழுவதும் நடைபெற்றுக் கொண்டே இருக்கிறது. மூச்சுக் காற்றானது மனித உடலில் உள்ள ஆறு ஆதாரங்களிலும் இயங்குகிறது. அந்த ஆறு ஆதாரங்கள் மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை என்பவையாகும்.

அவ்வாறு இயங்கும் சரத்தின் தன்மையை அறியக் கூடியவர் பராபரமாகிய எங்கும் நிறைந்த பரம்பொருளின் சித்தத்தை உணர்ந்தவர் ஆவார் எனக் கொள்ள வேண்டும்.

பராபரத்தின் பயன் பார்ப்பார் என்று கூறியது செயல் நடைபெறுவது இறைவன் திருவருளாலேயன்றி மனிதன் நினைக்கிறபடி அல்ல என்பதால் சரம் சொல்பவர் நல்லதைச் சொன்னாலும், கெட்டதைச் சொன்னாலும் அவர் தமது விருப்பப்படி கூறவில்லை என்பதை தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகதான்.

பார்க்கிலிடை யிடமதுவே திங்களாகும்
பகலவனாம் பிங்கலையே வலம தாகும்
ஏற்கவுரை சுழுமுனைதா னடுவாம் அங்கி
இடையான சந்திரனே அமுத மாகும்
தீர்க்கமுடன் பொருள் விளைக்கும் கரிய வண்ணம்
திரராசி யாமவனே செப்புங் காலை
வேற்றடங்கண் மடமாதே விரும்பிக் கேளாய்
விரிவாக இவையனைத்தும் விளங்கச் சொல்வாம். *(6)*

பார்க்கில் இடை இடம் அதுவே திங்களாகும் - பகலவனாம் பிங்கலையே வலமதாகும். ஏற்க உரை சுழிமுனைதான் நடுவாம் அங்கி இடையான சந்திரனை அமுதமாகும் - தீர்க்கமுடன் பொருள் விளைக்கும் கரிய வண்ணம் திர ராசியாம் அவனே செப்பும் காலை-வேல் தடம் கண் மடம் மாதே - விரும்பிக் கேளாய் விரிவாக இவை அனைத்தும் விளங்கச் சொல்வாம்.

அங்கி	- நெருப்பு
சந்திரனே அமுதமாகும்	- சந்திரனுடைய கலைகள் அமிழ்தத்தைப் பொழியனவாம்.

இடகலை என்பது சந்திரனுடைய கலையாகும். பிங்கலை சூரியகலை, சுழினை இவற்றுக்கு நடுவானது. இது அக்கினியின் அம்சமாகும்.

சந்திரன் அமுதம் எப்பொருளையும் உண்டாக்கக் கூடியது. ராசிகளில் ஸ்திரராசி. கருநிறம் உடையது.

சந்திரனே அமுதமாகும் என்றதால் இட கலையின் சிறப்புக் கூறப்பட்டது. எல்லாப் பொருள்களையும் உண்டாக்கக் கூடியது என்றதால் மேலும் அதன் சிறப்பு நன்கு விளங்குகிறது. அழிக்கும் தன்மை அதாவது கெடுதல் இல்லாதது இடகலை. அதுவே ஸ்திர ராசியும் ஆம்.

இதுவும் அது

சொல்லுங்காற் கதிரவனுஞ் சகவி யாபி
சுத்தநிறம் வெண்மைசர ராசியாகும்
கொல்லுமெலாக் கருமங்கள் கொடிய வன்னி
கூறுங்கால் நிறஞ்சிவப்பாம் உபய ராசி
நல்லவிடை தெரிந்துணிற் றிங்கள் பெண்ணாம்
நலம்பயில்பிங் கலைகதிரோன் புருட னாகும்
செல்லுமிகு பதின்காத வழிக்கப் பாலாந்
திசைக்கிடமாய்ச் செல்வலமூர் சேரக் கேளே. (7)

சொல்லுங்கால் பார்க்கவனும் சக வியாபி - சுத்த நிறம் வெண்மை - சரராசியாகும் - கொல்லும் எலாக் கருமங்கள் கொடிய வன்னி கூறுங்கால் நிறம் சிவப்பாம், உபய ராசி - நல்ல விடை தெரிந்து உணர்கில் திங்கள் பெண்ணாம் - நலம் பயிர் பிங்கலை கதிரோன் புருஷனாகும் - செல்லும் இருபதின் காத வழிக்கு அப்பாலாம் திசைக்கு இடமாய்ச் செல் வலம் ஊர் சேரக்கேளே.

பார்க்கலன் - சூரியன்

சகவியாபி - எல்லா விடத்தும் நிறைந்திருப்பவன். கொல்லும் எலாக் கருமங்கள்

கொடிய வன்னி - அழிக்க கூடிய எல்லா காரியங்களையும் செய்கின்ற கொடியதான அக்னி

மேற்கூறிய பாடல்களிலிருந்து

சந்திரன் - திரராசி - இடகலை - அமுதம் - நிறம் கருப்பு - ஆண்
சூரியன் - சரராசி பிங்கலை சகவியாபி - வெண்மை
அக்கினி - உபயராசி சுழிமுனை-அழித்தல்-நிறம் பொன்-சிவப்பு அலி.

சூரியனைப் பற்றிக் கூறுவதென்றால் அவன் சர்வ வியாபி. எங்கும் நிறைந்தவன் என்று கூற வேண்டும். பரிசுத்தமான வெண்மை நிறமுடையவன். இராசிகளில் சரராசி.

சுழினை பற்றி கூறுவதென்றால் அது அக்கினியின் தன்மையுடையது. எல்லாவற்றையும் அழிக்கக் கூடியது. சிவப்பு நிறமுடையது.

சந்திரன் பெண்பால், இடகலை ஸ்திரராசி
சூரியன் ஆண்பால், பிங்கலை சரராசி
அக்கினி அலி சுழினை உபயராசி

பிரயாணம் செய்பவன் இருபது காத தூரத்திற்கு அப்பால் செல்ல வேண்டுமென்றால் இடது சரம் (சந்திர கலை) நடக்கும் போது புறப்பட்டு வலது சரம் (சூரிய கலை) நடக்கும் போது போய்ச் சேர வேண்டிய ஊரில் சென்று சேர்வது உத்தமம்.

சந்திரனிலக்கணமும் அச்சந்திரன் நடக்கும்போது இன்னவை செய்யலாமென்பதுங் கூறுகிறார்.

கேட்கிலிடந் தூதாடை யணிபொன் பூணல்
கிளருமணம் அடிமைகொளல் கீழ்நீர் காண்டல்
வாழ்க்கைமனை யெடுத்தல்குடி புகுதல் விற்றல்
மன்னவரைக் காணலுண்மை மருவல் சாந்தி
வேட்கை தெய்வப் பிரதிட்டைசுரம் வெறுப்புத் தீர்த்தல்
வித்தைபெறல் தனம்புதைத்தல் மிகவும்ஈதல்
நாட்கமல மலர்முகத்தாய் நரகந் தீர்த்தல்
நன்றேயா மிவையெல்லாம் நயந்து பாரே. (8)

கேட்கில் இடம் தூது - ஆடை அணி பொன் பூணல் - கிளர்க்கு மணம் அடிமை கொளல் - கீழ் நீர் காண்டல் - வாழ்க்கை மனை எடுத்தல் குடிபுகுதல் விற்றல் - மன்னவரைக் காணல் - உண்மை மறுவல் - சாந்தி

வேட்கை தெய்வ பிரதிட்டை - சுரம் வெறுப்பு தீர்த்தல் - வித்தை பெறல் - தனம் புதைத்தல் - மிகவும் ஈதல் - நாள் கமல மலர் முகத்தாய் நரகம் தீர்த்தல் நன்றே ஆம் இவையெல்லாம் நயந்து பாரே.

நாள் கமல மலர் - ஒளி உடைய தாமரை மலர்

நரகம் தீர்த்தல் - ஒருவன் நரகத்தை அடைவதற்கான பாவங்களைச் செய்திருந்தால் அவற்றிலிருந்து விமோசனம் பெறச் செய்தல்.

இடது நாசியில் சந்திரகலை நடக்கும்போது எந்தக் காரியங்கள் செய்தால் நன்மையளிக்கும் என்பதை இப்பொழுது கூறுகிறேன். கேட்பாயாக!

1. தூதுபோதல் - தூது அனுப்புதல்
2. புதிய ஆடை ஆபரணங்கள் அணிந்து கொள்ளுதல்
3. திருமணம் செய்து கொள்ளுதல் - தாலி கட்டுதல்
4. ஒருவனை அடிமையாகப் பெற்றுக் கொள்ளுதல்
5. கிணறு, குளம், ஏரி முதலானவை வெட்டுதல்
6. புதிய மனை, வீடு வாங்குதல் - குடிபோதல்
7. ஒரு பொருளை விற்றல்
8. அரசர் அதிகாரிகள் பிரமுகர்களைக் காணுதல்
9. உரிமை பட்டயம் பெறுதல் (அல்லது) கொடுத்தல்
10. நோய் தீர்த்தல்
11. ஒருவருக்கொருவர் உண்டாகியிருக்கும் வெறுப்பு, பகை முதலானவற்றை தீர்த்து வைத்தல் - சமாதானம் செய்தல்
12. கற்றல் - கற்றுக் கொடுத்தல்
13. தனம், தானியம் முதலானவற்றை சேர்த்து வைத்தல் பொருளைப் புதைத்து வைத்தல்
14. தானம் கொடுத்தல் பாவ விமோசனம் செய்தல் மேற்கூறிய காரியங்கள் யாவும் நன்மை பயக்கும்.

சூரியனிலக்கணமும், சூரியன் நடக்கும்போது இன்னவை செயலாமென்பதுங் கூறுகிறார்.

பார்க்கில்வலம் உபதேசம் வித்தை சேவை
படையோட்டல் பயிர்செட்டுக் களவு சூது
போர்க்கவொணா வழக்குக்கரி பரிதே ரூர்தல்
பிறங்குமெழுத் திடுதல்சங் கீதம் பாடல்

வார்த்தைபகை பக்கங்கோள் பசாசு தீர்த்தல்
மந்திரஞ்சா தித்தல்மருந் துணலு றங்கல்
கோத்தபுன லாடல்கொல் விடங்கள் தீர்த்தல்
கொடும்பிணிதம் பனபோகங் குறிக்குங் காலே. *(9)*

பார்க்கில் வலத்து, உபதேசம், வித்தை, சேவை, படையோட்டல், பயிர், செட்டு, களவு, சூது, போக்கவொணா வழக்கு உடைத்தல், கரி, பரி, தேர், ஊர்தல், பிறங்கும் எழுத்திடுதல் - சங்கீதம் பாடல் - வார்த்தை பகை பங்கம் - கோள் பசாசு தீர்த்தல் - மந்திரம் சாதித்தல் - மருந்துண்ணல் - கோத்த புனல் ஆடல் - கொல் விட்ங்கள் தீர்த்தல் - கொடும் பிணித்தம்பனம் - போகம் குறிக்கும் காலே.

கரி	-	யானை
பரி	-	குதிரை
தேர்	-	ரதம்
ஊர்தல்	-	சவாரி செய்தல்
பிறங்கும் எழுத்து	-	நிலைத்திருக்கக் கூடிய எழுத்து கல்வெட்டு பட்டயம்
பகைபங்கம்	-	பகை நீங்கச் செய்தல்
புனல் ஆடல்	-	புண்ணிய தீர்த்தங்களில் நீராடல்
கொல் விடங்கள் தீர்த்தல்	-	கொல்லக்கூடிய நஞ்சுகளை முறித்தல்

கொடும்பிணித் தம்பனம் - கொடிய நோயானது தோன்றி மேலும் மேலும் வளர்ந்து கொண்டே போகக் கூடியதாக இருந்தால் தம்பன மந்திரத்தின் மூலமாக அது இருக்கும் இடத்திலேயே நிற்கச் செய்தல் (நோயை அப்படி ஒரு இடத்திலேயே நிற்கச் செய்து பிறகுதான் கீழே இறக்க வேண்டும் என்பதனால் ஆம்.)

வலது நாசியில் பிங்கலை ஓடும்போது செய்யத்தக்க காரியங்களை இப்பொழுது கூறுகிறேன். கேட்பாயாக!

1. உபதேசம் பெறுதல் - உபதேசித்தல்
2. வித்தைகளைக் கற்றுக் கொள்ளுதல் - கற்பித்தல்
3. புராண பாராயணம் செய்தல் - ஒருவருக்கு எடுத்துக் கூறுதல்
4. ஊழியம் செய்தல் - உதவி செய்தல்
5. எதிர்த்து வரும் படைகளை வென்று துரத்திச் செல்லுதல்
6. பயிர் விளைத்தல் - வியாபாரம் செய்தல்
7. திருடுதல் - சூதாடுதல்

8. கடினமான வழக்கில் எதிர்வாதம் செய்தல்
9. யானை, குதிரை, தேர் முதலிய வாகனங்களில் ஏறி சவாரி செய்தல்
10. நிலைத்திருக்கும் படியான சொற்களை எழுதுதல்
11. சங்கீதம் பாடுதல்
12. ஒரு பொருளைப் பற்றிப் பேசத் தொடங்குதல்
13. கோள், பகை முதலானவற்றால் உண்டான தீமைகளைத் தீர்த்தல் (அல்லது) கோள் சொல்லி மற்றவனைக் கெடுத்தல் - பகை உண்டாக்குதல்
14. பேய் ஓட்டுதல், மந்திரம் ஜபித்தல், மருந்து கொடுத்தல் அல்லது சாப்பிடுதல், உண்ணுதல், உறங்குதல், குளித்தல்
15. மரணம் போன்ற துன்பத்தை உண்டாக்கக்கூடிய விஷயங்களை நிவர்த்தி செய்தல்
16. கொடிய வியாதியைத் தீர்த்தல்
17. தம்பன யோகம் செய்தல்

இப்படிப்பட்ட காரியத்தையெல்லாம் வலது நாசியில் சூரியகலை நடைபெறும் பொழுது செய்வது உத்தமமாம்.

சுழிமுனை பூரண சூனிய பலன் கூறுகின்றார்

காலிரண்டு மொத்தக்காற் சமாதி நன்றாம்
கருதியதொன் றாகாது காணா காணா
சீலமிகுந் தவமுடையாய் நன்மை இல்லை
தீயவா குங்கருமஞ் சேரக் கூடும்
சாலநிறை பூரணத்தில் வழக்கு வாது
தர்க்கம்போ ரரங்கமன்னர் தம்மைக் கண்டால்
மூலமறுஞ் சூனியத்தி னிறுத்தில் வெல்வன்
முயல்வதெல்லாங் கயல்விழியாய் முயல லாமே. (10)

கால் இரண்டும் ஒத்தக்கால் சமாதி நன்றாம். கருதியது ஒன்று ஆகாது - காணும் எனில் காணாது சீலம் மிகும் தவம் உடையாய் நன்மையில்லை - தீயனவாம் கருமம் சேரக் கூடும். சாலநிறை பூரணத்தில் வழக்கு வாது தர்க்கம் போர் அரங்க மன்னர் தம்மைக் கண்டால் மூலம் அறும். சூனியத்தில் நிறுத்தில் வெல்வாம். முயல்வதெல்லாம் கயல்விழியாய் முயலலாமே.

கால் இரண்டும் ஒத்தக்கால் - இடகலை பிங்கலை இரண்டும் சரி சமமாக இடது நாசி, வலது நாசிகளின் வழியாக ஓடுகின்ற சுழினை நடந்தால்

சரம் சுழினையில் ஓடும்பொழுது சமாதி யோகம் செய்வது நன்மை தரும். அதாவது நிட்டையில் இருத்தல், தியானம் போன்ற காரியங்கள்.

சுழினை நடக்கும்போது ஒருவன் வந்து ஒரு காரியம் பலிக்குமா? என்று கேட்டால் பலிக்காது என்று நிச்சயமாகச் சொல்லி விடலாம். அதே போல் தாம் செய்ய நினைக்கும் காரியங்களும் நடைபெறாது.

ஒன்றைப் பார்ப்போமென்றால் தேடினாலும் கிடைக்காது.

ஒழுக்கமுடைய நல்ல தவம் உடையவர்களுக்கு நன்மை விளைவிப்பதல்ல, கெடுதலே உண்டாக்கும்.

இந்த சரம் நடக்கும்பொழுது எந்த நாசித் துளையில் சரம் ஓடுகிறதோ அதைப் பூரணம் என்றும் அதற்கு எதிர்ப்பக்கத்தை சூனியம் என்று சொல்வர். அப்பொழுது ஒருவன் வந்து சரம் ஓடுகிற பூரண பக்கத்தில் நின்று ஒரு காரியத்தைப் பற்றிக் கேட்டால் அது பலிக்கும். சூனிய பக்கத்தில் வந்து நின்று கேட்டால், அவன் எடுத்த காரியம் தோல்வியில் முடியும் என்று கூறிவிடலாம். வழக்காடுபவர்கள், தர்க்கம் செய்பவர்கள், உரிமை பேசுபவர்கள் முதலானவர்களில் யார் எப்பக்கம் நின்று பேசுகிறார்கள் என்பதைக் கொண்டு, பூரண பக்கத்தில் நின்று பேசுபவர் பக்கம் நியாயம் உள்ளது என்றும், அவர் காரியம் வெல்லும் என்றும் அறிந்து கொள்ளலாம். சூனிய பக்கத்தில் நிற்பவர் தோல்வி அடைவார். தன்னுடன் வழக்காட வருபவர்களை சூனிய பக்கத்தில் நிற்கச் செய்தால் அவர்கள் நிச்சயம் தோல்வியடைவார்கள்.

பிரயாணம் போகும்போது சரம் இசைவு பிசகாயிருந்தால் அதற்கு உபசாந்தங் கூறுகின்றார்.

முயலுங்காற் பூரணத்தி லிடத்தி ரண்டு
முன்வலமேல் மூன்றடிபோம் மொழியும் யர்த்திரை
கயலடரும் கண்மடவாய் கருமம் முற்றும்
கருதுவடக் குங்கிழக்கும் இடத்தே போகில்
இயலுமொரு பகையுண்டாம் மீள மாட்டார்
இசைந்தவலந் தெற்குமேற் கேக வென்னிற்
புயலடரும் புனல்புகுந்து மரண மாவார்
புணர்முலைக் குஞ்சிறுமிடையாய் போற்றிக் காணே. (11)

முயலுங்கால் பூரணத்தில் இரண்டடி போம் - முன் வலமென் மூன்றடி போம் மொழியும் யாத்திரைக்கு கழல் அடரும் கண் மடவாய் - கருமமது முற்றும் கருது வடக்கும், கிழக்கும் இடத்தே போகில் - இயலும் ஒரு பகை உண்டாம். மீளமாட்டார். இசைந்த வலம் - தெற்கு மேற்கு ஏகவென்னில் புயல் அடரும் புனல் புகுந்து மரணமாவர் புணர்முலைக் கச்சு இறும் இடையாய் போற்றிதானே.

பூரணத்தில் - சரம் ஓடும் பக்கத்தில்

இப்பாடல் பிரயாணம் செய்வதன் பலனை கூறுகிறது. வடக்கும், கிழக்கும் சூரியன் திசையென்றும், தெற்கும், மேற்கும் சந்திரன் திசையென்றும் கொள்ள வேண்டும். பிரயாணம் செய்ய விரும்புபவன் சந்திரகலையில் வருவானானால் அவன் சந்திரனுக்குடைய திசைகளில் சென்றால் வெற்றி அடைவான். சூரியகலை நடைபெறும்போது வருபவன் சூரியனுக்குரிய திசைகளில் செல்ல வேண்டும். அப்படியில்லாமல் மாறிச் சென்றால் போகும் காரியம் முடிவு பெறாது.

ஆகையால் சந்திரன் ஓடும்போது வருபவன் சூரியனுடைய திசையில் போக வேண்டுமென்றால் சரத்தை இழுத்து, அடக்கி சந்திரனுக்குரிய திசையில் இரண்டு அடி தூரம் சென்று சூரியனில் (வலது நாசி) மூச்சை விட்டபடி பிரயாணம் செய்யத் தொடங்க வேண்டும். சூரியனில் வருபவன் சந்திரனுடைய திசையில் செல்ல வேண்டுமென்றால் மூச்சை அடக்கி மூன்று அடி தூரம் சூரியன் திசையில் சென்ற பிறகு மாற்றிக் கொள்ளலாம். அப்படிச் செய்வதால் தீமை ஏற்படாது.

சந்திரனின் இடது கலை ஓடும்போது சூரியனின் வடக்கு கிழக்கு திசைகளில் பிரயாணம் சென்றால் வழக்கு சச்சரவு ஏற்பட்டுச் செல்பவன் திரும்ப முடியாமல் போய்விடலாம். சூரியனின் பிங்கலை நடக்கும் போது சந்திரனின் தெற்கு மேற்கு திசைகளில் பிரயாணம் சென்றால் மழையால் அல்லது வெள்ளத்தால் துன்பமடைவான்.

ஏதாவது முக்கியமான காரியங்களுக்காகச் செல்லும் பொழுதோ அல்லது நீண்ட தூர யாத்திரை போகும் பொழுதோ நாள் சரம் பார்ப்பவரிடம் செல்வார்கள். சாதாரணமாக வெளியூர் சென்று திரும்புவதென்பது இக்காலத்தில் இயல்பாக நடைபெறக் கூடிய காரியமாக இருக்கிறது. இருப்பினும் பிரயாணம் செய்பவர் தனக்கு

நடைபெறும் சரத்தையும் செல்ல வேண்டிய திசையையும் கவனித்துக் கொள்வது நன்மையளிக்கும்.

ஒருவனுக்கு நன்மை தீமை சொல்லும் மார்க்கம் கூறுகிறார்

காணவொரு கருமத்தைக் குறித்து வந்தோன்
கருதியமுன் னும்மிடமும் மேலும் இந்து
பேணுவல முங்கீழும் பின்னும் வெய்யோன்
பேசியசொல் லெழுத்திரட்டை சோமனாகும்
மாணுமெழுத் தொற்றையேற் கதிரோ னாகும்
மதிக்குமவன் பூரணத்தில் வந்து கேட்கிற்
பூணவுரைத் தனவெல்லாம் நன்றே யாகும்
பொல்லாது சூனியத்திற் புகலு வோற்கே. (12)

காண ஒரு கருமத்தை குறித்து வந்தோன். கருதிய முன்னும் இடமும், மேலும் இந்து - பேணும் வலமும் கீழும் பின்னும் வைய்யோன். பேசிய சொல் எழுத்து இரட்டை, சோமனாகும் - மாணும் எழுத்து ஒற்றையேல் கதிரோனாகும் - மதிக்கும் அவன் பூரணத்தில் வந்து கேட்கில் பூண உரைத்தன வெல்லாம் நன்றேயாகும். பொல்லாது சூனியத்தில் புகலுவோர்க்கே.

கருதிய முன் இடமும் மேலும் இந்து முன் பக்கம், இடது பக்கம் உயரமான இடம் இவை சந்திரனை குறிக்கும்.

பேணும் வலமும் கீழும் பின்னும் வெய்யோன்=வலது பக்கம், தாழ்வான இடம் பின்புறம் இவை சூரியனைக் குறிக்கும்.

பேசிய சொல் எழுத்து இரட்டை சோமனாகும்=அவன் முதலில் கூறிய வார்த்தையின் எழுத்துக்கள் இரட்டை படையாக இருந்தால் சந்திரனைக் குறிக்கும்.

மாணும் எழுத்து ஒற்றையேல் கதிரோனாகும்=அப்படியில்லாமல் ஒற்றைப் படையானால் சூரியனைக் குறிக்கும்.

ஒரு காரியத்தைப் பற்றிக் கேட்க வந்தவர் சரம் பார்ப்பவர்க்கு முன் பக்கம் இருந்தோ அல்லது இடது பக்கத்திலிருந்தோ அல்லது உயரமான இடத்திலிருந்தோ கேட்பாராகில் அவர் சந்திர கலையில் நின்று கேட்பதாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

அப்படி இல்லாமல் வலது பக்கத்தில் இருந்தோ தாழ்வான இடத்தில் நின்று கொண்டோ அல்லது பின்புறம் இருந்தோ கேட்டால் சூரியகலையில் நின்று கேட்பதாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

வந்தவன் பேசிய முதல் வார்த்தையின் எழுத்துக்கள் இரட்டைப் படையானால் சந்திர கலை என்க. ஒற்றைப்படையானால் சூரியகலை என்க.

அவன் பூரணத்தில் பூரண பக்கமாக அதாவது சரம் பார்ப்பவர்க்கு சரம் ஓடுகிற நாசியின் பக்கமாக வந்து நின்று கேட்டாலும் அவன் எடுத்த காரியம் முடியும் என்று கூறலாம். சூனிய பக்கத்தில் வந்து நின்று கேட்டால் அது தீமையில் முடியும் என்று கூறிவிடலாம்.

மேலே சந்திர கலை என்று கூறியதில் காரியம் நடைபெறக் கூடியதும், சூரிய கலை தீதாய் முடிவதையும் குறிக்கும். இங்கு பலமுறைகளில் பலன் கூறும் விதம் கூறப்பட்டுள்ளது. சரம் பார்ப்பவர் சரி பார்த்துக் கொள்வதற்காக என்று அறிக.

இதுவுமது
அதினும் - முன் 10-ங் கவியிற்சொல்லிய பூரணசூனியங்களின் விகற்பங் கூறுகின்றார்.

கேடென்றோன் பறிகொடுத்தோன் நஞ்சு தின்றோன்
கிடையினிற் சாவென்றோன் கிளர்நோய் கொண்டோன்
பாடொன்று மில்லை சூனியத்தே யாகிற்
பலித்துவிடும் பூரணத்திற் பகர்ந்த வெல்லாம்
ஆடும்பை யர்வன்ன அல்கு வாளே
அடுத்தொருவன் வந்ததிசை சோமனாகி
நீடுஞ்சொல் இரவியாய் நிற்கு மாகில்
நினைத்தமொழி யாகாது நின்று பாரே. *(13)*

கேடு என்றோன் பறிகொடுத்தோன் - நஞ்சு தின்றோன் இடையினில் சாவு என்றோன் - கிளர்நோய் கொண்டோன் - பாடு ஒன்றும் இல்லை சூனியத்தே ஆகும்.

பலித்துவிடும் பூரணத்தில் பகர்ந்தது எல்லாம்.

ஆடும்பை அரவு என்ன அல்குலாளே அடுத்து ஒருவன் வந்த திசை சோமனாகில் நீடும் சொல்.

இரவியாகி நிற்குமாகில் நினைந்த மொழி ஆகாது என்று கேளே.

சரம் பார்ப்பவரை பார்க்க வருபவன் பூரண பக்கமாக வந்து நின்று ஏதாவது அவச்சொல் கூறுவானானால் அது அப்படியே பலித்து விடும். நான் கெட்டுப்போய் விட்டேன் என்றோ, பொருளைப்பறி கொடுத்தேன் என்றோ, நஞ்சைத் தின்று விட்டேன் என்றோ இனி நான் பிழைக்க மாட்டேன் செத்து போவேன் என்றோ சொன்னாலும் கூட அது பலித்து விடும். அப்படி இல்லாமல் அவன் வந்து நின்றது சூனிய பக்கத்திலானால் அதைப்பற்றி கவலைப்பட வேண்டியதில்லை. அவன் சொன்னது பலிக்காது.

மேலும் அவன் வந்த திசை சந்திரனுடைய திசையானால் அவன் எடுத்த காரியம் நடைபெறும். சூரியனுடைய திசையில் வந்து நிற்பானாகில் அக்காரியம் நடைபெறாது. தோல்வியில் முடியும் என்று தெரிந்து கொள்வாயாக.

கர்ப்பக்குறி கூறுகின்றார்

கேட்டவனோ ருயிர் தன்னிலேறி நிற்றல்
கிளர்கையி லுயிருளவை பிடித்து நிற்றல்
வாட்டமற வருமதலை யிடத்திற் பெண்ணாம்
வலமாகி நின்றுரைத்தால் மைந்த னாகும்
ஈட்டமில்சூ னியத்துரைக்கில் கேடே யாகும்
இருஞ்சுழனை மேலுரைக்கில் அலியே யாகும்
நாட்டுமொழி சூனியம்பூ ரணத்தே யாகில்
நடுக்கமுடன் மகவுயிர்க்கக் கிடைக்கும் அன்றே. (14)

கேட்டவன் ஓர் உயிர் தன்னில் ஏறி நிற்றல் கிளர் கையில் உயிர் உள்ளவை பிடித்து நிற்றல் வாட்டமற வரும் மதலை இடத்தில் பெண்ணாம்.

வலமாகி நின்று உரைத்தல் மைந்தன் ஆகும்
ஈட்டமில் சூனியத்து உரைக்கில் கேடே ஆகும்
இரும் சுழினை மேல் உரைக்கில் அலியே ஆகும்

நாட்டு மொழி சூனியம் பூரணத்தே யாகில் நடுக்கமுடன் மகவு உயிர்த்துக் கிடைக்குமன்றே:

இப்பாடலுடன் அடுத்தபாடலின் முதல் வரியாகிய - அன்றே அசைக்கிடைக்கின்ற மைந்தனும் சூனியத்தில் கேடாம் என்பதையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

சரம் கேட்க வருபவன் உயிருள்ள ஒரு பிராணியின் மேல் ஏறிக் கொண்டு வந்தாலும், ஒரு பிராணியை கையில் பிடித்துக் கொண்டு நின்றபடி கேட்டாலும் அவர் இடப்பக்கமாக வந்து நின்று கேட்டால் பெண் குழந்தை பிறக்கும் என்று சொல்லிவிடலாம். வலப்பக்கமாக வந்து நின்று கேட்டால் ஆண் குழந்தை ஆகும்.

வலப்பக்கத்தில் சூனியத்தில் நின்று கேட்டால் கெடுதலே உண்டாகும். பூரண பக்கமானால் கேடு ஏற்பட்டு விலகும்.

இடது பக்கத்தில் பூரணத்தில் வந்து கேட்டால் சுகம் ஏற்படும். சூனியத்தில் வந்து கேட்டால் கஷ்டம் ஏற்பட்டு விலகும்.

வந்தவன் பூரண பக்கமாக வந்து கேட்டுக் கொண்டே சூனிய பக்கத்திற்கு போய் விட்டால் பிறக்கின்ற குழந்தை மரிக்கும் என்று கூறவேண்டும்.

கர்ப்பக்குறியும் போர் வெல்லும் குறியும்

கிடைக்கின்ற மைந்தனுஞ்சூ னியத்திற் கேடாம்
கெடாதிருவர் பொருவதுசூ னியத்தி லோது
வடுக்கின்ற மொழியின் முதற்சொன்னோன் தோற்பன்
மருவியபூ ரணத்தின் பின்பு சொன்னோன் தோற்பன்
நடக்கின்ற சுழுமுனையில் வேட்ட பேர்கள்
நட்பாகும் வலத்தியங்க நடப்போன் வெல்வன்
இடத்தியங்கி லைந்தடிபோ யெதிர்த்தோன் வெல்வன்
இருஞ்சுழுனை நிற்கிலிடரில்லை பாரே. (15)

கெடாது இருவர் பொருவது சூனியத்தில் ஓது வடுக்கின்ற மொழியின் முதல் சொன்னோன் தோற்பன். மருவிய பூரணத்தில் பின்பு சொன்னோன் தோற்பன். நடக்கின்ற சுழிமுனையில் வேட்டவர்கள் போந்த நட்பாகும். வலத்து இயங்க நடப்போன் வெல்வன். இடக்கு இயங்கில் அஞ்சடி போய் எதிர்த்தோன் வெல்வன். இரும் சுழியில் நிற்கில் இடர் இல்லை பாரே.

இப்பாடலில் போர் செய்து கொண்டிருக்கும் இருவரில் எவன் வெல்வான் என்று கேட்க வந்தவரின் கேள்விக்கு விடை கூறப்பட்டுள்ளது. இது போருக்கு மட்டுமன்றி வழக்கு, சச்சரவு, போட்டி, பந்தயம் எல்லாவற்றிற்கும் பொருந்தும்.

கேட்டவர் சரம் ஓடாத சூனிய பக்கமாக வந்துக் கேட்டால் அவர் சொன்ன முதலாவது ஆள் தோற்றுவிடுவான். பூரண பக்கமாக வந்து கேட்டால் முதலாவது ஆள் வெல்வான். இரண்டாவது ஆள் தோற்பான். அப்படி இல்லாமல் அவன் கேட்க வரும் போது சரம் சுழிமுனையில் இயங்கிக் கொண்டு இருந்தால் சண்டை இடுபவர்கள் சமாதானமாகப் போய்விடுவார்கள்.

வலது பக்கம் சரம் நடைபெற்றால் நடப்பவன் வெல்வான். இடது பக்கம் சரம் ஓடினால் ஐந்தடி தூரம் திரும்பி எதிர்த்தால் வெல்வான். சுழினையில் நின்றால் சண்டை நீங்கி சமாதானமாக ஆகிவிடும்.

சந்திரன் ஸ்பரிசங் கூறுகின்றார்

பார்க்குங்கா லிடமெனினும் வலமு மொக்கும்
பஞ்சபூ தந்தியக்கம் பகருங் காலை
சாற்றியதண் டுடன்சேரிற் பிருதிவி யாகும்
தப்பாமல் அப்பினுக்குத் தாழ வோடும்
மேற்றிசையை நோக்கியெழும் அங்கி வாயு
மெய்யுணர்ந்தோர் புறத்தோடும் மேன்மைகுன்றா
நீர்த்துறையா நாற்றிசையுஞ் சிதறி யோடில்
நெடுவானென் றுரைத்திடுநீ நிலத்து ளோர்க்கே. *(16)*

இப்பாடல் சரம் பார்க்கும் போது பஞ்ச பூதங்களின் இயல்பை அறியும் வகையைக் கூறுகின்றது. பாரக்குங்கால் இடம் எனினும் வலம் எனினும் ஒக்கும். பஞ்ச பூதத்து இயக்கம் பகரும் காலை - சாற்றிய தண்டுடன் சேரில் பிருதிவியாம் - தப்பாமல் அப்பினுக்குத் தாழ ஓடும். மேற்றிசையே நோக்கி எழும் அங்கி - வாயு மெய் உணர்ந்தோர் புறத்து ஓடும் மென்மை குன்றா நீர்த்திரையா நால் திசையும் சிதறியோட நெடுவான் என்று உரைத்திடு நீ நிலத்துள்ளோர்கே.

பூதத்து இயக்கம்	-	பஞ்சபூதங்கள் இயங்கும் தன்மை
பகரும் காலை	-	சொல்லுமிடத்து

தண்டுடன் சேரில் - மூக்கின் தண்டுடன் ஒட்டிச் சென்றால்
அங்கி - அக்னி
அப்பு - நீர்

சரம் இடது பக்கத்தில் ஓடினாலும் சரி, வலது பக்கத்தில் ஓடினாலும் சரி அது பஞ்ச பூதங்களில் எதைச் சார்ந்து ஓடுகிறது என்பதைத் தெரிந்து கொள்வது மிகவும் அவசியம். இங்கு கூறியவை தவிர மேலும் நுட்பமாகப் பலன் கூறும் முறையைக் கூறுகிறார் என்பதை அறிக.

சரம் மூக்கின் தண்டுடன் ஒட்டி ஓடினால் அது பிருதிவியின் சார்பு என அறிந்து கொள்ள வேண்டும். மூக்கின் அடிபாகத்தில் ஓடினால் நீரைச் சார்ந்தவையாகும். மேல் திசையை நோக்கி எழுந்தால் அக்னியின் சார்பில் சரம் ஓடுகிறது என்று தெரிந்து கொள்ளலாம். மூக்கின் உட்பகுதியைத் தொட்டுக் கொண்டு வெளியே சென்றால் சரம் வாயுவைச் சார்ந்து ஓடுகிறது என்றும் நான்கு திசைகளிலும் சிதறி ஓடினால் வான் சார்ந்து ஓடுகிறது என்றும் உணரவேண்டும். இது முதலில் சற்று கடினமாக தோன்றலாம். ஆரம்ப நிலையிலே உள்ளவர்க்கு சரம் நீரில், நெருப்பில் வாயுவா, ஆகாயமா என்று தெரிந்து கொள்ள முடியாதபடி குழப்பம் ஏற்படலாம். நீண்ட பயிற்சியினாலும், குருவின் துணையோடும் இதை தெரிந்து கொள்ள வேண்டும். அப்போது நடைபெறும் சரம் பஞ்ச பூதங்களில் எதைச் சார்ந்தது என்பதைத் தெரிந்து கொள்வதின் மூலம் மேலும் நுட்பமாக அறிந்து பலன் கூற முடியும்.

சரத்தின் வடிவமும் நிறமும் இரகசியமும் கூறுகிறார்.

நிலம்பொன்நிறம் நெடுங் கோணம் நான்காம்
நீளம்பன் னிருவிரலாம் நீர்தான் வெண்மை
இலகுபிறை வடிவு கண்டந் துவர்த்திருக்கும்
எட்டிரண்டு விரலோடு மெரிதான செம்மை
நலங்கொண்ட முக்கோணம் அழற்சி மேலாய்
நாலிரண்டு விரலோடு நளிர்க்கா னிலம்
துலங்குபுளி யறுகோண மொருபக் கத்தில்
துய்யநால் விரலோடுஞ் சொல்லுங் காலே. (17)

நிலம் பொன் நிறம் - நெடும் கோணம் நான்காம் - நீளம் பன்னிரு விரலாம் - நீர்தான் வெண்மை - இலகு பிறைவடிவு - கண்டம் துவர்த்து

இருக்கும் - எட்டு இரண்டு விரலோடும் - எரிதான் செம்மை நலம் கொண்ட முக்கோணம் - அழற்சிமேலாய் நால் இரண்டு விரலோடும் நளிர் கால் நிலத்து துலங்கு, புளி அறுகோணம் ஒருபக்கத்தில் துய்ய நால் விரலோடும் சொல்லும் காலே.

முன்பாடலில் பஞ்ச பூதங்களைப் பற்றிக் கூறியவர், அப்பூதங்களின் நிறம் சுவை அமைப்பு நீள அகலங்கள் முதலானவை பற்றி இப்பாடலில் கூறுகிறார். பஞ்ச பூதங்களில் முதலாவதான நிறம் பொன் நிறமாகும். நாற்கோண வடிவம் தித்திப்பு சுவை. பனிரெண்டு விரற்கிடை தூரம் ஓடும்.

நீர் - வெண்மை நிறம் - பிறை வடிவம் துவர்ப்பு சுவை பதினாறு விரற்கிடை தூரம் ஓடும்.

அக்னி - சிவப்பு நிறம் முக்கோண வடிவம், உவர்ப்பு அல்லது அழற்சி சுவை எட்டு விரற்கிடை தூரம் ஓடும். வாயு - கருப்பு நிறம் - புளிப்பு சுவை. அறுகோண வடிவம் நான்கு விரற்கிடையளவு தூரம் ஓடும்.

இதுவும் அதுவுடன் அப்பூதிய நடக்கையில் செய்கருமங்களின் குணாகுணம் கூறுகின்றார்.

சொல்லியவான் வடிவதுதான் வட்ட மாகும்
துய்யதொரு விரனாசி யெல்லாஞ் சுற்றும்
ஒல்லைநிறம் படிகம்கைப் பிரதம் வாயு
ஓடிவரும் பூதங்கட் குளதோ சொல்க
மல்லல்நில நீர்க்குமிகு பயனாஞ் செந்தீ
மத்திமமாம் பகர்காலும் வானுந் தீதாம்
பல்வளையாய் சரம்பார்ப்போன் தன்னைப் போற்றிப்
பாசிலையென் றோதியிட்டுப் பணிந்து பாரே. **(18)**

சொல்லியவான் வடிவதுதான் வட்டமாகும் - துய்யதொரு சரம் நாசி எல்லாம் சுற்றும் - ஒல்லை நிறம் படிகம் - கைப்பிரதம் வாயு ஓடிவரும் பூதங்கட் குனதோ சொல்ல - மல்லல் நிலம் நீர்க்கும் மிகு பயனாம் - செந்நீ மத்திபமாம் - பகர்காலும் வானும் தீதாம் - பல்வளையாய் சரம் பார்ப்போன் தன்னைப் போற்றிப் பாகு இலை என்று ஓதி இட்டு பணிந்து பாரே.

பாகு இலை - வெற்றிலை பாக்கு

வானத்தின் வடிவம் வட்டமாகும். நிறம் படிகம். நீளம் - ஒரு அங்குலம். இது நாசி யெல்லாம் சுற்றி ஓடும்.

இனி பூதங்களுக்குரிய பயன் சொல்லுமிடத்து நிலம் நீர் இரண்டும் மிகுந்த நன்மை பயப்பனவாம். அதாவது சரம் பார்ப்பவர்க்கு பூத சரங்களில் பிருதிவி சரம் அப்புசரம் ஓடிக் கொண்டிருக்கும் போது ஒருவர் பலன் கேட்க வந்தால் அவர் நினைத்த காரியம் நிறைவேறும். நன்மையே உண்டாகும் என்று துணிந்து கூறிவிடலாம்.

அப்போது அக்னி சரம் ஓடிக்கொண்டிருந்தால் மத்திம பலனே சொல்ல வேண்டும். வாயு பூதம், ஆகாய பூதம் இயங்கிக் கொண்டிருந்தால் அக்காரியம் முடியாது கெடுதலே ஏற்படும் என்று சொல்லி விடலாம்.

சரம் பார்க்கச் செல்பவன் சரம் பார்ப்பவரைப் போற்றி வணங்கி தாம்பூலம் வைத்துப் பணிந்து கேட்க வேண்டும் என்று சரம் கேட்பதற்கான முறையையும் இப்பாடலில் கூறப்பட்டுள்ளது.

ஒருவன் போரைக்குறித்து வினவில் அவனுக்குரியவைகளைக் கூறுகின்றார்.

பாராகும் முதுகுநீர் கால தாகும்
பைந்தழல்மா ரனிலங்கை படர்வான் சென்னி
பேராமல் வினவினபோ துதித்த பூதம்
பேர்படைத்த இடங்களிலே பிழையில் லாமல்
ஏராகும் பூரணமாம் பக்கந் தன்னில்
ஏறிவெட்டுங் கோல்படுத்த லிசைந்த தெல்லாம்
கூராழி மால் வந்து விலக்கி னாலும்
குறையாமல் வடுப்படுங்காண் குறிக்குங் காலே. (19)

பார் ஆகும் முதுகு - நீர் - காலதாகும் - பைந்தழல் மார்பு - பவனம் கை - படர் வான் சென்னி - பேராமல் வினவின போது உதித்த பூதம் பேர் படைத்த இடங்களிலே பிழை இல்லாமல் ஏராகும் பூரணமாம் பக்கம் தன்னில் ஏறி வெட்டும் கோல் படுத்த மத்ததெல்லாம் கூர் ஆழி மால் வந்து விலக்கினாலும் குறையாதே வடுப்படுங்காண் குறிக்கும் காலே.

இந்தப்பாடல் போர் நடைபெறும் காலத்தில் போரிட்டுக் கொண்டிருப்பவனைப் பற்றிய கேள்விக்கு விடை கூறுகிறது. போர் செய்து கொண்டிருப்பவன் அல்லது போருக்கு போகிறவர் யார் வந்துக் கேட்டாலும், கேட்கும்போது பூத சரம் எவ்வாறு ஓடுகிறது என்பதைப் பார்த்து பலன் கூறவேண்டும். போர் செய்பவர்களில் சரம் ஓடும் பூரண பக்கத்தில் இருப்பவன் எதிரியை வெல்வான். அடுத்தவன் காயம் படுவான். அப்படிக் காயம் படுவது பிருதிவி சரம் ஓடினால் முதுகிலும், அப்பு சரம் ஓடினால் காலிலும், அக்னி சரம் ஓடினால் மார்பிலும், வாயு சரம் ஓடினால் கையிலும் ஆகாய சரம் ஓடினால் தலையிலும் காயம் படும் என்று நிச்சயமாகக் கூறலாம் கூரிய சக்கராயுதத்தை உடைய விஷ்ணு பகவானே வந்து தடுத்தாலும் அவன் காயம் படாமல் தடுக்க முடியாது.

இரண்டு பேர் போர் புரிவது என்பது பழங்காலத்தில் மட்டும்தான் நடைபெற்றது என்று நினைக்க வேண்டாம். அடிதடி, குத்து, வெட்டு சண்டைகள் இக்காலத்திலும் தான் நடைபெறுகின்றன. கலகம் செய்யப் போனவன் திரும்பி வருவானா? அல்லது அடிப்பட்டுச் சாவானா என்ற கவலை உற்றார் பெற்றோருக்கும்; மனைவி மக்களுக்கும் ஏற்படுவது இயற்கை. அவர்கள் சரம் பார்ப்பவரின் உதவியை நாடினால் என்ன பதில் கூறவேண்டும் என்பதையே இந்தப் பாடல் கூறுகிறது.

அடுத்தப்பாடலில் போருக்குச் செல்பவன் எந்த ஆயுதத்தில் போரிட்டால் தான் வெற்றி பெற முடியும் என்பதைப் பற்றிக் கேட்டால் அதற்குப் பதில் சொல்லும் முறையைக் கூறுகிறது.

இந்த இந்தப்பூதியத்துக்கு இந்திந்த ஆயுதமெடுத்துப் போகவெனவும் அதற்கிவ்விடத்தில் நிற்கவெனவுங் கூறுகின்றார்.

கால்மூலை தொடங்கியழல் மூலை யேறக்
கயிறெனவே கீறிமதி கதிரோ னாகிக்
கோல்மேற்குந் தெற்குமாய் நிலமாக் கொள்க
கொழுங்கதிரோன் கிழக்குவடக் காகக் கொள்க
சேல்போலும் நெடுங்கண்ணாய் புவிக்குக் கத்தி
சேர்ந்தசலம் வாள், அழற்குச் சிலை காலுக்கு
மேற்றண்டாம், வானுக்கா யுதங்கல் அந்த
அந்தநிலத் திற்பொருதல் வெற்றி யாமே. (20)

கால் மூலை தொடங்கி அழல் மூலை ஏறக் கயிறு எனவே கீறி - மதி கதிரோனாக கோல் மேற்கும் தெற்கும் மதி நிலமாக கொள்க - கொழுங்கதிரோன் கிழக்கு வடக்காக கொள்க - சேல் போலும் நெடுங்கண்ணாய் - புவிக்கு கத்தி - சேர்ந்த சலம் வாள் - அழலுக்குச் சிலை - காலுக்கு மேல்தண்டாம் - வானுக்கு ஆயுதம் கல் - ஏந்தி விதித்த நிலத்தில் பொருதல் வெற்றியாமே.

ஒருவிதிப்படி போர் புரிகிறவர்க்கு மட்டும்தான் இந்தப் பாடல் பொருந்தும் என்றாலும் இது எவ்வளவு அற்புதமாக பலித்து விடுகிறது என்பதை நுண்ணிதில் ஆராய்ந்து அறிவோர்களுக்கு புலப்படும்.

வாயு மூலையிலிருந்து அக்னி மூலை வரை குறுக்காக ஓர் கோடு போட்டுக் கொண்டு மேற்கும் தெற்கும் சந்திரனுடைய நிலம் என்றும், கிழக்கும் வடக்கும் சூரியனுடைய நிலம் என்றும் கொள்ள வேண்டும். இவற்றில் யாருக்கு எந்தப் பகுதி பொருந்துகிறது என்பதை பூதசரம் முதலியவற்றால் தெரிந்து கொள்ள வேண்டும். அந்தப் பகுதியில் நின்று போரிட்டால், அவனுக்கு வெற்றி கிடைக்கும். அப்படிப் போரிடும்போது பிருதிவிசரம் ஓடினால் கத்தி எடுத்தும், அப்பு சரம் ஓடினால் வாள் கொண்டும், அக்னி சரம் ஓடினால் வில் எடுத்தும், வாயு சரம் ஓடினால் தண்டு கொண்டும், ஆகாய சரம் ஓடினாலும் கல்லை ஆயுதமாகவும் கொண்டு போரிட்டால் நிச்சயமாக வெற்றி கிடைக்கும்.

கால் மூலை நோய்க்குறி கூறுகின்றார்

ஆகியநோய் புருடர்க்குப் புருடர் வலங்கேட்கில்
ஆறுமென்க மாதருக்கு மாதர் கேட்கில்
சோகமில்லை முறைதப்பிற் பொல்லா தென்க
தொலையாது நாட்சென்று மீளு மென்க
தோகை நிலம் நாட்செலு நீர்கடுகி மீளும்
கடுதழல்நாள் மூன்று தப்பிற் றுஞ்சப் பண்ணும்
ஏகிடுங்கா னாளிரண்டின் மிகுந்தாற் கொல்லும்
எழில்வான மன்றுதப்பி லிறக்கும் பின்னே. (21)

ஆகிய நோய் புருடருக்காய் புருடர் வலம் கேட்கில் ஆறுமென்க - மாதருக்கு மாதறிந்து கேட்கில் சோகமில்லை - முறை தப்பிற் பொல்லாதென்க - தொலையாது நாட்சென்று மீளும் என்க - நிலம் நாள் செல்லும் - நீர்கடுகி மீளும் - சுடுதழல் நாள் மூன்று தப்பில் துஞ்சுப்

பண்ணும் - ஏகிடும் கால் (காற்று) நாள் இரண்டின் மிகுந்தால் கொல்லும் - எழில் வானம் அன்று தப்பில் இறக்கும் பின்னே.

இந்தப்பாடல் ஒருவர் நோயுற்று இருக்கும்போது அந்நோய் தீருமா? தீராதா? எப்பொழுது தீரும்? என்று கேட்பவர்க்கு சரம் பார்ப்பவர் எப்படிப் பதில் சொல்ல வேண்டும் என்பதைக் குறிப்பிடுகிறது.

ஓர் ஆண் மகனுக்கு வந்திருக்கும் நோய்க்கு ஓர் ஆண் வந்து கேட்டால் நோய் குணமாகும் என்று சொல்லலாம். அதே போல் பெண்ணுக்குப் பெண் வந்து கேட்டாலும் நோய் குணமாகும். அப்படியில்லாமல் ஆணுக்கு வந்த நோய் பற்றிப் பெண் கேட்டாலும், பெண்ணுக்கு வந்த நோய் பற்றி ஆண் கேட்டாலும் அந்த நோய் குணமாவது கடினம் என்று கூறவேண்டும்.

அப்படிக் கேட்பவர் - ஆணுக்கு ஆண் வந்து கேட்கும் போது வலப்பக்கம் வந்து கேட்கவேண்டும். பெண்ணுக்கு பெண் கேட்கும் போது இடப்பக்கம் நின்று கேட்க வேண்டும். அப்படி இல்லாமல் இடம் மாறி நின்று கேட்டால் நோய் நீடிக்கும் என்றே கூற வேண்டும்.

அது எவ்வளவு காலம் என்பதை பூதசரம் கொண்டு தீர்மானிக்க வேண்டும். சரம் கேட்கப்படும்போது பிருதுவிசரம் ஓடினால் அதிக நாள் செல்லும், அப்பு சரம் ஓடினால் சீக்கிரமே குணமாகும். அக்னி சரம் ஓடினால் 3 நாட்களுக்குள் குணமாக வேண்டும். இல்லாவிட்டால் கேடு உண்டாகும் என்று சொல்லலாம். வாயு சரம் ஓடினால் இரண்டே நாட்களுக்குள் நோய் குணமாகா விட்டால் கொன்று விடும் என்றும் ஆகாய சரம் ஓடினால் அன்று தப்பினால் மரணம் நிச்சயம் என்றும் கூறிவிடலாம்.

இறக்குமுப யந்தனக் கைந்து நாளில்
ஏகினக்காற் சாவில்லை யிதுவுண் மையே
பிறக்குமொரு பூதத்தி லைந்து பூதம்
பிரிந்தோடு மதுவுடனே பேசக் கேட்டுச்
சிறப்புடைய பயனறிவ தெல்லாம் நூலின்
செயலதனால் தேவர்களுந் தெரிய மாட்டார்
நிறக்கு மதிக் கிருந்தழைத்தால் வந்து கேட்டால்
நீள்வெயிலாச் செல்சொல்க நினைத்து கேளே. (22)

உபயந் தனக்கு ஐந்து நாளில் ஏகினக்காற் சாவில்லை. இதுதான் மெய்யோ ஒரு பூதத்தில் ஐந்து பூதம் பிறக்கும். பூதம் பிரிந்தோடும். அது குறவன் (குரு) பேசக் கேட்டுச் சிறப்புடைய பயன் தெரிவதெல்லாம் நூலின் செயலால் தேவர்களும் தெரிய மாட்டார். நிறக்கு மதிக் கிருந்தழைத்தால் வந்தது கேட்டால் நீள் வெயிலாச் செல் சொல்க நினைத்துக் கேளே.

சரம் பார்ப்பவர்க்கு சரம் சுழிமுனையில் இயங்கிக் கொண்டிருக்கும் பொழுது ஒருவன் நோய் பற்றிக் கேட்பானாகில் ஐந்து நாள் தப்பினால் நோய் குணமாகிவிடும் என்று கூறலாம். அதன்பிறகு அவனுக்கு அந்த நோயினால் மரணம் ஏற்படாது. பூதசரம் பார்க்கும் பொழுது மேலும் நுட்பமாகப் பார்க்கும் முறை ஒன்று உள்ளது. ஒவ்வொரு பூத சரத்திலும் மற்ற பூதங்களின் இயல்பாய் ஐந்து ஐந்தாக பிரித்து சரம் நடைபெறுவதைத் தக்க குருவின் மூலமாகதான் அறிய முடியும். தானே தெரிந்து கொள்ளலாம் என நினைப்பது தவறு. எவ்வளவுதான் நூல்களைப் படித்தாலும் ஆய்வுகள் நடத்தினாலும் நுட்பமான விஷயங்களைத் தானே தெரிந்து கொள்வோம் என்பது இயலாத காரியம்.

இந்த நுட்பமான பூத சரங்களை,

1. பிருதிவியில் பிருதிவி
2. பிருதிவியில் அப்பு (நீர்)
3. பிருதிவியில் தேயு (அக்னி)
4. பிருதிவியில் வாயு (காற்று)
5. பிருதிவியில் ஆகாயம்

இவை பிருதிவி பூதக் கூறாம். இதே போல் அப்புவில் பிருதிவி, அப்புவில் அப்பு, அப்புவில் தேயு, அப்புவில் வாயு, அப்புவில் ஆகாயம் என்று அப்புவின் கூறு களையும் மற்ற பூதங்களான தேயு, வாயு ஆகாயம் ஒவ்வொன்றிலும் மற்ற பூதங்களின் கூறுகளையும் பகுத்து உணர வேண்டும். இது எல்லோராலும் முடியக் கூடிய காரியம் அல்ல. நீண்டகாலப் பயிற்சியும், அனுபவமும் கொண்டே அறிய வேண்டும். இப்பாடலில் நூலின் செயலால் தேவர்களும் தெரியமாட்டார் என்று கூறப்பட்டுள்ளதற்கு காரணம் இதுவே தேவர்களாலேயே தெரிந்து கொள்ள முடியாவிட்டால், மனிதர்களால் தெரிந்து கொள்ள முடியுமா?

ஒருவர் சரம் பார்ப்பத்ற்காக வந்து அழைத்தால் சரம் பார்ப்பவர் சூரியகலை நடக்கும் போதே செல்ல வேண்டும். மேலும் வந்தவர் சூரியகலை நடக்கும் போது வந்திருந்தால் மிகவும் நல்லது. சரம் சொல்லும் போதும் சூரியகலை நடக்கும் போது கூறினால் மட்டுமே சொன்னது பலிக்கும்.

பூதிய சரங்கவினியல்பு கூறுகின்றார்

கேளிதனை நிலநீருங் குணமே யாகும்
கெர்ப்பமெனி லாணாகுங் கிளர்ந்தா ராயின்
நாளின்மிகு லாபங்கள் சாந்தி போக்கு
நன்றாகு மங்கிதனி லரங்கம் வெல்லும்
வாளமரிற் பொல்லாது கெர்ப்பங் கேடாம்
வாயுவெனிற் பெண்ணாகும் மற்போர் தோற்கும்
நீள்விசும்பில் தனுவித்தை யோகந் தானும்
நீடுமிக கெர்ப்பமெனில் அலியாய் வீயும். (23)

கேள் இதனை நிலத்திற்கும் நீரிற்கும் குணமாம் கெர்பமெனில் ஆணாகும். கிளர்ந்தொருவன் வினவில் நாளின் மிகுலாபங்கள் சாந்தி போக்கு நன்றாகும். அங்கியில் அங்கம் வெல்லும் - வான் அமரில் பொல்லாது - கெர்பம்கேடாம் - வாயுவெனில் பெண்ணாகும் - மற்போர்தோற்கும் - நீள் விசும்பில் தனுவித்தை போதந்தானும் - நீடுமிக கெற்ப மெனில் அலியாய் வீயும்.

பஞ்ச பூதங்களை ஒட்டிய பலன் இதில் கூறப்படுகிறது. சரம் பார்ப்பவர் தனக்கு எந்த பூதத்தைச் சார்ந்து சரம் நடைபெறுகிறது என்பதைக் கவனித்துப் பயன்களை அறிய வேண்டும்.

நிலம் நீர் இந்த இரண்டு பூதங்களைச் சார்ந்து சரம் நடந்தால் உத்தமம். அப்போது ஒருவன் வந்து கெர்பத்தைப் பற்றிக் கேட்டால் ஆண் குழந்தை பிறக்கும் என்று உறுதியாகக் கூறிவிடலாம். வியாபாரத்தைப் பற்றிக் கேட்டால் லாபங்கள் மிகுதியாய் உண்டாகும் என்று கூறலாம். சாந்தி கழிப்பு போன்ற காரியங்களைச் செய்ய நல்ல பலன் கிடைக்கும்.

தேயு - நெருப்பு அம்சமான சரம் ஓடுமானால் - கேள்வி போரைப் பற்றியதானால் வெற்றி உண்டு. ஆனால் வாட்போரானால் மத்திமம்

பலனையே சொல்ல வேண்டும். கெர்பத்தைப் பற்றிக் கேட்டால் அது அழிந்து போகும் என்றே சொல்ல வேண்டும்.

வாயு சரம் நடக்கையில் கேட்பானாகில் கெர்பத்தைப் பற்றி என்றால் பெண் குழந்தை என்றும் போர் என்றால் தோல்வியில் முடியும் என்றும் கூற வேண்டும்.

ஆகாய சரம் நடக்கும்போது கேட்பானாகில் அது விற்போரானால் வெற்றி உண்டு. செர்பத்தைப் பற்றிய கேள்வியானால் பிறக்கும் குழந்தை அலியாக இருக்கும் என்றே கூற வேண்டும்.

திதிவார நட்சத்திரக்கால சரபலன்முன் 4-ங் கவியிலும் 35-ங் கவியிலும் சொல்லியபடி பிராதக்-காலத்தில் சரம் பார்க்கவேண்டிய கிரமத்தில் விசேஷமாய் பார்க்க வேண்டுவது.

வீயாத பிரதமை முன் விளங்கும் பக்கம்
விரவிவரும் முப்பதினாம் மும்மூன்றாக
மாயாது வருஞ்சோமன் இடம தாக
வருகின்ற அருக்கனுக்கும் வலம தாகச்
சாயாது புதன்வெள்ளி திங்கள் மூன்றுந்
தப்பாது சந்திரனாஞ் சாற்றுங் காலை
தேயாது கதிர்செவ்வாய் சனிவி யாழஞ்
செங்கதிரோன் தினமென்று தேறு நீயே. (24)

வீயாத பிரதமை முதல் விளங்குப் பக்கம் விரவிவரும் முப்பது நாளும் மும்மூன்றாக மாயாது வரும் - சோமன் இடமதாக - வருகின்ற அருக்கனுக்கு வலமதாகச் - சாயாது புதன் வெள்ளி திங்கள் மூன்றும் தப்பாது சந்திரனாம் - சாற்றுங்காலை தேயாது கதிர் செவ்வாய் சனி வியாழம் செங்கதிரோன் தினமென்று தேறுவாயே.

பக்கம் = பட்சம். வளர்பிறை தேய்பிறை என்று இரு பட்சங்கள். ஒரு பட்சத்தில் பிரதமை முதலாகப் பதினைந்து திதி - இருபட்சங்களும் சேர்ந்து முப்பது நாட்கள்.

திதிகளில் சரம் நடக்க வேண்டிய விதம் யாதெனில் வளர்பிறைக் காலத்தில் பிரதமை, துவிதியை, திரிதியை மூன்றுக்கும் இடப்பக்கத்தில் சந்திரகலை நடக்க வேண்டியது.

மும்மூன்றாக என்று கூறியதால் அடுத்த சதுர்த்தி பஞ்சமி சஷ்டி மூன்றிற்கும் சூரியகலை வலப்பக்கமாக வரவேண்டும்.

சப்தமி, அஷ்டமி, நவமி மூன்றிற்கும் சந்திரகலையும், தசமி ஏகாதசி துவாதசி மூன்றிற்கும் சூரியகலையும் பின் திரயோதசி, சதுர்தசி, பௌர்ணமி மூன்றிற்கும் சூரியகலை நடைபெற வேண்டும்.

தேய்பிறைக்கு சொன்னதற்கு மாறாக பிரதமை, துவிதியை, திரிதியை மூன்றிற்கும் சூரியகலை உதித்து நடக்க வேண்டும். முன்கூறியபடியே மூன்று திதிகளுக்கு ஒன்றாக சரம் மாறி மாறி நடக்க வேண்டும்.

மேலே கூறியது திதிசரம், வாரசரம், எவ்வாறு எனில் திங்கள் வெள்ளி புதன் மூன்று நாட்களுக்கும் இடது நாசியில் சந்திர சரம் ஓடவேண்டும். ஞாயிறு, செவ்வாய், வியாழன், சனி நான்கு நாட்களுக்கும் வலது நாசியில் சூரிய சரம் ஓடவேண்டும்.

வார சரம் திதிசரம் பஞ்ச பூத சரம் இவையாவற்றையும் அனுசரித்து பலன் காண வேண்டும். இவை ஒன்றுக்கொன்று கலந்தும் நடைபெறக்கூடும். ஆகையால் தக்க குருவின் மூலமாகவும் அனுபவ வாயிலாகவும் தெரிந்து கொள்ள வேண்டும். எல்லாவற்றையும் விளக்கிக் கூறினாலும் ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது என்பதுபோல நூலறிவு மட்டுமே போதாது. ஏனென்றால் நுட்பமாக சரம் பார்ப்பதற்கு நன்கு பயின்று தேர்ச்சி பெற வேண்டும்.

இதனுள் நக்ஷத்திரங்களுக்கு நடக்கவேண்டிய கால சரமும் இதன்மேற் கவியிற் கூறிய வாரங்களுக்குரியனவாகிய கால சரங்கள் சரிவரில் இடரில்லை பிழைக்கில் இன்னவின்ன நிகழுமென்றுங் கூறுகின்றார்.

தேறிடுநீ யொன்பது நாள் பூர மாதி
சிறந்தரோ கிணிசதய முத்திரட் டாதி
கூறிடுஞ் செங் கதிரோனா ளாகக் கொள்க
கூறாநாள் அடையமதிக் கென்று கொள்க
வீறிடுஞ்செங் கதிர் பிழைக்கி னோய்கா ரிக்கு
மிடித்திடுமண்டலஞ் சேய்க்கு வெம்போர் சாவாம்
பாறிடும்பொன் பிழைக்கின் மன்னர் கேடாம் புந்தி
பதிக்கதிபன் கெடுமிந்து கிளைஞர் போக்கே. (25)

தேறிடுநீ பூரம் ஆதி ஒன்பது நாள் திறந்த ரோகிணி சதயம் உத்திரட்டாதி கூறிடும் செங்கதிரோன் நாளாகக் கொள்க கூறாநாள் அடைய மதிக்கு என்று கொள்க வீறிடும் செங்கதிர் பிழைக்கில் நோய் காரிக்கு மிடித்திடு மண்டலம் - சேய்க்கு வெம்போர் சாவாம் பாறிடும் பொன் பிழைக்கில் மன்னர் கேடாம் - புந்தி பதிக்கு அதிபன் கெடும் - இந்து கிளைஞர் போக்கே

பூரம் ஆதி ஒன்பது நாள் பூரம், உத்திரம், அஸ்தம், சித்திரை, சுவாதி, விசாகம், அனுஷம், கேட்டை, மூலம் இவற்றோடு ரோகிணி சதயம் உத்திரட்டாதி ஆகிய மூன்று நாட்களையும் சேர்த்துக் கொள்ளவேண்டும். செங்கதிர் = சூரியன். மதி - சந்திரன். காரி = சனி. சேய் = செவ்வாய். பொன் = குரு. புந்தி = புதன்.

இப்பாடலில் நட்சத்திர சரம் கூறப்படுகிறது.பூரம் முதலாக ஒன்பது நாள் என்றது பூரம், உத்திரம், அஸ்தம், சித்திரை, சுவாதி, அனுஷம், கேட்டை, மூலம் என்பவையாம். இவற்றோடு ரோகிணி, சதயம், உத்திரட்டாதி ஆக மூன்று நட்சத்திரங்களையும் சேர்த்துக் கொண்டு பனிரெண்டு நாட்களும் உதயம் முதல் சூரிய சரம் நடக்க வேண்டும். மற்றைய பதினைந்து நட்சத்திரங்கள் சந்திரனுடைய சரம் நடக்க வேண்டும்.

சரம் தவறாக நடந்தால் எந்த கிரகத்தினுடைய சரம் தவறாக நடக்கிறதோ அதற்குத் தக்கபடி பலன். சூரியன் தப்பினால் நோய். சனி தவறினால் தரித்திரம். செவ்வாய் தவறினால் போரில் மரணம். குரு தவறினால் நாட்டு மன்னருக்கு கேடு, என்பதால் மன்னர் கேடுருவதால் அதனால் வரும் துன்பம் தனக்கும் உண்டாகும் என்றும் அல்லது மன்னரால் தனக்கு கேடு வரும் என்றும் எடுத்துக் கொள்ள வேண்டும்.

புதன் தவறினால் அந்த பதிக்கு அதிபன் கெடும் என்றது. அவ்வூர் அல்லது அவன் செய்யும் தொழிலுக்கு உரியவன் என்பதுபோல் அடுத்துள்ள மேலாளரைக் குறிப்பதாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

சந்திரன் தப்பினால் உற்றார் உறவினர்க்குத் துன்பம் உண்டாகும் அல்லது உறவினர் தன்னை விட்டுப் பிரிந்துப் போக நேரலாம்.

இதன்மேற் கவியிற்கூறாத வெள்ளிபிழைக்கில் நிகழ்வன விவையெனவும் மற்றதன்மேற்கூறிய திதிபிழைக்கில் நிகழ்வன விவையெனவுங் கூறுகின்றார்.

போக்கரிய புகர் பிழைக்கில் ஊர்விட்டேகல்
பொருந்தியதோர் மெய்ந்நோதல் புணர்ந்தோர் சாதல்
ஆக்கமதி லிடராம்முற் பக்கந் தன்னில்
அருங்கலகம் இரண்டாகில் அர்த்த நாசம்
ஊக்கமுடன் மூன்றதனிற் போக்குண் டாகும்
உரைத்தநான் கிற்கிளை ஞர்க் குறுநோ யுண்டாம்
தேக்கியவைந் திற்றேச மலையும் ஆறிற்
செகத்தரசன் கெடும்ஏழிற் சேரும் நோவே. *(26)*

போக்கரிய புகர் பிழைக்கில் ஊர் விட்டு ஏகல் - பொருந்தியதோர் மெய் நோதல் - புணர்ந்தோர் சாதல் - ஆக்க மதில் இடரா முற் பக்கந்தன்னில் அருங்கலகம் - இரண்டாகில் அர்த்த நாசம் - கிளைஞர்க்கு உறுநோய் உண்டாம் - தேக்கிய ஐந்தில் தேகம் அலையும் - ஆறில் செகத்தரசர் கெடும் - ஏழில் சேரும் நோவே.

புகர்	-	சுக்கிரன்
மெய்நோதல்	-	உடலுக்கு நோயாலேனும் பிறவாற்றாலேனும் வருத்தம்
புணர்ந்தோர்	-	தன்னைச் சேர்ந்தவர்கள். மனைவி எனலும் ஆம்
ஆக்கம்	-	செல்வம். செல்வம் உண்டாக்கும் வழிகள்
அருங்கலகம்	-	தீராப்பகை - சண்டை
அர்த்த நாசம்	-	பொருள்நாசம்
கிளைஞர்	-	சுற்றத்தார். பிள்ளைகளையும் குறிக்கும்
உறுநோய்	-	துன்புறுத்தும் படியான நோய்
தேகம் அலையும்	-	உடலுக்குத் துன்பம் உண்டாகும்
செகத்தரசன் கெடும்	-	நாட்டினை ஆள்பவர்க்குக் கேடு உண்டாகும்

சுக்கிரன் தவறினால் தான் இருக்கும் ஊரைவிட்டுச் செல்ல வேண்டிய நிலமை ஏற்படலாம். அதாவது கஷ்டப்பட்டு துன்பத்தோடு செல்ல நேரிடும் என்பதையே குறிக்கும். மேலும் தொடர்ந்து உடல் வருத்தம் நெருங்கியவர்கள் மரணம். கணவன் அல்லது மனைவியின் மரணம் என்றும் எடுத்துக் கொள்ளலாம். தவிர மரணம் என்பதை சாவு என்றே நினைக்க வேண்டியதில்லை. சண்டை, சச்சரவு, நோய் முதலியவற்றால் பிரிவு ஏற்படுவதையும் குறிக்கும்.

வளர்பிறை காலத்தில் சரம் தப்பினால் உண்டாகும் பலன்கள்

பிரதமை - துன்பம்
துவிதியை - கலகம்
திரிதியை - பொருள் நாசம்
சதுர்த்தி - உறவினர் துன்பம்
பஞ்சமி - உறவினர் நோய்
சஷ்டி - அரசனுக்கும், மக்களுக்கும் துன்பம் ஏற்படுவதால் அத்துன்பம் தனக்கும் உண்டாகும் என்பதை அறிக
சப்தமி - நோய்வாய்ப்படல்

திதிபிழைக்கில் நிகழ்வன விவையென்றும் சந்திரசூரியரில்புங் கூறுகின்றார்

நோவுடனே சாவாமெட்டாகில் மற்றை
நுவலாத பக்கமுமிம் முறையே கொள்க
தாவில்வெங் கதிரதனின் மதிய மூண்டாஞ்
சந்திரனுள் வெங்கதிருந் தப்பா துண்டாம்
ஓவரிய இவர்களையே உணரும் போதில்
உற்றசரங் குருமுகத்தா லுணர்ந்து கொள்க
தேவர்பிரா னுரைத்தருள உமையாள் கேட்ட
செவ்வியிதன் முறைமைதனைத் தெளிந்து தேறே. (27)

நோவுடனே சாவுமாம், எட்டாகின் மற்றை நுவலாத பக்கமும் இம்முறையே கொள்க - தாவில் வெங்கதிரதனின் மதியம் கண்டார். சந்திரனுள் வெங்கதிரும் தப்பாது உண்டாம் - மோவரிய இவர்களையே உணரும் போதில் உற்ற சரம் குருமுகந்தால் உணர்ந்து கொள்க - தேவர் பிரான் உரைத்து அருள உமையாள் கேட்ட - செல்வி இதன் முறைமைதனைத் தெளிந்து தேறே.

நுவலாத - (முன்) சொல்லாத
அஷ்டமி - நோயும், மரணமும்

அஷ்டமி வரை மட்டுமே பலன் சொல்லப்பட்டிருக்கிறது. மற்ற திதிகளுக்கும் இதே போல் கெடுதல் உண்டாவதை கணக்கிட்டுக் கொள்ள வேண்டும்.

வளர்பிறைக்கு மட்டுமே பலன் சொல்லப்பட்டிருந்த போதிலும் தேய்பிறைக்கும் இதேபோல் ஒவ்வொரு திதிக்கும் பலன் தெரிந்துக்

கொள்ள வேண்டும். இவை தவிர சூரியசரம் நடக்கும் பொழுது அதற்குள் சந்திரனும், சந்திர சரம் ஓடும் போது அதற்குள் சூரியனும் ஓடுவது உண்டு. இவையெல்லாவற்றையும் தனித்தனியே அறிந்து கொள்வதென்பது நீண்டகாலப் பயிற்சியின் மூலமாகவே முடியக்கூடியதாகும். தவிர குரு அருளும் வேண்டும். குருவினால் தொட்டுக்காட்டப்படாத எந்தக் கலையிலும் ஒருவர் வெற்றி பெறமுடியாது.

மேற்கவிகளிற் கூறிய சரம் பிழைக்கில் இடர்வரும் வந்தாலும் அதற்கு உபசாந்தம் கூறுகின்றார்

தெளிகதிர்செய் மூன்றடியாந் தெற்கு மந்தன்
செம்பொன் மூன்றடி மேற்குத் திங்கள் வெள்ளி
இளகியநா லடிவடக்குப் புந்தி முன்போல்
இரட்டையடி கிழக்கிரவி யெழுதல் முன்னே
வளமுடனே பூரணபக் கத்திற் சென்று
வந்திருந்து நமைநினைந்து வழுத்தல் செய்தே
உளமகிழ்ந்து போகிலெல்லாம் பலிக்குந்துன்பம்
உண்டாகா தவையனைத்தும் உணர்ந்து தேறே. (28)

தெளிகதிர் சேய் மூன்றடியாம் - தெற்கு மந்தன் - செம்பொன் மேற்கு மூன்றடி திங்கள் வெள்ளி இளகிய நாலடி வடக்கு - புந்தி முன்போல் இரட்டை அடிக் கிழக்கு இரவி எழுதன் முன்னே வளமுடனே பூரண பக்கத்திற் சென்று வந்திருந்து - நமை நினைந்து வழுத்தல் செய்தே - உளமகிழ்ந்து போகில் எல்லாம் பலிக்கும் - துன்பம் உண்டாகா. இவை அனைத்தும் உணர்ந்து தேறே.

கதிர்	-	சூரியன்
சேய்	-	செவ்வாய்
மந்தன்	-	சனி
பொன்	-	குரு
திங்கள்	-	சந்திரன்
வெள்ளி	-	சுக்கிரன்
புந்தி	-	புதன்

நமை நினைத்து வழுத்தல் செய்தே-இங்கு இந்நூலைக் கூறுபவர் சிவ பெருமானாகையால் சிவபெருமானை நினைத்துத் துதிசெய்து,

முன்பாடல்களில் கூறியபடி சரம் தப்புங்கால் அதற்குப் பரிகாரமாக உபசாந்தி செய்யும் முறைகளை இப்பாடலில் கூறுகிறார்.

சூரியன் செவ்வாய் தப்பினால் சூரியோதயத்திற்கு முன்பு எழுந்து ஞாயிறு செவ்வாய் கிழமைகளுக்கு தெற்கு திசையில் மூன்று அடிசெல்ல வேண்டும். பிறகு சரத்தைப் பூரணமாக்கி திரும்பித் தான் செல்ல வேண்டிய நிலையில் போகலாம்.

சனிக்கிழமை, வியாழக்கிழமைகளுக்கு மூன்றடி மேற்கேபோய் சரத்தைப் பூரணமாக்கிக் கொண்டு பின் திரும்பிச் செல்லலாம்.

திங்கள், வெள்ளிக் கிழமைகளுக்கு நான்கு அடி வடக்கே போய்த் திரும்ப வேண்டும். புதன் கிழமைக்கு இரண்டடி கிழக்கே போய்த் திரும்ப வேண்டும்.

திரும்பிய உடன் உடனே தான் மேற்கொண்ட பிரயாணம் அல்லது மற்ற காரியத்தில் சென்று விடாமல் உசிதமான ஒரு நல்ல ஆசனத்தில் அமர்ந்து சிவபெருமானைத் துதிசெய்து பிறகு எதையும் செய்ய நலமாம். பாடலில் நமை நினைந்து வழுத்தல் செய்தே என்று வருகிறது. சிவபெருமானே கூறுவதாக நூல் அமைந்துள்ளதால், சிவபெருமானையே நினைத்து துதிக்க வேண்டும் என்று கூறப்பட்டது.

இதன் மேற்கவிகளிற் கூறிய ஒருவாரத்திற்குச் சரந்தப்பில் இன்னின்னவையாமெனவுங் கூறுகின்றார்.

தேறுநீ யிவ்வையெலாஞ் செவ்வி தாகச்
செங்கதிரோன் தன்னாளிற் றிங்க ளோடி
மாறிவருங் கதிரவனுஞ் சோம நாளில்
மறிந்தோடி வருங்கிழமை யேழு மாறிற்
கூறுபடவுட லுயிர்விட் டேகு மென்க
குணமாகு மிக்கிழமை கோணா தோடில்
சீறிவருங் காலனையுஞ் செயிப்பர் மற்றச்
சித்தயோ கத்துநிலை சித்தி யாமே. (29)

தேறுநீ இவை எல்லாம் செவ்விதாக செங்கதிரோன் தன் நாளில் திங்கள் ஓடிமாறி வரும் கதிரவனும் சோமன் நாளில் - மறிந்து ஓடி வரும் கிழமை ஏழும் மாறில் - கூறபட உடல் உயிர் விட்டு ஏகும் என்க

குணமாகும் இக்கிழமை - கோணாது ஒடில் சீறிவரும் காலனையும் செயிப்பர் மற்றுஞ் சித்த யோகத்து நிலை சித்தியாமே.

செவ்விதாக = ஒழுங்காக - செம்மையாக
மறிந்தோடி = மாறுபட்டு நடந்து

கூறபட உடல் உயிர் விட்டு ஏகும் - உடல் உயிர் என்ற இரண்டும் இரண்டு கூறாகப் பிரியும் படியாக உடலை விட்டு உயிர் பிரிந்து செல்லும்.

கோணாது ஒடில் - மாறுபடாமல் நடந்தால்
சித்தயோகத்து நிலை - சித்தர்கள் யோகங்களின் பலனாய் அடைந்துள்ள நிலை
சித்தியாம் - தனக்குக் கைகூடும்.

தொடர்ந்து ஏழு நாட்களுக்கு சரம் தப்பி ஓடினால் உண்டாகும் பலன் இப்பாடலில் கூறப்படுகிறது.

சூரியன் நாளில் சந்திர சரமும், சந்திரன் நாளில் சூரியன் சரமுமாக இப்படி ஏழு நாட்களுக்கு தொடர்ச்சியாக சரம் மாறி நடைபெற்றால் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்று தெரிந்து கொள்க. அவ்வாறு இல்லாமல் ஒழுங்காக சரம் நடைபெற்றால் காலனையும் வெல்லக் கூடிய சக்தி உண்டாகும். மேலும் அஷ்டமா சித்திகளும் பெற்றுச் சீவன் முத்தனாக வாழ்ந்திருப்பான்

குறிசொல் மார்க்கம் கூறுகின்றார்

சித்தமுட னிரேசகத்தில் வந்து கேட்டாற்
செப்பியவப் பொருள்களெல்லாந் தீதே யாகும்
உத்தமமாம் பூரகத்தில் வந்து கேட்டால்
உரைத்தபொருள் அத்தனையும் உண்மையாகும்
மெய்த்திய கும்பகத்துரைக்கில் நன்றேயாகும்
வேண்டாரை ரேசகத்தில் விளியப் பார்க்க
வைத்தமலம் வாயுநீர் கழிபோ தென்னின்
மாற்றலர்தாங் கெடுவரிது மாறி லாதே. (30)

சித்தமுடன் ரேசகத்தில் வந்து கேட்டால் செப்பிய அப்பொருள்கள் எல்லாம் தீதே ஆகும் - உத்தமமாம் பூரகத்தில் வந்து

கேட்டால் உரைத்தப் பொருள் அத்தனையும் உண்மையாகும். மெய்த்தியகும்பகத்து உரைக்கில் நன்றேயாகும். வேண்டாரை ரேசகத்தில் விளியப் பார்க்க வைத்த மனம் வாயு நீர் கழிபோது என்னின் மாற்றலர் தாம் கெடுவரிது மாறிலாதே.

ரேசகம் - மூச்சு வெளியேறும் சமயம்
பூரகம் - மூச்சு உட்கொள்ளும் சமயம்
கும்பகம் - மூச்சு உள்ளே நிற்கும் சமயம்

ஒருவன் சரம் பார்க்க வரும்போது சரம் பார்ப்பவர்க்கு ரேசகம் நடந்து கொண்டிருந்தால் அவர் கேட்ட காரியம் பலிக்காது. எதை எடுத்தாலும் தீமையில் முடியும்.

மூச்சு பூரகத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பொழுது வந்து கேட்பவருக்கு எல்லாக் காரியமும் பலிக்கும். வெற்றி உண்டாகும்.

கும்பகத்திலானாலும் நன்மையே உண்டாகும்.

மேலும் வாயு, நீர், மலம் கழிகின்ற பொழுது ஒருவன் வந்து சரம் கேட்பானாகில் அவன் எதைப்பற்றி கேட்டபோதிலும் தீதே உண்டாகும். இதற்கு மாற்றமே கிடையாது.

சனி வியாழன் பலன் கூறுகின்றார்.

மாறிவள ரும்பக்கங் குறையும் பக்கம்
மதிநாடி கதிர்நாடி வளர்பொன் னோடிற்
பேறுமிக வுண்டாகும் பிராண னிற்கும்
பின்புரைத்த காரியங்க ளெல்லா மேழாய்க்
கூறுகின்ற சனிநாளிற் பகலி ராவிற்
குலவுசரம் வலமிடத்திற் கோணா தோடின்
நாறுமலர்ப் பெருந்திருவே சொன்னோ மிந்த
ஞாலமெங்கும் புகழ்பெறவே நடக்கு மென்றே. (31)

மாறிவளர் பக்கம் குறையும் பக்கமதில் நாடி கதிர்நாடி வளர் பொன் ஓடில் பேறுமிக உண்டாகும் - பிராணன் நிற்கும் - பின்பு உரைத்த காரியங்கள் எல்லாம் பேறு ஆம் - கூறுகின்ற சனி நாளில் பகல் இரவிற்கு குலவு சரம் வலமிடத்திற்கு கோணாது ஓடில். நாறுமலர்ப் பெருந்திருவே சொன்னோம் இந்த ஞாலம் எங்கும் புகழ் பெறவே நடக்கும் என்றே.

வளர்பக்கம் - வளர்பிறைக் காலம், அதில் பூரணமான நாள் பௌர்ணமி
குறைபக்கம் - தேய்பிறைக் காலம், அதில் பூரணமான நாள் அமாவாசை
மதி - சந்திரன்
கதிர் - சூரியன்
பேறு - செல்வம்
ஞாலம் - உலகம்

நாறுவளர் பெரும்திரு - நறுமணமுள்ள நறு மலர்களைச் சூடிய திருமகள் போன்றவளே

வளர்பிறைக் காலத்தில் குருவாரமாகிய வியாழக்கிழமையில் சந்திரனும் தேய்பிறைக் காலத்தில் குருவாரமாகிய வியாழக்கிழமையில் சூரியனும் தவறாமல் நடந்து கொண்டே வந்தால், அவனுக்கு சிறந்த செல்வங்கள் கிடைக்கும்.

சனிக்கிழமைகளில் இரவில் சந்திர சரமும், பகலில் சூரிய சரமும் மாறுப்படாமல் நடந்து வந்தால் உலகோர் மெச்சத் தகுந்த புகழும் உண்டாகும்.

குறி சொல்லும் மார்க்கம் கூறுகின்றார்

நடப்புடைய ஒருவனெங்கென் றொருவன் கேட்கில்
நானிலத்தில் அகத்திருப்பன் நன்னீர் முற்றம்
அடக்குமழு வாகிலுள்ளூர் வாயு வேற்றூர்
அம்பரமேல் மலையேறற் றுயில வாகும்
விடப்போனான் புவிக்குநிலை நீர்க்கு மீண்டான்
வெவ்வழற்கு வருகின்றான் வெயில் காலுக்கு
மடற்குழலாய் ஊர்வந்தான் வான மாகில்
வருவனொரு நாழிகையில் மாறி லானே. (32)

நடப்பு உடைய ஒருவன் எங்கே என்று ஒருவன் கேட்கில் நானிலத்தில் அகத்திருப்பன் நன்னீர் முற்றம் - அடக்கும் மழுவாகில் உள்ளூர் - வாயுவேற்றூர் அம்பலம் என் மலைமேல் துயிலலாகும் விடப் போனால் - புவிக்கு நிலை நீர்க்கு மீண்டான் - வெவ்வழற்கு வருகின்றான் - வெயில் காலுக்கு மடற்குழலாய் ஊர்வந்தான் - வானமாகில் வருவன் ஒரு நாழிகையின் மாறிலானே.

ஒருவன் சரம் பார்ப்பவரிடம் வந்து தன்னை விட்டுப் பிரிந்து சென்றவன் எங்கு இருக்கிறாள் என்று கேட்பானாகில், அப்போது நடைபெறும் பூதசரம் கொண்டு பதில் சொல்வது பொருத்தமாகும்.

அப்போது சரம் பார்ப்பவர்க்கு பூமி சரம் நடந்து கொண்டு இருந்தால், அவன் அருகிலேயே இருக்கிறான் என்றும் அப்புசரம் நடைபெற்றால் முற்றத்தில் இருக்கிறான் என்றும், தேயுவாகில் உள்ளூரில்தானே இருக்கிறான் என்றும், வாயுவாகில் வேற்றூரில் இருக்கிறான் என்றும் ஆகாய சரம் ஆகில் மலைமேல் தூங்கிக் கொண்டிருக்கிறான் என்றும் கூற வேண்டும்.

வெளிநாடு சென்றவனைப் பற்றிக் கேட்டால் கேட்டபோது பிருதிவி சரம் நடைபெற்றால் அவ்வூரிலேயே தங்கிவிட்டான் என்றும், அப்புச்சரம் நடைபெற்றால் திரும்பி வருவான் என்றும், தேயுசரம் நடைபெற்றால் அவன் அப்போது புறப்பட்டு வந்து கொண்டிருக்கிறான் என்றும், வாயு சரமானால் ஊருக்கு வந்து சேர்ந்து விட்டான் என்றும், ஆகாய சரம் ஆனால் ஒரு நாழிகை நேரத்திற்குள் வந்து சேர்ந்து விடுவான் என்றும் கூற வேண்டும்.

இச்சரம் மனத்துடன் வயப்பட்டால் இன்னவையாமெனக் கூறுகின்றார்.

மாறிவரு வாயுமனோ வலயந் தன்னில்
மயக்கவுயிர் சித்திநிற்க அதுதா னிற்கும்
கூறுசம யங்கூற்றாற் பயமு மில்லை
குறித்திருமண் ஒன்றரைநா ழிகையாகக் கொள்க
தேறுபுனற் கொன்றேகால் வன்னிக் கொன்று
சீவன் முக்கால் வானமரை சிறந்த நாடி
பாறுமைந்து நாழிகைக்குள் வரினற் குன்றிற்
பழுதுபடு முடம்பிலிது பற்றிப் பாரே. (33)

மாறி வரும் வாயு மனோவலயந்தன்னில் மரிக்க உயிர் சித்தி நிற்க அதுதான் நிற்கும் கூறு சமயம் கூற்றால் பயமுமில்லை. குறித்திரு மண் ஒன்றரை நாழிகையாக கொள்க - தேறு புனல் ஒன்றே கால் - வன்னிக்கு ஒன்று சீவன் முக்கால் - வானம் அரை சிறந்த நாடி - பாறுமைந்து நாழிகைக்குள் வரினற்குன்றில் பழுதுபடும் உடம்பில் இது பற்றிப் பாரே.

இடது பக்கத்திலும் வலது பக்கத்திலும் மாறி மாறி நடக்கின்ற சரம் என்ற வாயுவானது உடலுக்குள் வசப்பட்டு அசையாமல் நிற்குமானால் உயிருக்கு ஆபத்து இல்லை. அவ்வாறு வசப்பட்டு நின்றாலும், எமனால் பயமில்லை. மற்ற அங்கங்களுக்கும் வேலையில்லை. அவ்வாறு மாறாது இடம் வலமாக நடக்குங் காலத்தில் பஞ்ச பூதங்களையும் நிற்கும் நேரத்தை பகுத்து கூறுங்கால் பிருதிவி பூதத்தில் ஒன்றரை நாழிகையும், அப்பு பூதத்தில் 1¼ நாழிகையும், அக்னி பூதத்தில் ஒரு நாழிகையும், வாயு பூதத்தில் முக்கால் நாழிகையும் ஆகாய பூதத்தில் அரை நாழிகையுமாக ஐந்து நாழிகை மூலம் நடக்க வேண்டும். அவ்வாறில்லாமல் நாழிகை குறைந்தாலும் கூடினாலும் உடல் நலிவு உண்டாகும். அதனால் பூதங்களிடையே நடக்கும் வாயு நன்கு நடைபெறச் செய்ய வேண்டும். அது தன்னுள் லயபட வழி தேடுவதும் அவசியமாகும். (இந்த தேகத்தை எடுத்தவர் அதனால் தகுந்த பயன் அடைய வேண்டுமானால் வாயு லயப்படச் செய்ய வேண்டியது மிகவும் அவசியமாம்)

சித்தர் வாழ்நாட் பிரமாணமறியும் அயன சங்கற்பம் கூறுகின்றார்.

பற்றினுஞ் சொன்னபடி பயணம் முன்னாட
பாலொருபோ துண்டுபரி சுத்தனாகி
மற்றைநா ளுத்தரமாம் அயனந் தன்னில்
மாறியிடந் தனிலோடும் வலந்தெற் காகும்
பெற்றதொரு நாழிகைதா னைந்து நூறாம்
பெருங்கடிகை தனிற்குறையிற் பிராண நாசம்
உற்றொருமா நாழிகைக்கோ ராண்டு தாழும்
உமையே நான் சொன்ன கணக்குண்மை தானே. (34)

பற்றி நான் சொன்னபடி பயணம் முன்னாள் பால் ஒரு போதும் உண்டு பரிசுத்தனாகி - மற்றைய நாள் முத்தரமாம் அயனம் தன்னில் மாறி இடந்தனில் ஓடும் வலம் தெற்காகும் - பெற்றதொரு நாழிகைதான் ஐந்து நூறாம் பெறும் கடிகை தனில் குறையில் பிராணன் நாசம் - முற்றொருமா நாழிகைக்கு ஓர் ஆண்டு தாழும் உமையே நான் சொன்ன கணக்கு உண்மைதானே.

சரம் பார்க்கிறவர் தான் இன்னும் எத்தனை நாள் வாழ முடியும்? தன்னுடைய ஆயுட்காலம் எவ்வளவு? என்பதை அறிந்து கொள்வதற்கு

ஒரு வழி உள்ளது. அதற்கு அயன சரம் என்று பெயர். ஆடி மாதம் முதல் தேதி முதல் சூரியன் தெற்கு நோக்கி நகரும் தட்சிணாயண காலம் என்றும், வடக்கு நோக்கி நகரும் காலம் தை மாதம் முதல் தேதி முதல் உத்தராயண காலம் என்றும் சொல்வர். அயனம் ஆரம்பமாவதற்கு முதல் நாள் பகலில் ஒருபொழுது மட்டுமே உணவு உண்டு பரிசுத்தமாக இருந்து மறுநாள் உத்தராயண மாகிய தைமாதம் முதல் தேதி பொழுது விடிவதற்கு முன் ஐந்து நாழிகை இருக்கும்பொழுது சரம் பார்க்க வேண்டும். அவ்வாறு பார்க்கும் பொழுது வாரம், திதி, நட்சத்திரங்களை அனுசரிக்க வேண்டியதில்லை. சரம் இடது பக்கமாக ஐந்து நாழிகை நேரம் சிதறாமல் ஓட வேண்டும். தட்சிணாயணம் ஆடி மாதம் முதல் தேதியானால் சரம் வலது பக்கத்தில் ஓட வேண்டும். அவ்வாறு சரம் ஓடினால் சரம் பார்ப்பவர் தாம் செய்து வரும் பிராணாயாமம் முதலான அனுஷ்டானங்களின் பலனால் நூறு ஆண்டு காலம் உயிரோடு இருக்கமுடியும். அவ்வாறு இல்லாமல் ஐந்து நாழிகைக்கு குறைந்தால் ஒரு நாழிகைக்கு ஒராண்டு ஆக எத்தனை நாழிகை குறைகிறதோ அதற்கு தக்கபடி குறைத்துக் கொள்ள வேண்டியது.

அதாவது சரம் முற்றிலும் தவறாக ஓடினால் அவருக்கு நலிவு காலம் ஆரம்பமாகிவிட்டது என்று அறிந்து கொள்ளலாம்.

போசனவிதி கூறுகின்றார்

உண்பவனுக் கப்புவிட மதிக்கு வெய்ய
உவர்த்தல்கைத் தல்கார்த்தல் உண்க முன்னே
பண்பயில்செங் கதிர்க்கு நெய்பால் புளித்தல் கன்னல்
பாகுடனே துவர்த்தனமு னுண்டு பார்க்க
நண்பவை வயிற்குச் சோறு பாதி
நன்னீர்கால் காற்றுக்கா லாக நல்கிக்
கண்பயினா டிகள் சுத்தி பண்ணித் தூபங்
காட்டிமலர் சூட்டியிருள் கழியுங் காலே. (35)

உண்பவனுக்கு அப்புவிட மதிக்கு வெய்ய உவர்த்தல், கைத்தல் கார்த்தல் உண்க முன்பே - பண்பயில் செங்கதிருக்கு நெய் பால் புளித்தல் கன்னல் பாகுடனே துவர்த்த அமுது உண்டு பார்க்க நண்பு அவை வயிற்றிற்கு சோறு பாதி நன்னீர்கால் காற்றுக்காலாக நல்கி கண் பயில் நாடிகள் சுத்தி பண்ணி தூபங்காட்டி மலர்சூட்டி இருள் கழியுங் காலே.

சரம் பார்ப்பவர் வலது பக்கமாக சூரிய கலை ஓடும் நேரத்தில் மட்டுமே சாப்பிட வேண்டும் என்பதில்லை. சந்திரன் நடக்கும் போது சூடான பதார்த்தங்களும், உப்பு, கசப்பு, காரச் சுவைகள் உடைய அன்னங்களும் சாப்பிடலாம். சாப்பிடும் நேரத்தில் சூரியகலை இல்லாமல் இருந்தாலும் இவ்வகை உணவுகளை உண்ணலாம். அதே போல் சந்திரன் நடக்கும் காலத்தில் நெய், பால், புளிப்பு, தித்திப்பு, துவர்ப்பு சுவைகளுடைய பண்டங்களும் சாப்பிடலாம். அந்த நேரத்தில் சந்திரகலை நடவாமல் சூரிய கலை நடந்து கொண்டிருந்த போதிலும் சாப்பிடலாம்.

ஆனால் சூரிய சந்திர கலைக்காக காத்திராமல் அடுத்தடுத்து சாப்பிட்டுக் கொண்டே இருந்தாலும் சூரியகலை அல்லது சந்திர கலைகளில் ஒரே மாதிரியான உணவு உட்கொண்டு வந்தாலும் உடல் நலியும்.

உண்பது அரை வயிறே உண்ண வேண்டும். மீதி அரை வயிற்றில் ¼ பங்கு நீருக்காகவும், ¼ பங்கு காற்றுக்காகவும் ஒதுக்கிவிட வேண்டும். அளவாக உண்டு பிராணாயாமத்தின் மூலம் தசநாடிகளையும் சுத்தி செய்து மனம் சிதறாமல் ஒரே நினைவாக அமர்ந்து சரம் பார்க்க வேண்டும்.

சரத்தை ஏறவொட்டாமலும் குறைய வொட்டாமலும் தன் வசப்படுத்திக் கொள்ளும் மார்க்கம் கூறுகின்றார்.

கால்கொண்டு கணக்கறியவல்லார்க்கு யாதுந் தப்பா
கருதியவெல் லாமுடியுங் காண்போர்க் கெல்லாம்
மேல்கொண்ட புவியுடனே அப்பு வன்னி
விளங்கியகால் வானமுடன் வினவு வார்க்குப்
பால்கொண்ட மொழியாளே பவ்வனங் கட்டிப்
பற்றியவா றாதாரப் பரிசு பார்த்துச்
சால்கின்ற முதல்நாடி தன்னுள் நின்ற
தபனன்மதி செந்தழலாந் தன்மை பாரே. **(36)**

கால் கொண்டு கணக்கு அறியவல்லார்க்கு யாதும் தப்பா. கருதிய எல்லாம் முடியும் காண்போர்க்கெல்லாம் மேற் கொண்ட புவியுடனே அப்பு வன்னி விளங்கிய கால் வானமுடன் வினவு பார்க்கும் பால்

கொண்ட மொழியாளே பவழம்கட்டிப் பற்றிய ஆறாதாரப் பரிசுப் பார்த்துச் சால்கின்ற முதல் நாடி தன்னில் நின்ற தபனன்மதி செந்தழலாந் தன்மை பாரே.

வாயுவாகிய சரத்தைக் கொண்டு சரம் பார்க்க நன்கு அறிந்தவர்க்கு எல்லாம் சரியாகவே நடைபெறும். அவன் எடுத்த காரியம் முடியும். சரம் பார்க்க வருகின்றவர்களுக்கும் நன்மையே உண்டாகும். எவ்வாறு எனில் நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்ற பஞ்ச பூதங்களும் மூச்சை வசப்படுத்தி ஆறாதாரங்களில் நிற்கச் செய்து அவ்வாதாரங்களில் ஓடுகின்ற நாடிகளில் முதல் நாடியாகிய பிராணம் நாடியைத் தனக்குள் நிறுத்தி சூரியன், சந்திரன், அக்னி ஆகிய மூன்றினுடைய உடல்களையும் அவன் தனக்குள்தானே பார்க்கும் தன்மையுடையவனாக இருத்தலால் அவனிடமிருந்து கிளம்பும் ஒரு அபூர்வ ஆற்றல் எல்லோருக்கும் நன்மையே உண்டாகச் செய்யும்.

சரம் பார்க்கிறவனுக்கு நன்மை தீமை மரண காலமறியும்படி சாயா புருஷ தரிசனம் கூறுகின்றார்.

பாரிலொத்த நிலத்தகல்வான் களங்க மற்றால்
பத்தடிக்கு ளைந்தடியாம் பருவந் தன்னிற்
சீரியமெய் நிழல்கழுத்துக் கைகால் சென்னி
சிமிட்டிப்பார்த் திமையாமற் றிகழ்வான் பார்க்கில்
கூருருவம் பொன்கண்டாற் செல்வம் வெள்ளை
குறைவிலுயிர் செம்மையுயி ரிளைக்கும் குற்றம்
காருருநோய் ஆறுபிறை கைகால் குன்றின்
கங்குறையின் முப்பிறையிற் காட்டுஞ் சாவே (37)

பாரில் ஒத்த நிலத்து அகல் வான் களங்கம் அற்றால் பத்து அடிக்குள் அஞ்சு அடியாம் பருவம் தன்னில் சீறிய மெய் நிழல் கழுத்து, கால், சென்னி, சிமிட்டி பார்த்து இமையாமல் திகழ்வான் பார்க்கில் - கூர் உருவம் பொன் கண்டால் செல்வம் - வெள்ளை குறையில் உயிர் செம்மை உயிர் இளைக்கும். குற்றம் - கார் உரு நோய் ஆறுப்பிறை - கை கால் குன்றில் கங்குறையின் முப்பிறையில் காட்டும் சாவே.

இப்பாடலில் சாயாபுருஷ தரிசனம் பற்றிக் கூறுகிறார். சாயா புருஷன் என்றால் நிழல் உருவம் என்று பொருள், சாதாரணமாக நாம் நடக்கும்போதும், ஓடும்போதும் காணும் நிழல் அல்ல இது வானவெளியில்

காணும் நிழல் வானத்தின் நிழலைப் பார்க்க முடியுமா என்றால், ஆற்றல் உடையவர்களால் பார்க்க முடியும் என்றே நமது முன்னோர்களான சித்தர்கள் கூறியுள்ளனர். எல்லோராலும் பார்க்க முடியாது என்றாலும் அதற்குரிய நியமங்களை அனுசரிப்பவர்கள் பார்க்க முடியும்.

சாயா புருஷனைப் பார்க்க விரும்புபவர் மேடு பள்ளம் இல்லாத ஒரு இடத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அப்போது ஆகாயத்தில் மேகசஞ்சாரம் இல்லாமல் வெட்ட வெளியாக இருக்க வேண்டும். பகல் நேரத்தில் தன்னுடைய நிழல் 5 அடிக்கு குறையாமலும், 10 அடிக்கு மிகாமலும் அளவோடு இருக்கும் சமயத்தில்தான் பார்க்கவேண்டும். நிழலைப் பார்த்து கைகள் இரண்டையும் தொங்க விட்டபடி கண்களை இமைக்காமல் அந்த நிழலில் தலை, கழுத்து, கைகள், கால்கள் ஆகிய உறுப்புகள் எல்லாம் சரியாகத் தெரிகிறதா என்று பார்த்துக் கொண்டு அப்படியே கண் இமைக்காமல் அண்ணாந்து வானத்தைப் பார்த்தால் ஆகாயத்தில் அவனுடைய உருவம் தோன்றும்.

அவ்வுருவம் பொன்னிறமாக இருந்தால் அவனுக்கு செல்வம் உண்டாகும். வெண்மை நிறமாக இருந்தால் நீண்ட ஆயுள் உண்டாகும். செம்மையாக இருந்தால் ஆயுள் குறையும். கருப்பாக இருந்தால் துன்பம் உண்டாகும்.

தவிர அந்த நிழல் உருவத்தில் கையில்லாமல் அல்லது கால் இல்லாமல் ஊனமாக இருந்தால் ஆறுமாதங்களுக்குள் மரணம் ஏற்படும் என்று அறிய வேண்டும். தலையே இல்லாமல் உடல் மட்டும் தெரிந்தால் மூன்றே மாதத்தில் மரணம் ஏற்படும்.

பகற் காலத்தில் அல்லாமல் முழு நிலவு தோன்றுகிற இரவு நேரத்திலும் சாயா புருஷ தரிசனம் பார்ப்பது உண்டு.

அனுபவப்பட்ட ஞானிகள் பனிரெண்டு வருடகாலம் தொடர்ந்து சாயா புருஷ தரிசனம் பார்த்து வருகின்றவர்களுக்கு தன்முன் தோன்றும் அந்த நிழல் தன்னுடன் பேசும் என்று கூறுகிறார்கள். அதுவே தனக்கு அஷ்டமா சித்தியும் கைவரச் செய்யும் என்றும் கூறுகிறார்கள். மேலும் சிறிது காலம் சென்றபிறகு அந்த நிழல் தானே ஒரு உருவம் பெற்று பிறர் கண்களுக்கு புலப்படாமல் தன்னுடன் கூடவே வரும் என்றும் தான் நின்றால் அதுவும் நிற்கும், படுத்தால் அதுவும் படுக்கும் என்றும்

கூறுகிறார்கள். அதோடு தனக்கு வரக்கூடிய நன்மை தீமைகளையும் முன்பே தெரிவித்து எச்சரிக்கை செய்யும் என்றும் சொல்கிறார்கள்.

ஞானயோக மார்க்கங்களில் அந்த அளவு முன்னேறியவர்கள் யாராவது இருக்கிறார்களா என்று பார்க்கும் போது நமக்கு தெரியாது துரதிஷ்டவசமாக சித்தர்களின் நூல்கள் இந்நாள் வரை யார் கண்களிலும் படாமல் மறைந்தே இருந்தன. ஏதோ சிலர் அவ்வப்போது அந்நூல்களில் ஆர்வம் காட்டி வந்தனர். இக்காலத்தில் சித்தர்களின் நூல்களைப் பற்றி புதிய விழிப்பும் ஆர்வமும் ஏற்பட்டு வருவதால் யோகஞான நெறிகளில் பலபேர் ஈடுபடக்கூடும். அவர்கள் மேலே கூறப்பட்ட உண்மைகளை உணர்ந்து பிறர்க்கும் எடுத்துச் சொல்வார்கள் என்று எதிர்ப்பார்க்கிறோம்.

மரண இலக்கணம் வில்லுருவின் பயன் கூறுகின்றார்

காட்டியகால் நிழல்தனக்கு முன்பின் னாகக்
கடிபுனல்வாய் கொண்டகல்வான் களங்க மற்றால்
பூட்டியநீர் துகள்பிறக்க உமிழ்ந்தால் வானில்
பொருந்தியவில் ஐந்துருவாய்ப் பொலிந்து தோன்றும்
ஈட்டியவில் லுருவுளதேல் ஆண்டு வாழ்வன்
இதுமுறியில் அவ்வாண்டி னிறந்து போவன்
கோட்டியவில் லுருமுறிய அணங்கு தோன்றிற்
கொண்டு போம் பிறையாறிற் குறித்துக் கூறே. (38)

காட்டிய கால் நிழல் தனக்கு முன்பின் ஆக கடி புனல் வாய் கொண்டு அகல்வான் களங்க மற்றான் - பூட்டிய நீர்துகள் பிறக்க உமிழ்ந்தால் வானில் பொருந்திய வில் ஐந்து உருவாய் பொலிந்து தோன்றும் - மீட்டியவில் உருவுளதேல் ஆண்டு வாழ்வன் - இதுமுறியில் அவ்வாண்டில் இறந்து போவான். கோட்டிய வில் உருமுறிய அணங்கு தோன்றில் கொண்டுபோம் பிறை ஆறில் குறித்துக்கூறே.

சரம் பார்ப்பவர் தனக்கு மரணம் வரும் காலத்தை முன்னதாக அறிந்து கொள்ளும் வழியை இப்பாடலில் கூறுகிறார்.

வானம் களங்கமில்லாமல் இருக்க வேண்டும். மரம், செடி, வீட்டுத் தாழ்வாரம் முதலிய எதன் நிழலும் அருகில் படாமல் இருக்க வேண்டும். அப்படிப்பட்ட இடத்தில் நின்று கொண்டு வாய் நிறைய நீர்

எடுத்துக்கொண்டு அந்த நீர் சிதறாமல் பளிச்சென்று துப்பும்போது அந்நீர்த் திவலைகளில் 5 வர்ணம் கொண்ட வானவில் தோன்றும் - அப்படித் தோன்றும் வானவில் முழுமையாக ஒரே வடிவாக இருந்தால், ஓராண்டு காலத்திற்குத் தனக்கு மரணம் இல்லையென்று அறியலாம். அந்த உரு முறிந்து காணப்பட்டால் அந்த ஆண்டிற்குள் மரணம் நேரும் என்று அறிந்து கொள்ளலாம். அவ்வாறு முறிந்த வில்லில் அஞ்சத்தக்க வேறு உருவம் தோன்றினால் ஆறு மாதத்திற்குள் மரணம் நேரிடும்.

உரு முறிய அணங்கு தோன்றில் என்பதற்கு உருவம் முறிந்து பெண்ணின் உருவம் தோன்றினால் என்று பிறர் பொருள் கூறுகின்றார். அணங்கு என்பதற்கு பெண் என்பது மட்டும் பொருளல்ல. அதைவிட அச்சுறுத்தும் வேறு உருவம் என்று பொருள் கொள்வதே சிறந்தது.

சந்திர சூரியரைப் பார்க்கும் இலக்கணம் கூறுகின்றார்.

குறிகொள் நிறைமதியங் குறைமதியந் தன்னிற்
குலவிய தோர் செப்பகலில் கோநெய் யைவிட்
டெரிகின்ற மதிக்கதிரைப் பகலைப் பார்த்தால்
இயல்வெண் செம் பொன்பசுமை கருமை யென்னில்
நெறிகொண்ட வுயிர்வாழ்வு கெடல்நோய் சாவு
நிரல்நிரையே யறியிதனிற் றெற்கும் மேற்கும்
அறியும்வடக் குடன்கிழக்கு நடுக்கு றைந்தால்
அறுதிங்கள் மூன்றொன்று நாட்டத் தாமே. (39)

குறிகொண்ட நிறைமதியம் குறைமதியம் தன்னில் குலவியதோர் செப்பு அகலில் கோநெய்யை விட்டு - எரிகின்ற மதிகதிரை பகல் கதிரை பார்த்தால் வெண்மை செம்மை பொன்மை பசுமை கறுப்பென்னின் நெறி கொண்ட வுயிர் வாழ்வு செட நோய் சாதல் நிரை நிரையே அறி இதனில் தெற்கு மேற்கு மறிகின்ற வடக்குடனே - கிழக்கு நடு குறைந்தால் ஆண்டு திங்கள் ஆறு, மூன்று, ஒன்று நாள் பத்து அறிவே,

நிறைமதியம் - முழுவதுமாக நிறைந்த சந்திரன் பௌர்ணமி நாள்.
குறைமதியம் - முழுவதுமாக குறைந்த சந்திரன் அமாவாசை நாள்.

இதுவும் சரம்பார்ப்பவர் தனது ஆயுட்காலத்தை அறிந்து கொள்ளும் வழியைக் கூறுகின்றது.

செம்பாலான அகல் விளக்கு, அல்லது கிண்ணியில் பசுவின் நெய்யை உருக்கி அகல் நிறைய வார்த்துக்கொண்டு அமாவாசையானால் நடுப்பகலில் சூரியனையும், பௌர்ணமியானால் நடு இரவில் சந்திரனையும், அந்த நெய்யில் பார்க்க வேண்டும்.

அவ்வாறு பார்க்கும் போது காணும் நிறம், வெண்மையான நிறத்தில் தோன்றினால் உயிருக்கு அழிவில்லை. சிவப்பு நிறமென்றால் வாழ்வு உண்டு. பொன்னிறமானால் ஏதாவது தீங்கு உண்டாகும் [illegible] நிறமாக கண்டால் நோயினால் துன்பம் உண்டாகும். கருப்பு நிறமாக தோன்றினால் மரணம் நேரும்.

நெய்யில் தோன்றும் உருவம் தெற்கில் குறைவுபட்டால் [illegible] வருடத்தில் மரணம், மேற்கில் குறைந்தால் ஆறு மாதம், [illegible] குறைந்தால் மூன்று மாதம், கிழக்கில் குறைந்தால் ஒரு மாதம், நடுவில் துளையுடன் காணப்பட்டால் பத்தே நாள்.

சரீரப்பழுது முதலான மரண இலக்கணம் கூறுகின்றார்.

அழிந்திடுங்கை கால்நெற்றி கன்னந் தம்மில்
அடர்ந்துடிப் புறவாண்டு திங்க ளாறு
மொழிந்ததிங்கள் மூன்றுநாள் பத்தி லாவி
முடிந்துவிடும் இதுவொழியச் செவியி லோசை
ஒழிந்திடினா ளேழுகண்ணி லொளிதா னைந்தாம்
உயர்ந்த மணம் மூன்றிரண்டில் உரைவே றானால்
கழிந்திடுநல் லுயிரென்று கருதி யீசன்
கழலிணையைப் போற்றில்வினை கழிந்து போமே. (40)

அழிந்திடும் கைகால் நெற்றி கன்னம் தம் இடம் அடர்ந்து துடிப்புற ஆண்டு, திங்கள் ஆறு மொழிந்த திங்கள் மூன்று நாள் பத்தில் ஆவி முடிந்து விடும் - இது ஒழிய செவியில் ஓசை ஒழிந்திடில் நாள், ஏழு கண்ணின் ஒளிதான் ஐந்தாம் உயர்ந்த மனம் மூன்று இரண்டில் உரை வேறானால் கழிந்திடும் நல் உயிர் என்று கருதி ஈசன் கழல் இணையைப் போற்றில் வினை கழிந்து போமே.

இதுவும் மரணக்குறியைக் கூறுகிறது. ஒருவருடைய கை, கால், நெற்றி, கன்னம் இவை தொடர்ந்து இடப்பக்கம் விடாது துடித்தால் மரணக்காலம் நெருங்கியது என்று அறிய வேண்டும். கை துடித்தால் ஒரு ஆண்டு காலத்திலும், கால் துடித்தால் ஆறு மாத காலத்திலும்,

நெற்றி துடித்தால் மூன்று மாத காலத்திலும், கன்னம் துடித்தால் பத்து நாட்களிலும் மரணம் சம்பவிக்கும் என்று அறிய வேண்டும்.

மேலும் காது கேளாவிட்டால் ஏழு நாட்களிலும், கண் பார்வை மங்கினால் ஐந்து நாட்களிலும், மூக்கில் மணம் தெரியாவிட்டால் மூன்று நாட்களிலும், நாவு குழறி பேச்சு வராவிட்டால் இரண்டு நாட்களிலும் மரணம் சம்பவிக்கும் என்று அறிய வேண்டும். இதை அறிந்து இறைவனுடைய பாத கமலங்களை மனதில் நிறுத்தி துதித்தால் தீவினை ஒழியும்.

தீவினை ஒழியும் என்று சொல்லப்பட்ட போதிலும் மரணம் நீங்கிவிடும் என்ற துணிவுக்கு இடமில்லை. மரணம் ஏற்பட்ட போதிலும் நல்வினை தீவினைகளுக்கு அப்பாற்பட்ட நல்ல பதவி கிடைக்கும் என்றும் கருதலாம். ஆயுள் பலமுடையவர்க்கு மரணம் நீங்கி மறுவாழ்வு கிடைப்பினும் கிடைக்கும்.

உசுவாச நிசுவாசங்களின் பயன் கூறுகின்றார்.

போம்வாயு சிவம் உள்ளே புகுதற் சத்தி
போகில்விடம் புகிலமுதம் புகன்ற வெல்லாம்
ஆம்வாயு புகிற்போகி லல்ல வாகும்
அடங்கில்விடங் கெடும் போகி லகலு மப்பால்
தேமேவு சத்தியிரண் டொற்றை யீசன்
செவியிற்போ வார்வருவர் சரமீன் வாகில்
ஓவேவு முயிர்போகில் நோயாம் மற்ற
துட்புகினோ யாகாமெய் யுரைத்தோம் நாமே. **(41)**

போம் வாயு சிவம் முன்னே புகுதல் சக்தி போகில் விடம் புகில் அமுதம் புகன்ற எல்லாம் ஆம் வாயு புகில் போகில் அல்லவாகும் - அடங்கில் விடம் கெடும் போகில் அகலும் பாவும் - தே மேவு சக்தி இரண்டு ஒற்றை ஈசன் செவியில் போவார் வருவார் சரம் ஈனமாகில் ஓம் மேவும் உயிர் போகில் நோயாம் மற்றது உட்புகினும் ஆகா மெய் உரைத்தோம் நாமே.

மூச்சு உள்ளேயிழுக்கும் பூரகம் சக்தி என்றும் வெளியே விடும் ரேசகம் சிவம் என்றும் சொல்லப்படும். பூரகம் இடப்பக்கம் நடந்தால் அது அமுதமாம். அப்போது எல்லாம் வெற்றிகரமாக முடியும்.

இடப்பக்கம் வெளியேறினால் கெடுதல் உண்டாகும். வாயு கும்பகத்தில் அடங்கி இருக்கும் காலத்தில் ஒருவன் விஷம் உண்டாலும் அது முறிந்து போகும்.

இடப்பக்கம், வலப்பக்கம் அல்லாமல் நடு நாடி வழியாக சரம் நடந்துக் கொண்டிருக்கையில் செய்யும் காரியம் பாவமில்லை.

சரம் பார்க்க வந்தவர் முதலில் கூறிய வார்த்தையின் எழுத்துக்களை எண்ணிப்பார்த்து, ஒற்றைப்படை வந்தால் சிவம் அதாவது ரேசகம், இரட்டைப்படையாக வந்தால் சக்தி என்றும் கொள்ள வேண்டும். சரம் வெளியே போகும்போது ஒருவன் வந்து வெளியூர் சென்றிருப்பவன். வருவானா என்று கேட்டால் வாரான் என்றும், சரம் உள்ளே புகும் போது கேட்டால் வருவான் என்றும் கூறிவிடலாம். அதே போல் சரம் வெளியே போகும்போது நோய் தீருமா என்று கேட்டால் தீராது என்றும், உள்ளே புகும் போது நோய் தீரும் என்றும் கூறலாம்.

குறி சொல்லவும் போர் புரியவும் மார்க்கம் கூறுகின்றார்.

உரைத் தொருவன் நிறைகுறைவி லுறத்தீ தாகும்
உயிரில்புறத் துறைந்துநிறை யுறமத் திமமாம்
நிறைத்துநிறை பக்கத்தினின் றிடினன் மையாம்
நிறைமதியந் தனிலேகில் நேர்ந்தி டும்போர்
வரைத்தசெழுங் களம்வேட்ட வலவன் தோற்பன்
வாகான சந்திரனேல் வெல்ல மாட்டான்
விரித்தகதி ரினிலேவெங் களத்தில் வெட்ட
மேனியிலும் வடுப்படான் வெல்வான் றானே. (42)

உரைத்து ஒருவன் நிறைவில் போய் குறைவில் உறத்தீதாகும் - உயிரில் புறத்து உறைந்து நிறைபுறத்து உற மத்திமமாம் - நிறைத்த நிறை பக்கத்தில் நின்றிடில் நன்மையதாம் - நிறை மதியம் தனில் ஏகில் நேர்ந்திடும் போர்க்களத்து வரைத்த செழும் களம்வேட்ட வல்லவனே தோற்பான் - வாகான சந்திரனே வெல்லமாட்டான் - விரித்த கதிரினில் ஏகி வெங்கதிரில் வெட்ட மேனியிலும் வடுப்படான் வெல்வான் தானே.

நிறைவு - பூரணம்
குறைவு - சூன்யம்

ஒரு காரியத்தை பற்றி கேட்க வந்தவன் சரம் நடக்கின்ற பூரணப் பக்கத்திலே வந்தாலும், கேட்டுக் கொண்டே போய் சூனிய பக்கத்தில்

நிற்பானாயின் அக்காரியம் நடைபெறாது. தீமையில் முடியும். சரம் நடைபெறாத சூனிய பக்கமாக வந்து பூரண பக்கத்தில் போய் நிற்பானானால் மத்திம பலன் அதாவது ஆரம்பத்தில் இடர்கள் ஏற்பட்ட போதிலும் வெற்றிகரமாகவே முடியும்.

பூரண பக்கத்தில் வந்து அங்கேயே நின்று வருவானால் நன்மை.

கேள்வி போர் செய்பவரைப் பற்றியதானால் சந்திர கலை இயங்கும்போது புறப்பட்டு சூரியகலை இயங்கும் போது களம் சேர்பவன் தோற்பான். சந்திரகலையில் புறப்பட்டு சந்திர கலையிலேயே இயங்கும் போதும் தோற்பான். சூரிய கலை நடக்கும்போது புறப்பட்டு சூரிய கலை நடக்கும் போதே களம் சேர்பவன் தன்மேல் ஆயுதம் படாமலேயே வெற்றி பெறுவான்.

இங்கு போருக்கு பலன் கூறப்பட்டிருந்த போதிலும் ஒரு காரியம் நிமித்தமாக செல்பவருக்கும் பொருந்தும். வழக்கு, சமாதானம் செய்து வைத்தல், வியாபார பேரம் பேசுதல் முதலியவற்றிற்கும் இது பொருந்தும்.

போர் வெல்லும் மார்க்கம் கூறுகின்றார்.

வெல்வன் அமர் இருவர்பே ரெழுத்து மெண்ணின்
மிகுமெழுத்துள் அ,இ,உ,எ,ஒ என்னும்
நல்லெழுத்துள் ஆ,ஈ,ஊ,ஏ,ஓ கூட்டி
நலந்திகழ்பா லன்குமரன் அரசன் விருத்தன்
சொல்லும்பேர் முதலெழுத்தி லுயிரெ ழுத்தைத்
துலங்கியவத் தானந்துக ளறவே கூட்டில்
எல்லைமுதற் றானேவெழுத் துடையோன் வெல்வன்
இறுவனவ ராலிரட்டை யெழுத்தோன் றானே. (43)

வெல்வன் அமர் இருவர் பேர் எழுத்தினையும் எண்ணில் மிகுந்த எழுத்துடைய அ,இ,உ,எ,ஒ என்னும் நல்ல எழுத்துடனே ஆ,ஈ,ஊ,ஏ,ஓ நலத்திகழ் பாலன் குமரன் அரசனே விருத்தன் சொல்லும் அவர் பேரின் முதல் எழுத்தின் உயிர் எழுத்தை துலங்கிய அத்தானத்திற் துகளறவே கூட்டில் எல்லை முதல் தானத்தில் எழுத்துடையோன் வெல்வன் இறுவன் அவரால் இரட்டை எழுத்தோன்தானே.

போரிடும் இருவர்களில் யார் வெல்வார் என்பதை அறிய வேண்டும் என்றால் அதற்கு ஒரு வழி உள்ளது. அவ்விருவர்

பெயர்களிலுமுள்ள எழுத்துக்களையும் எண்ணி மிகுந்த எழுத்து அ,ஆ,இ,ஈ,உ,ஊ,எ,ஏ,ஐ,ஒ,ஓ என்பவற்றுள் அ,ஆ எனில் பாலன் கூறெனவும், இ,ஈ, இரண்டு இளைஞர் கூறெனவும், உ, ஊ இரண்டு எழுத்துகளும் அரசன் கூறெனவும், எ,ஏ,ஒ,ஓ இந்நான்கு எழுத்துகளும் விருத்தன் அதாவது வயது முதிர்ந்தவன் கூறெனவும் எடுத்துக் கொள்ள வேண்டும்.

போரிடும் இருவருடைய பெயர்களின் முதல் எழுத்தையும் பார்க்கும் பொழுது அ,ஆ ஒலியுடன் ஆரம்பித்தால் பாலன் என்றும், இ,ஈ என்ற ஒலியுடன் ஆரம்பித்தால் இளைஞனென்றும் உ,ஊ என்ற ஒலியுடன் ஆரம்பித்தால் அரசன் எனவும், மற்ற எழுத்துகளில் ஒலித்தால் விருத்தன் என்றும் அறிய வேண்டும். இவர்களில் பாலன் இளைஞனையும் அரசனையும் வெல்வான் என்றும் விருத்தன் மற்றவர்களால் தோற்கடிக்கப்பட்டு மடிவான் என்றும் பலன் சொல்ல வேண்டும்.

பாலனே வெல்வான் என்று கூறபட்ட போதிலும் இளைஞன் அரசன் முதலானவர்கள் அவரவர் தகுதிக்கு தக்கபடி போரின் பயனை அடைவார்கள் என்று எடுத்துக் கொள்ளலாம்.

கருப்பக் குறியின் முறை கூறுகின்றார்

இரட்டையாம் உபயத்திற் கேட்ட பிள்ளை
இனியபூ ரணத்திலாண் சூனி யம்பெண்
மருக்குழலா ளிடத்துயிரை விடியற் காலம்
மகணைவலத் துயிரதனால் வாங்க நட்பாம்
தரிக்குநிலம் புதன் வெய்யோன் அப்பு மந்தன்
சந்திரன் தீ வியாழஞ் சேய் தண்கால் வெள்ளி
நெருக்கியவம் பரம்பூ தங்கிழமை யிந்த
நெறிநிற்கின் நன்மைமிக நிகழுந் தானே. (44)

இரட்டையாம் உபயத்தில் கேட்ட பிள்ளை இனிய பூரணத்தில் ஆண் சூனியத்தில் பெண்ணாம் - மருக்குழலாள் இடத்து உயிரை விடியற்காலம் மகிலன் வலத்து உயிர் அதனால் வாங்க நட்பாம் தரிக்கும் நிலம் புதன் வெய்யோன் அப்பு மந்தன் சந்திரன் தீ வியாழம் சேய் தண்கால் வெள்ளி நெருக்கிய அம்பரம் பூதம் கிழமை இந்த நெறி நிற்கில் நன்மை மிக நிகழும் தா்னே.

ஒருவன் கர்ப்பத்தில் இருக்கும் குழந்தையைப் பற்றிக் கேட்க வரும்பொழுது சரம் பார்ப்பவருக்கு சுழினையில் சரம் நடைபெற்றுக் கொண்டிருந்தால் இரட்டைக் குழந்தைகள் பிறக்கும் என்றும் கேட்க வந்தவர் சரம் பார்ப்பவரின் பூரண பக்கத்தில் அதாவது எந்த நாசித் துளையில் சரம் நடைபெறுகிறதோ அந்தப் பக்கத்தில் வந்து கேட்டால் ஆண் குழந்தை என்றும், சூனிய பக்கத்தில் வந்து கேட்டால் பெண் குழந்தை என்றும் கூறிவிடலாம்.

அதிகாலையில் கணவனுக்கு வலது பக்கத்திலும், மனைவிக்கு இடது பக்கத்திலும் சரம் நடக்க, அப்போது கர்ப்பம் ஏற்பட்டால் அக்குழந்தை நன்றாக இருக்கும். அந்த மனைவி எப்போதும் கணவன் வசமாக இருப்பாள். அப்போது எந்தக் கிழமையில் எந்த சரம் நடப்பது நன்று என்பதை ஆராயப் போகுங்கால் புதன்கிழமை பிருதிவி சரமும், ஞாயிற்றுகிழமை அப்பு சரமும், திங்கள், சனிக் கிழமைகளில் தேயு - அக்னி சரமும், செவ்வாய் வியாழக்கிழமைகளில் வாயு சரமும், வெள்ளிகிழமையில் ஆகாய சரமும் நடக்க வேண்டும். அப்படி நடைபெற்றால் அவர்களுக்கு எல்லாக் காரியங்களிலும் வெற்றியும் சுப பலன்களாகவும் நடக்கும் என்று கூறலாம்.

இனனதற்கு மூலம் இன்னதென்றுங் கூறுகின்றார்.

நிகழ்புவிக்கு மூலம்நீர் வாயு சீவன்
நெறிதாது கனல்விண்ணாம் நினைக்குங் காலை
புகழுடனே பூதத்திற் குளதே சொல்க
பொருவில்சர ராசிவெய்யோன் புதுவெண் டிங்கள்
மகிழ்கொள்திர ராசியாம் உபய ராசி
மறங்கிளருஞ் சுழுமுனையாம் வாரந்தோறும்
பகுதல்படர் துயர்பலிக்கு நிலைமை தன்னைப்
பங்கயவாதனத்திருந்து பரிந்து பாரே. (45)

நிகழ் புவிக்கு மூலம் நீர் வாயு சீவ நெறிதாது கனல் விண்ணாம் நினைக்கும் காலை புகழ் உடனே பூதத்திற்கு உளதே சொல்க பொருவில் சரராசி வெய்யோன் புதுவெண் திங்கள் மகிழ்கொள் திரராசி - உபயராசி மறங்கிளரும் சுழி முனையாம் வாரம்தோறும் பகுதல் படர்ந்து உயிர் பலிக்கும் நிலைமை தன்னை பங்கய ஆதனத்தில் இருந்து பரிந்துபாரே.

புவிக்கு மூலம்,
நீர், வாயு இரண்டிற்கு ஜீவன்,
கனல் விண் இரண்டிற்கும் தாது,

இப்படியாக ஒன்றுக்கொன்று ஆதாரமாய் வரும் இவற்றை ஆராயப் போகுங்கால் சரராசி சூரியனாகவும், ஸ்திர ராசி சந்திரனாகவும், உபய ராசி சுழிமுனையாகவும் எடுத்துக்கொண்டு ஒவ்வொரு நாளும் சரம் பார்ப்பவர் முறைப்படியாக தக்க ஆசனத்தில் இருந்து தமது சிந்தனையால் ஆராய்ந்து பார்த்து அறிய வேண்டும்.

மூன்று நாடிகளில் முறைமை கூறுகின்றார்.

பாரிதனைக் கதிர்மதிதான் வாழ்வு கேடு
பண்டைநிலை யிம்மூன்றும் பரிந்து கேட்கில்
மேரடருஞ் செல்வம் வரும் வெய்யோ னாகில்
வெண்மதியங் கேடாகும் விரைந்து வாயு
தீரமிகு சுழுமுனைதா னாகில் முன்பிற்
சிறுகாலும் பெருகாது தேவ ரானோர்
போரருகில் வருமெனினு மதியில் வாரார்
பொங்கியசெங் கதிரிவருவர் புகன்றோம் நாமே. *(46)*

பார் இதனை கதிர்மதி சுழிமுன் வாழ்வு கேடு பண்டை நிலை இம்மூன்றும் பரிந்து கேட்கில் - மேர் அடரும் செல்வம் வரும் - வெய்யோன் ஆகில் வெண்மதியம் கேடாகும். விரைந்து வாயு தீரம் மிகு சுழிமுனைதான் ஆகில் முன்பிற் சிறுகாலும், பெருகாது தேவரானோர் பேர் அருகில் வரும் எனினும் மதியல் வாரார் - பொங்கிய செங்கதிர் வருவர் புகன்றோம் நாமே.

சூரியன் சந்திரன் அக்னி என்ற இம்மூன்றிலும் பிங்கலை, இடகலை, சுழினை என்ற மூன்று வித சரங்களின் பயனாக ஒருவருக்கு ஏற்படும் வாழ்வையும், சுக துக்கங்களையும் அறியுங்கால் சூரியனாகில் செல்வம் வரும். சந்திரனாகில் கேடு ஆகும். வாயுவாகில் தீரம் மிகும். சுழிமுனையாகில் முன்புள்ள நிலையிலிருந்து சிறிதும் முன்னேற்றம் ஏற்படாது. தேவர்கள் முதலானவர்கள் பொங்குகின்ற செங்கதிரவனிடையே வருவார்கள் அதாவது சூரியகலை நடக்கும்போது வருவார்கள். சந்திரகலை நடக்கும்போது வர மாட்டார்கள் என்று அறிவாயாக.

முன் பாடல்களில் சந்திர கலையே நன்று என்றும், சூரியகலை தீது என்றும் கூறப்பட்டுள்ளது. இப்பாடலில் அதற்கு மாறாக

சொல்லப்பட்டுள்ளது போல் தோன்றுகிறது. இந்த வேறுபாட்டின் காரணத்தை தக்க குரு மூலமாக அறிந்து கொள்க.

இதுவுமது உபசாந்தங் கூறுகின்றார்.

நாமுரைத்த தொகையளவுஞ் சூரிய ணோடாம்
நன்மதிய மேல்வாயு நடக்கு மாகில்
தாமிளைத்தல் கிளையிளைத்தில் பொருள்கே டாதல்
சத்துருவுண் டாதலிவை தப்பா வாகும்
போமிடத்தில் மதியாகில் சரத்தைப் போக்கிப்
பொருந்துமடி யிரட் டித்துப் போக நன்றாம்
தேமருவு கதிராகில் உயிருள் வாங்கித்
திகழும்வலக் காலொற்றிச் செல்ல நன்றே. (47)

நாம் உரைத்த தொகை அளவும் சூரியனோடு ஆம் - நன்மதியம் மேல் வாயு நடக்குமாகிற் தாம் இளைத்தல் கிளை இளைத்தல் பொருள் கேடு ஆதல் சத்துரு உண்டாதல் இவை தப்பாவாகும் - போம் இடத்தின் மதியாகில் சரத்தைப் போக்கி பொருந்தும் அடி இரட்டித்துப் போக நன்று ஆம் - தேமருவும் கதிராகில் உயிர் உள் வாங்கித் திகழும் வலக்கால் ஒற்றி செல்க நன்றே.

நன்மையாவும் சூரியகலையினாலேயே ஏற்படும் சந்திர கலை அதிகமாக நடந்தால் அப்படி யாருக்கு நடைபெறுகிறதோ, அவருக்கு தேகம் நலிவும், மதிப்புக் குறைவும் ஏற்படும். அவருடைய சுற்றத்தாருக்கும் தீமையே ஏற்படும். பொருள் நட்டங்களும் மரண பயமும் ஏற்படும். ஒரு காரியம் நிமித்தமாக வெளியே செல்லும்போது சந்திரன் நடந்தால் மூச்சை நீளமாக வெளியே விட்டு அப்பக்கமாகவே மூன்று அடி தூரம் சென்று பிறகு பயணத்தை தொடர வேண்டும். அதே போல் சூரிய கலை நடக்கும் போது செல்ல வேண்டிய காரியம் அல்லாமல் வேறு காரியத்திற்காக செல்ல இருந்தால் அந்த சரத்தை உள்ளே வாங்கி அதற்கு நேராக மூன்றடி சென்று பிறகு தொடர்ந்து செல்ல வேண்டியது. அப்படிச் செய்வதால் சரத்தின் குற்றம் நீங்கும். அதை ஒரு உபசாந்தி என்று எடுத்துக் கொள்ளலாம்.

சந்திரகலையில் நடக்கும் பூதியங்களைக் கூறுகின்றார்.

செல்லுமதி தனில் நிலத்திற் சஞ்சரித்திட வாயு
சிவாலயங்கள் மதிற்செய்தல் இல்லங் கட்டல்
நல்லமுடி சூட்டல்குடி புகுதல் போக்கு
நயந்துமரம் வைத்தனன்று நளிர்நீர் தன்னில்

ஒல்லைநறு வாவிகுளஞ் சோலைவைக்க
உழவிரைக்க மணமுளதே லுவக்க லாகும
நல்லழலில் தீப்பிணியாம் காற்றி லானை
நற்பரிதே ரொட்டகங்கள் நாவா யோட்டே. (48)

செல்லும் மதி தனில் நிலத்தில் சஞ்சரித்திட வாயு சிவாலயம் கண் மதில் செய் - காலில் இல்லம் கட்டல், நல்லமுடி சூட்டல், குடி புகுதல், போக்கும் நயந்து மரம் வைத்தல் நன்று - நளிர் நீர் தன்னில் ஒல்லை நறும் வாவி குளம் சோலை வைக்க உழவு இரைக்க மனய உளதேல் உவக்கே ஆகும் - நல்ல அழலில் தீப்பிணியாம் - காற்றில் ஆனை நற்பரி தேர் ஒட்டகங்கள் நாவாய் ஓட்டே.

சந்திரகலை பிருதிவியில் நடக்கும் சமயத்தில் சிவாலயம் காணல், மதில் கட்டுதல், வீடு கட்டுதல், முடி சூட்டுதல், குடி புகுதல், சாந்தி கழித்தல், மரம் வைத்தல் இவைகள் நன்றாம்.

சந்திர கலையில் அப்பு சரம் நடக்கும் காலத்தில் கிணறு, குளம் தோண்டுதல், பூஞ்சோலை அமைத்தல், நிலம் உழுதல், விதை விதைத்தல், விவாகம் செய்தல் முதலியன நன்மை தரும்.

சந்திரனில் தேயுவானால் நோயாளிகளுக்கு மருந்து கொடுக்கவும், பிணி தீர்க்கவும் நன்று. வாயுவானால் யானை, குதிரை, ஒட்டகம் தேர் முதலிய வாகனங்களில் செல்லுதல், கப்பல் ஒட்டல் முதலியவற்றிற்கு நன்றாம்.

இதுவுமது

ஒட்டியவா னிற்செபிக்க விற்போர் செய்ய
உள்ளபிங் கலைக்கு மொக்கும் ஈதே சொல்க
நாட்டுமதி வெங்கதிரோ னிற்கி லந்த
நாடிகளிற் பூரணச்சேர் நன்றே யாகும்
ஈட்டுதிசை பிடித்தவைகள் செயல்கள் ஆண்பெண்
இயங்கிடலுஞ் சூனிய பூரணமெ ழுத்தும்
வாட்டமற மதித்தெண்ணி நிருமித் தற்கு
வல்லவனே சரம்பார்க்க வல்லன் நன்றே. (49)

ஒட்டிய வானில் செபிக்க விற்போர் செய்ய உள்ள பின்கலைக்கு ஒக்கும் ஈதே சொல்க - நாட்டு மதி வெயிர் கதிரோன் திக்கில் அந்த நாடிகளில் பூரணைச் சேர் நன்றேயாகும் மீட்டு திசை பிடித்தவைகள் செயல்கள் ஆண் பெண் இயங்கிடலும் சூரிய பூரண எழுத்தும் வாட்டமற மதியம் எண்ணி நிருபித்தவற்கு வல்லவனே சரம் பார்க்க வல்லன் என்றே.

சந்திர கலையில் ஆகாய சரம் நடக்கும் காலத்தில் மந்திரங்கள் ஜெபிக்கவும், விற்போர் செய்யவும் நன்று. இது சூரிய கலைக்கும் பொருந்தும் என்று சொல்லப்பட்டுள்ளது.

நடப்பது இடகலையானாலும், பிங்கலையானாலும் வந்தவர் சரம் ஓடுகின்ற பூரண பக்கத்தில் நின்றால் அவன் வந்த காரியம் நன்மையில் முடியும். கலை நடக்கும் போது பூதங்களின் இயல்பும் கொண்டு ஆண், பெண், பூரணம், சூனியம், எழுத்து முதலான பல வகையினையும் கொண்டு ஆராய்ந்து இது இப்படி நடக்கும் என்று சொல்லக் கூடியவனே சரம் பார்ப்பதில் வல்லவன் ஆவான். மற்றவன் சரம் பார்த்துச் சொல்லத்தக்கவன் அல்ல என்று உணர வேண்டும்.

சரம் பார்ப்பார் இயல்பு

நன்றான மறைவல்லோர் குலமா னாலென்?
நரமுரைத்த சரநூலின் நடைதப்பாமல்
என்றாரும் பார்ப்பவரே பூமி தேவர்
இசைந்தமா னிடப்பிறப்பில் இன்பங் கொள்வர்
குன்றாத மாபறவை யெறும்பு தானும்
கொடி மருந்திளைவறிந்து கொண்டு வாழ்ந்து
பொன்றாத தெய்வீகம் பொருந்து வார்கள்
புகுதுவார் புன்பிறப்பிற் புகலா தாரே. (50)

நன்றான மறைவல்லோன் குலம் ஆனால் என் நாம் உரைத்த சர நூலின் நடை தப்பாமல் எந்நாளும் பார்ப்பவரே பூமி தேவர் இசைந்த மானிட பிறப்பில் இன்பம் கொள்வர் குன்றாத மாபறவை எறும்பு தானும் கொடு மருந்தின் சுனை அரிந்து கொண்டு வாழ்ந்து பொன்றாத் தெய்வீகம் பொருந்துவார்கள் புகுதுவார் பின்பிறப்பில் புகலாதாரே.

வேதங்கள் ஓதும் பிராமண குலத்தில் பிறந்தவன் என்றாலும் சரம் அறியாதான் உயர்ந்த குலத்தில் பிறந்தவன் அல்ல. தாழ்ந்த குலத்தில் பிறந்தவன் ஆனாலும் சரநூலை அறிந்தவன் உயர்ந்த குலத்தில் பிறந்தவன் ஆவான்.

அது எவ்வாறெனில் சரம் பார்ப்பவர் அதிகாலை எழவேண்டும். பிராணாயம் செய்ய வேண்டும். அப்படி செய்வதென்றால் நித்திய கடமைகளை முடித்து தெய்வ சிந்தை உடையவராக பத்மாசனத்தில் அமர்ந்துதான் செய்ய வேண்டும். இவைகளைச் செய்யாதவர் பிராமணர் ஆக முடியாது. செய்பவர் ஜாதி வேறுபாடு இல்லாமல் உயர்ந்த குலத்தின் தகுதியைப் பெற்று விடுகிறார். அதனாலேயே சிவபெருமான் இவ்வாறு கூறுகிறார் என்று அறிந்து கொள்க.

சரம் இயங்குவதன் மூலம் நன்மை தீமைகளை அறியக் கூடியவர் எல்லோராலும் மதிக்கப்பட்டு தேவர்களுக்கு சமமானவராக போற்றப்படுவார். அவர் பரம்பொருளின் இயல்புடையவர் என்று கருதப்படுவார். சரம் பார்க்கத் தெரியாதவர் தனக்குள்ள கடமைகளில் தவறியவராதலில் தாழ்ந்த குலத்தைச் சேர்ந்தவராகக் கருதப்படுவார். அவர்களுக்கு பிறப்பு இறப்பு என்ற துன்பங்களும் ஒழியும் எனக் கூறலாம்.

புன்பிறப்பிற் பிறக்கினுஞ்சற் குருமுகத்தாற்
பொருந்தியவிச் சரநூலைப் புகலக் கேட்டு
நன்குணர்ந்து நெறிநடப்பான் யாவ னேனும்
நாமவனென் றிரண்டில்லை நன்றாய்க் கேட்கின்
மின்பிறக்குஞ் செந்தழலை அடுத்த வெல்லாம்
மிக்கதழல் வடிவான விதமே போலத்
தன்புறப்பி லினிப் பிறவான் அவமே சாகான்
சடைமேனாம் அணிந்தசந் திரனொப் பானே. (51)

புன்பிறப்பில் பிறக்கினும் சற்குரு முகத்தால் பொருந்திய இச்சரநூலைப் புகலக் கேட்டு நன்கு உணர்ந்து நெறி நடப்போர் யாவரேனும் நாம் அவர் என்று இரண்டு இல்லை. நல்லார் கேட்கின் மின் பிறக்கும் செந்தழலை அடுத்த எல்லாம் மிக்க தழல் வடிவம் ஆன விதமே போல தன் பிறப்பில் இனி பிறவான் அவமே சாகான் சடை மேல் நாம அணிந்த சந்திரன் ஒப்பானே.

தாழ்ந்த குலத்தில் பிறந்தவரானாலும் நல்ல குருவின் மூலமாக சரநூலின் உபதேசம் பெற்று அதை நன்றாக உணர்ந்து அவ்வழி நடப்பவர்கள் யாராக இருந்தாலும் அவரே யாம். யாமே அவர். செந்தீயை நெருங்கியுள்ள எல்லாப் பொருளும் அத்தீயின் வடிவாகவே காணப்படுவது போல் எப்பிறப்பில் காணப்படுபவராயினும் எம்மை அடைந்தவர் யாமே ஆவார்.

அவருக்கு இனிப் பிறவி இல்லை. தீங்கான மரணமும் இல்லை. எமது சடைமேல் நாம் அணிந்துள்ள சந்திரனுக்கு நிகர் ஆவார்.

சிவபெருமான்
உமாதேவியாருக்கு உபதேசித்த
ஞான சரநூல்

எஸ்.பி. இராமச்சந்திரன் எழுதிய உரை
முற்றும்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

தெய்வீகத்தன்மை விளங்கிய
ஔவையார் திருவாய்மலர்ந்தருளிய

உயர்ஞான சரநூல்

முகவுரை

அநாதிமுத்த சித்துருவாயும், அகிலகாரண சம்ரக்ஷகாா்ந்த தீவேஸ்வரனாயும், சுத்தசைதன்யக் கடவுளாயும் விளங்காநின்ற ஆதிநாயகனாகிய பரமசிவனின்றிருவருளா லினிதோங்கும் அன்பர்காள் அலை கடற்சூழ்ந்த அவனியின்கண் அளவிடற், கரிய பிறவிகளில் மேலான பகுத்தறிவுடைய மானிடர்கட்குச் சிவாகமங்களில் விதித்துள்ளனவாகிய, யோகமே ஞானத்தை அடைவதற்குறித்தான மார்க்கமாக விருத்தலினாலும் ஆராயுமிடத்து யோகமின்றி ஞானங்கிட்டுத லரிதாதலினாலும் இத்தகைய யோக சாதனையை அப்பியாசிப்பதற்கு வாசியை வயப்படுத்தலே ஏற்றத் துணைக்கருவியா இருப்பதினாலும், அவ்வாசியை நிலைப்படுத்திக் கைவல்யமாக்கு மார்க்கத்தையும், அதனது விபரத்தையும் போதிக்கவல்லதாயும், இதுகாறும் பஹிர்முகமாக வெளியிடப்படாதலும், (தெய்வீகத்தன்மை பொருந்திய ஔவையார்) திருவாய்மலர்ந்த அருள்வாக்காகவும், மஹான்களால் அனுபவித்தும் அனுசரித்தும், வராநின்ற 'உயர்ஞான சரநூல்' என்னும் அருஞ்சாத்திரத்தைப் பல்லோருமெளிதிலுணர்ந் தொழுகுமாறு விளக்கல்வேண்டுமெனும் பேரவாவானது நெடுநாட் தூண்டவும், புல்லறிவாளனாகிய யானும் என்னாலியன்ற வரையில் குருமூர்த்தத்திற் றெளிந்தவண்ணம் 'சுருங்கச்சொல்லல் விளங்க வைத்தல்' எனும் பிரமாணத்திற் கொரு வாறிணங்க வசனரூபமாக இந்நூலைத் தொகுத்தும், இதனுடன் (எழுமூர். நேட்டிவ் வீ இராமலிங்க தேவரவர்களருளிய' தினக்கிரமாலங்காரச் சுருக்கமென்னுஞ் சாஸ்திரமானது மேற்படி வாசியோகிகள் யாவருக்கும் அதிகப்பயன்படு மாதலாலதை இந்நூற்குப்பின் இரண்டாம்பாகமாக அமைத்தும், மேற்படி சரயோக சாதனைகளுக்காக ஏற்படுத்தியிருக்கும் கற்பமாதி ஔடதங்களையுந் தாமே செய்தும், அன்றேல் எம்மிடம் விலைக்கு வாங்கியுமுண்டு சுகதேகிகளாய் அறம், பொருள், இன்பம், வீடு, என்னுஞ் சதுர்வித புருடார்த்தங்களைப் பெருவார்களென்றும் இதைப் பிரசுரஞ் செய்யலாயினேன். இதிற் சொற்குற்றம் பொருட்குற்றம் இவை முதலானவை யிருப்பினும் பொருட்படுத்தாது சாதுக்கள் இவ்வரியநூலை அங்கீகரிப்பார்களெனக் கோறுகின்றனன்.

இப்படிக்கு,
ஆலந்தூர். கு. மகாதேவமுதலியார்.

உ

சிவமயம்

ஔவையார் சரநூல் உபதேசித்தருளிய

சரித்திரசங்கிரகம்.

சிலகாலங்களுக்கு முன் பாண்டிய நாட்டில் ஒரு வேளாளன் தன் சிறுவயதில் தன் தந்தையால் கல்விக் கழகத்திற்கனுப்பப்பட்டும் அறிவீனனாயிருப்பதை நோக்கிய தந்தையானவர் அடா துஷ்டா! பள்ளிக்குப் போவது பிள்ளைக்கழகென்பது அறிந்த உனக்கு உபாத்தியார்ச் சொல்லும் ஒருமொழியேனும் மனதிற் பதிய வொண்ணாதாவென்று மனஞ்சலித்துக் கொண்டதின் பேரில், இவனும் மனதுருதிக் கொண்டு தந்தையிஷ்டப்படி பள்ளிக்குப்போய் உபாத்தியாயர் திருவருளினால் என்ன உபதேசித்தருளியபோதிலும் கைவிடாது அதனைச் சாதிக்க வேண்டுமென்று தனக்குள் தீர்மானித்திருக்கையில், ஒருநாள், உபாத்தியாயர் வழக்கம் போலப்பிள்ளைகளை வாசிக்கச் செய்து இப்பிள்ளையைப் பார்த்துக் கொண்டே கணேசா! வென்று தன் ஆசனத்தின் மீதுட்கார்ந்தார். அவ்வாக்கியத்தையே அவன் உபதேசமாகக் கொண்டு இரவும், பகலும், நினைவிலும், கனவிலும் வைராக்கிய மனத்தனாய் தியானித்து வர, ஸ்ரீவிநாயக்கடவுள் மனமிறங்கி சன்னியாசி வேடம்பூண்டு இப்பிள்ளையைத் தன்னருகிலழைத்து பிள்ளாய்! உனக்கு என்னவேண்டுமென்று வினவ, அப்பிள்ளை நீர்யார்? உமக்கு என்மீதிலிவ்வளவு கிருபையுண்டானதற்கு காரணம் யாதென, அதற்கு ஸ்ரீவினாயகபெருமான் மாறுத்தரமாக யான் கணநாதன் என்னையே வுன்றிருவாக்கினால் திடகாத்திர நிஷ்டாபரேரியாய்ப் பூசிக்கமனம்புளகித் திங்கனமெழுந்தருளினோமென, அப்படிக்கிருக்குமாயின், (அழியாகலைக்கிழங்கு) வேண்டுமென்று சொல்ல, கணநாதன் மிக்க அன்புகூர்ந்து (ஔவையை) உபசித்துக் கொண்டிருந்தால் உனக்கு அருள் செய்வாரென உரைத்து மறைந்தனர்.

அதுமுதல் ஔவையை நோக்கி அரிய தவம்புரிய, சரஸ்வதியாகிய ஔவையார் இப்பிள்ளைக்குப் பிரசன்னமாகி வேண்டுவதைக் கேளென, தனக்கு (கலைக்கிழங்கு) வேண்டுமென்று சொல்ல அக்கணமே யான்சொல்லும் நூல் முழுவதையுங் கேட்பாயாயின் நீவினவிய கலைக் கிழங்கு கிடைக்கு மென்றாக்கியாபிக்க தாயே! அதனைத்திருவுளம் பற்ற வேண்டுமென நஞ்சலியஸ்தனாக நிற்கப் பின்வருமாறு உபதேசித்தருளினார்.

சுபமஸ்து.

உ
சிவமயம்

திருச்சிற்றம்பலம்

உயர் ஞானசரநூல்

விநாயகர் துதி.
அறுசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்.

மணக்குமலாக் காவளப்பான் காழிதனிற் சதகிருது
வணங்கி யேத்தப்
பணைக்கரத்து குறுமுனிவன் கமண்டலத்தைக் காகவுருவாய்ப்
பரிந்து சாய்க்க
அணைக்கடங்காப் பிரவாகஞ் செய்தருள்ம தாவளவா
னனத்தான் செம்பொற்
றுணைக்கமலம் போற்றியௌவை ஞானசர நூற்காதை
சொல்லு வாமே.

அவையடக்கம்.
வெண்பா.

பித்தன்றா னாய்ந்துணராப் பேரான காரியத்தை
சத்தமிட்டுக் கூறுந் தன்மையா - யித்தரையில்
கற்றேன்போல் யானுங் கழறுமிதைக் கற்றோர்கள்
குற்றமாய்க் கொள்ளார் குறித்து.

1-வது சரத்தின் விபரம்.

சரமென்பது கலை, வாசி, சுவாசம், மூச்சு பிராணன், ஆத்துமா வென்பதாம்: ஆதலால் உன் நாசியில்வரும் சுவாசமாகிய காற்றை நீ முதலாவ தறிதல் வேண்டும்.

2-வது சரம்பார்க்கும் விபரம்.

உன்நாசியில்வரும் சுவாசம் இருவகைப்படும். அது இடப்புறம், வலப்புறமாய் ஓடிக்கொண்டேயிருக்கும், வலதுபுறம் வரும் சுவாசத்தின் பெயர் சூரியகலையென்றும், இரவிசரமென்றும் அதிபரமென்றும் கதிர்வன் திசையென்றும், தினகரன் பக்கமென்றும், ஆதவன்திசை யென்றும், அலரிப்பாரிசமென்றும், இதனையே ஆண்சரமென்றும் பிங்கலையென்றுஞ் சொல்லத்தகும்.

இனி சந்திரனென்றும் இடதுசரத்தை அதாவது இடப்புறம், வருஞ் சுவாசத்தின் விபரங் கூறுவாம். இடது பக்கத்தில் வருஞ் சுவாசத்தின்பெயர் சோமன்கலையென்றும், சந்திரனாசியென்றும், திங்கள் புரமென்றும், மதிதிசையென்றும் இஃதனையே பெண்சரமென்றுஞ் சொல்லத்தகும். ஆராய்ந்து பார்க்கின் இவ்விரண்டிற்கு மத்தியில் அதாவது இருபுறமும் நிறைந்தோடுதல் சுழிமுனையென்றும், ஜோதியுத்தியென்றும், வயிர்ப்பாலமுதுமென்றும், சூனியசரமென்றும் அக்கினி பாரிசமென்றும், நெருப்பாறின்படி யென்றுஞ் சூனியகலையென்றும் அலி யெனினுமாம்.

3-வது சரத்தின் அளவு கூறல்.

சூரியகலையென்னும் ரவியானது 5 நாழிகை அளவும், சந்திரன் மேற்படி 5-நாழிகை நடப்பதன்றி, வேறன்று சூனியமோவெனின் 6-வினாடி நடப்பதரிதாம். சூரியன் நடக்குங்கால் வெளிவிடுகையில் 5-மாத்திரை அளவும், உட்புகுங்கால் 6-மாத்திரை அளவாம். சூனியமோவெனின், ரேசக, பூரகமெனும் மிவ்விரண்டு சமயங்களிலும் 5-மாத்திரை முறையே நடத்தலுமாம். சந்திரனும், சூரியன்போலாம்.

4-வது சரம்பார்ப்போர் அளவும் ஒழுக்கமும் மதிப்பும் ஆசனவிதியுங் கூறல்

சரம்பார்ப்போரியாவாரயினும் அவரவர்மரபினுக்குகந்த வண்ணம் சத்குருவையடைந்து அவ்வாசிரியரைத் தன் தந்தையைப் போலுபசரித்து மனப்பூர்வகமாய்த் தொண்டு செயல் வேண்டும். சரம் பார்ப்போர் இரவில் அதிக நித்திரையை விரும்பாமலும், சனக் கூட்டங்களில் நெருங்காமலும், சரீரபலமிருந்தும், மனோதிடமும் தர்மசிந்தையு முள்ளவராகவு மிருத்தல் வேண்டும். இவர்களுக்கு ஆசன மோவெனின் சம்சார பந்தத்தோருக்கு வெள்ளை வஸ்திரத்துடன் பத்மாசனமும், யோக

அப்பியாசங்களுக்கு இரத்தினகம்பளம், புலித்தோலாசனம், மான்தோலாசனம், ஞானமதிப்பாலுண்ணும் மஹான்களுக்கு தற்பாசனத்துடன் தாரண ஆசனமாகிய சிங்க ஆசனம் கோமுக ஆசனம், கருட ஆசனம், இவை முதலியவை நலமாம்.

5-வது சிவராஜயோகமாகிய வாசியோக அப்பியாசிகள் சரம் நடத்தவேண்டிய காலமும் அளவுங்கூறல்.

வாரசரம்.

ஞாயிறு, சனி, செவ்வாய், இம்மூன்று நாட்களில் சூரியனும் வெள்ளி, திங்கள், புதன், இம்மூன்று நாட்களில் சந்திரனும் நடத்த உத்தமம். மேற்சொல்லிய சூரிய சந்திர நாட்களில் எக்காலங்களிற் சரம் நடத்த வேண்டுமென்று வினவில், அதிகாலையில் 25-நாழிகை முதல் 30 நாழிகை வரையினும் நடத்தல் வேண்டும். வியாழனோ வெனின், வளர்பிறையில் சந்திரனையும், தேய்பிறை காலங்களில் சூரியனையும் நடத்தல்வேண்டும். ஆயினும் சனி வாரத்தில் 25-நாழிகை முதல் 30-நாழிகை வரையினுஞ் சூரியகலை நடத்தல் உத்தமத்திலுத்தமம். மேற்சொல்லிய சரம் வினையளவாக நடவாமையாயினும், ஆசான் அனுக்கிரகிப்பராயின் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கி வேண்டிய சரம் புற்றிலிருந்து சர்பஞ் சீறுவதுபோ லளவற்ற ஆனந்தத்துடன் வெளிப்படுதல் உண்மையாம்.

6-வது ஆசானளவு.

ஆசானென்பது பரம ரகசியமாகிய கடவுளின் காருண்ய திருவருளேயாம். அத்திருவருளோ சமயோஜிதமாய் அவதாரமா யெண்ணுதல் வேண்டும். அதாவது சதா தன் சாதனைய் உள்ளும் புறம்பும் மறவாத சிவபத்தியையே பூஷணமாய்க் கொண்டவராயும் வைராக்கிய ஜ்யேஷ்டராயும், சாஸ்திர புராணங்களறிந்தவராயும், மரபு நூல்களையுஞ் செவ்வையா யோர்ந்தவராயும், நல்லொழுக்கம், நன்னடத்தை, பளிங்கு போன்ற மனம், வாசியை நேசித்தலாகிய குணங்களையுடைய புண்ணிய புருடனையே ஆசானெனத்தகும்.

7-வது சரம் நடவாமைக்கு காரணமும் நடத்தும் வல்லபமுங் கூறல்.

சரியான காலப்பிரமாணமாய் சரம் நடத்தாமையாலும் நடத்தலறியாமையாலும் நடத்தலிலுண்மை யென்றறியாமையாலும்,

நடத்துங் காலங்களில் கண் விழிக்காமையாலும், ஒழுங்கீனமாய்ப் பாவித்தலாலும், தான் நடக்குந் துர்செய்கைகளினாலும் சதாலீலையில் பிரியப்படுவதாலும் திரேக வலுவில்லாததாலும் உண்ணுமுணவின் பேதங்களாலும், வியாதியினால் மெலிவதாலும், பெரியோரை மதியாத்தாலும் சதா தீமையே மனதிற் குடிபுகுவதாலும் பொய்பேசலில் அதிகவிருப்பங் கொள்வதாலும், முறைமையாய் நடத்தாமையாலும் அவ்வக்குரிய பத்திய மார்க்கத்தை யனுசரியாமையாலும் சரம் விகற்பப்படும். ஆயினும் மேற்சொல்லிய விஷயங்களுக்கு வித்தியாசப்படும்படி நடப்பதே சரம் நடத்தலுக்கு ஒழுங்காகும்.

8-வது சரம் நடத்துபவரின் பத்தியங்கூறல்.

சரம் நடத்து மொவ்வொருவரும் பிரதிதினமும் அதிகாலை 22¼-நாழிகைக்கு மேற்படாமல் கண் விழித்தல் வேண்டும். 25-நாழிகை வரையில் சரம் நடக்க முயற்சி செய்தலோடு தரும தேவதைகளின் பக்தி, குரு விஸ்வாசம், தாய் தந்தைகளாகிய பெரியோரின் அன்பு முதலாகிய விவைகளில் மனஞ் சலியாமையோடும் மேற்சொல்லிய 25-நாழிகைக்குள் சரத்தை வசப்படுத்தல் வேண்டும். மேற்சொல்லிய நாழிகைக்குமேல் 5-நாழிகையளவும் விகற்பம் நேரிடாமல் காத்துக் கொண்டிருத்தலுடன் ஆசனம் விட்டெழுந்து மலவிட்டிருக்கிறதுகளாகிய ஸ்ரீ விநாயகக்கடவுளை தியானித்து 5- விராகனிடை கோமதம், 1½ - விராகனிடை சீனியை சேர்த்துண்டு அதிகநடை விரும்பாமல் லௌகீக வொழுங்குகளை நடத்தல் வேண்டும். அன்றியும் பகல் 15-நாழிகைக்குமேல் இதனது இரண்டாம் பிரிவில் எழுதியிருக்கும் ஆயுர் வேதத்தில் நோயணுகா விதியிற் கூறியுள்ள பதார்த்தங்களையும், மிக்க வலிமை தரத்தக்கவைகளைப் புசித்தல் வேண்டும். அரைவயிறன்றி முழுவயிறு புசித்தலாகா கங்கையின் மீதுள்ள விருப்பத்தைத் தவிர்த்தல் வேண்டும். இரவில் பால் சேர்ந்த கோதுமைக் கஞ்சியன்றி மற்றவைத் தவிர்த்தல் நலம். சம்சாரபந்தத்தில் ஈடுபட்டவராயினும் மூன்று மாதங்களுக் கோர்காலன்றி சையோகந்தகா. இவ்விதியை அனுசரிக்கும் ஒவ்வொருவரும் ஆரம்பமுதல் 6 மாதவரையினு மேற்சொல்லிய பத்தியுங்களுடன் ஸ்ரீ சையோகங்களைத் தவிர்ப்பாராயின் சரம் எளிதிலுணரத் தக்கவராவர்.

9-வது முழுச்சரம் நடத்தலின் விபரங்கூறல்.

மேற்கூறிய வாரசரமும், பத்தியமும், அளவாய் ஓர் அயனகாலம் செவ்வையாய் நடந்துவருமாயின் ஆறு அயனங்கள் வாரசாரமாய் நடத்தி

அதுமுதல் பகல் முழுவதும் சூரியன், இரவு முழுவதும் சந்திரனாக இவ்வண்ணம் நடத்தல் வேண்டும். இவ்விதிப்படி மூன்று அயனங்கள் நடத்தி, சரத்தை முடிவு செய்யுங்கால் சரம் பொந்தியோடு நீரும் பாலுபோற் கலந்து, ஒற்றுமையாதலுடன் சரீர அழிவில்லாமல் யோக சாதனங்களுக்கு வேண்டிய காலம், சரீரத்தை சரமே போஷகராயிருந்து நிலைப்பிக்கும். ஆதலின் யோக அப்பியாசிகளாகிய யாவரும் சரம் நடத்தலே முதல் யோகமாய்க் கொளல் வேண்டும். சரத்தை வயப்படுத்தாமல் பிராணன் பொந்தியைவிட்டு நீங்காமலிருக்க வேறு மார்க்கம் அறிவதரிது.

10-வது சூரியன் சந்திரன் நடக்க வேண்டிய காலங்களில் நடக்கத்தக்க காரியாதிகளைக் கூறல்.

சூரியகலை நடக்குங்காலையில், யோக அப்பியாசஞ் செய்யத் தொடங்கல், மந்திரநிட்டை சாதித்தல், ஔடதமருந்துகள், சாஸ்திர ஆராய்ச்சிச் செய்தல், உண்டி சாப்பிடுதல், லாகிரியாகிய பாஷாணங்களைப் பரிட்சித்தல், ஔடத முடித்தல், நீரருந்தல், சாவகாசஞ் செய்தல், பேசத் தொடங்கல், நூல் முதலாகிய கவித்துவஞ் செய்தல், ஒருவரை சோதித்தல், ஸ்நானபானங்கள் செய்தல், குதிரையைச் சவாரி செய்தல், சயனித்தல், பெரியோர்களைத் தரிசனஞ் செய்தல், பூமியில் புதைத்த தனத்தை யெடுத்தல் இவை முதலியவைகட்கு நலமாம். சந்திரகலைக் கோவெனில் தன்மதானஞ் செய்தல். ஆபரணாதி அணிதல், வாவி முதலாகிய நீர்சுரங்களெடுத்தல் விவாகமுடித்தல் ஆகியவிவைகள் நலமாம். ஆயினும், சூரிய காலங்களில் உஷ்ண மிகுதியாதலாலும், சிலேத்தும காலங்களிற் சுழிமுனையாயிருத்தலாலும், ஏறுமாறாகவுண்டியும் மறச் செயல்களும் நடத்தல் நலமாம். சூனிய கலைக்காலத்தி லெக்காரியமுந் தவிர்ப்பது நலம். ஆனால், யோக சாதனைக் கோவெனின் மனம் நிலைக்க சமாதியோகஞ் செய்தலே நலம்.

11-வது சரத்தை வசப்படுத்தும் விபரங் கூறல்.

(அதிகாலையில் 25-நாழிகைக்குமேல் நடத்துஞ் சரமும், மேற் சொல்லிய பிரகாரம் காரியாதிகளை நடத்துஞ் சமயங்களிலுள்ள சரமும் ஏறுமாறாக இருப்பினும் அதை சரிபடுத்தும் விவரங் கூறுகின்றது) எவ்வாறெனின் சரம் திரும்ப வேண்டிய காலங்களிற் சூரியன் நடக்க சந்திரன் வேண்டுமாயின் சூரியனைப் பெண்ணாகவும் சந்திரனை ஆணாகவும் சந்திரன் நடக்க சூரியன் வேண்டுமாயின் சந்திரனைப்

பெண்ணாகவும், சூரியனை ஆணாகவும் பாவித்து, கீழ்மேலாகச் செய்விக்க சூரியன் வேண்டிய காலங்களிற் சூரியனும் சந்திரன் வேண்டிய காலங்களிற் சந்திரனும் நடத்தலாகும்.

மேற்சொல்லிய விதிப்பிரகாரம் நடவாமையாயின் கீழ்ச்சரம் வலுவாயிருத்தலால் பிரச்சனையில்லையென்று மேற்புறம் நாட கருவியைக் கீழ்ப்புரமாய்ச் சொறுகச் செய்து, பக்கவிலாவின் கீழ்நாலரை அங்குலப்பிரமாணம் கம்பளமாயினும், பட்டாகினும் சுத்தவஸ்திரமேனும் பூமிமட்டம் உயர்த்தல் வேண்டும்.

அப்படியும் மேற்சொல்லிய விபரங்கட்கு சரிவராதிருப்பின் யோகசாதனை உள்ளோர், மூலாதார அப்பியாசமாகிய கீழாதாரத்தை சுத்தப்படுத்தல் வேண்டும். மேற்படி அப்பியாசமில்லையாயின் ஆசான் திருவருளைத் தியானித்து தகுந்த சிகிச்சை செய்து கொள்ளல் வேண்டும். இவ்வெளிமையான காரியத்தைச் செய்தல் புண்ணிய புருடர்களுக்கன்றி மற்றவர்களுக்கு வாய்ப்பதரிதாம். அப்படி ஓர் கால்வாய்க்கினும் நடத்தலரிதெனவே சொல்லத் தகும். ஆதலின் மகா கவனத்துடனும் சிரத்தையுடனும், நடத்தப்பட வேண்டும்.

சூனியசரம் வேண்டுமாயின் திரேகம் சமமாய் பத்மாசனத்திலிருக்கச் செய்து சூரியனதிகப்படுங் காலத்திற் சூரியன் பக்கமாகவும், சந்திரனதிகரிக்கில் சந்திரன் பக்கமாகவும் உயிரெழுத்தாகிய மவுனா க்ஷரத்தை பதமாயமைத்து சிறுகச்சிறுக மிதிப்பித்து, சூரிய சந்திரர்களை நேசிக்கச் செய்து, சூனிய சரமாக்கி யோகாப்பியாசஞ் செய்பவரே கலியுகயோக புருடராகவும், வேண்டும்போது சித்து விளையாடுபவராகவும் சொல்லத்தகும்.

சூனியசரம் சம்பாதிக்க லெளிதாக விருப்பினும் சுழிமுனையைக்காக்கும் (வேஸ்த்தூ) வாயுவை அசையாமல் செய்வித்தலே மிகவரிதாம். ஆதலின் இவ்விதிகளை மகா ஜாக்கிரதையாய் அறிதலும் நடத்தலும் வேண்டும்.

12-வது சிவராஜ யோகமாகிய வாசியோகத்தின் விபரமும், அதற்குரிய சரத்தினியல்பும் கூறல்.

சரம் நடத்துங்கால் யோகவப்பியாசமும் வேண்டுமாயின், பராபர வஸ்துவென்னும் மூலாதாரப் பொருளாகிய ஸ்ரீ விநாயகக் கடவுளை பேரின்ப வாழ்க்கையிலமைத்தல் வேண்டும்.

நமக்குள் மறைவிடமான விடங்களில் மாயா விட்டிருக்கிறதுவைத் தேடல் வேண்டும். வினையாகிய இருளை அகற்றல் வேண்டும், பிராணனை உண்மையால் துள்ளிதம்போற்றுலக்கல் வேண்டும். சுழிமுனையிற் சுடரையேத்தி யோர்மனதாய் நிற்றல் வேண்டும். சுவாசமாகிய வாயுவைப் பிராணனால் நேசித்தல் வேண்டும், பிராணனும் சடலமும் ஏகோபித்து நீரும் பாலும்போற் கலந்து பூரித்தலே (சிவராஜயோகமாம்) இஃதனை அனுஷ்டிப்பவரே பரம யோகிகளாவர். ஆதலின், இதனையு மனுஷ்டிக்க வேண்டும்.

இதனை அனுஷ்டிக்குங்கால் உண்ணும்போதும் உறங்கும்போதும் உயிரெழுத்தாகிய மௌனாரக்ஷத்தை ஏழுமாத்திரையிருத்தி உட்படுத்திவைத்து சரத்தைச் சுழிமுனை அதாவது, சூனியகலையில் வைத்திருந்து ஆசனபங்கமில்லாம லப்பியாசிக்க வேண்டும். அக்காலங்களில் சூரியன் மேற்கூரிய பிரமாணம் வயப்படாதாயினும், சூடு கபாலமாகிய உச்சியில் பற்றினும் அடிசிறுத்து நடக்கினும் அச்சாதகத்தை நிறுத்தி ரஞ்சித கோபானஞ் செய்தல் நலம்.

13-வது சந்திரகலையிலிருந்து அமுதம் புசிக்கு மார்க்கமும் அதனியல்புங் கூறல்.

நவத்துவாரங்களிற் பெரியதும் உறுதியுமாய் நடுவிலிருக்கும் அசைக்கருவியென்னும் இரண்டா மெழுத்தாகிய நகரத்தை இரண்டரை அங்குலப்பிரமாணம் உள்வாங்கி மேற்சொல்லிய அப்பியாசங்களை இடைவிடாமல், இருபத்துநான்கு அயனங்கள் நடத்துங்கால், இடபவாகனராகிய சதாசிவக் கடவுளின் திருவருளாகிய வமுதமும் சிரசிற் சிந்துமென்றறிவாய் அதன் பெருமையோ சொல்லத் திறமன்று ஆயினுமிதனைச் சார செய்தல் வேண்டும்.

14-வது மேற்கூறிய வாரசரங்கள் தப்பினடக்கினும் ஏறுமாறாய் பிசகி நடப்பினு மதின்பலன் கூறல்.

முதனாளாகிய ஞாயிற்றுக்கிழமையிற் சூரியன் நடவாமல் (5) நாழிகையளவும் சந்திரன் நடக்குமாயின், படை, குட்டம், சொறி சிரங்கு முதலாகிய திரேகத்தின் மேற்புறமான வியாதிகளும், சளி, இருமல், இறைப்பு முதலாகிய உள்வியாதிகளும், அடரும்.

செவ்வாய்க் கிழமையிற் சந்திரன் நடக்குமாயின், மனக்கலக்கம், சிநேகத் துவேஷம் சுரம், உட்சுரம், இவைகளடரும்.

சனியிற் சந்திரன் நடக்குமாயின், பிராணனுக்கு அபாயமான தத்துகளும், சீதளம் சன்னி முதலாகிய வியாதிகளு மடரும் சந்திரனடக்க வேண்டிய வளர்பிறை, வியாழத்தில் சூரியன் நடக்குமாயின்; பொருட்சேதமும் வியாதிக்கு மருந்து பிடிக்காமையுமாம் சந்திரனடக்க வேண்டிய; வாரங்களாகிய திங்கட்கிழமையில் சூரியன் நடக்குமாயின் ஆயுள் குறைவும், ஜலதோஷமும் அடரும்.

புதன்கிழமையில் சூரியனடக்குமாயின் அபாயங்களும், தொடுத்த விஷயங்கள் பலியாமையும், பாரம், நீரேற்றல், தலைக்குத்தல் உண்டாகும்.

வெள்ளிக்கிழமையில் சூரியனடக்குமாயின், தன் மக்களுக்கு தோஷமும், சுற்றத்தார் கலக்கமும், கண்ணோய், காதுநோய்களும் உண்டாகும். தேய்ப்பிறை காலமாகிய வியாழத்தில் சந்திரன் நடக்குமாயின் மஹா ரோகங்களும் சாதனைக் குறைவும் தாபசுரம், தலை நோக்காடும் மடரும்.

15-வது பாழாய் நடத்தலின் குணங்கூறல்.

இருகலைகளுந் தவறித்தவறி யோடுமாயின் ஜலதோஷமேயன்றி வேறன்று ஒருபுறமாய்ச் சாதகஞ்செய்யுங் காலமாகிய அயனசரம். முடிவிலன்றி இதற்கு முன்பாகவே ஓர்நாள் முழுவதும் ஒருபக்கமாய் சரம் நடக்குமாயின் மூன்று மாதங்களில் மரணமெனினும், மூன்று வருஷங்களில் மரணமாவார்.

ஒரு புறமாகவே ஆறுநாள் நடக்குமாயின் ஆறு திங்களில் மரணமாதல் நிச்சயம். ஆதலின் சரம் சரிவர நடத்தல் மிகவும் அருமையென்றுணர்தல் வேண்டும்.

16-வது மேற்சொல்லிய சர விகற்பங்களுக்கும் சாதனைகளுக்கும் வேண்டிய பத்தியங்களும் கற்பங்களுங் கூறல்.

மாந்தளிர் மேனியுடைய பிள்ளாய் 14-ம் படியிலுரைத்த வாரசர பேதங்களுக்கு சிகிச்சையும், பக்குவமும் அறிவாயாக. அதாவது மேற்சொல்லிய வியாதிகளுக்கு ஆயுர்வேத அளவாய் நடத்தலாகிய வசியம். பாழாய் நடக்குஞ் சரத்திற்கோவெனில் முன் 12-ம் படியிலுரைத்த வாசியோகமே இதற்கேற்ற சிகிச்சையாம்.

இச்சரங்களை நடத்தியும் வாசியை வயப்படுத்தும் வகையறிந்தும், காலபேதப்படி சிகிச்சைகளைச் செய்வதுடன் மனவுறுதிக்கும், திடச்சித்த முண்டாதலும் திரேகசித்தி, மனசித்தி யாதலுக்கும், கற்பமுறைக்க கேட்பாயாக. அவையென்னெனின், மிளகோரயன காலமும், சூரணம் இரண்டு பக்ஷங்களும், கேசரிமெழுகு ஆறு பக்ஷங்களும், வெள்ளைக் கல்பமாகிய கணக்கல் சுன்னம் பத்து பக்ஷங்களும் உட்கொள்வதே கற்பமாம்.

17-வது கல்பங்களின் விபரங்கூறல்.

மேற்சொல்லிய படியில் கல்பவிதிக்கு தெளிவு கூறாமையால் இனித் தெளிவாயாக, அதாவது மிளகென்பது மிளகும் பச்சிலையாம் - இலை முடிவுபெறச்செய்து சூரணங்கொள்ளல்

சூரணமென்பது நீலிபச்சிலை வல்லாரை, வெள்ளைக் காக்கிரட்டான், பிரமி, பொற்றலை, பொடுதலை, இவைகளைச் சூரணமாக்கல்.

கேசரிமெழுகென்பது கேசரிதைல மூலியமாய் லிங்கக்கட்டுடன் சில மூலிகைகளை அமைத்து பாகஞ் செய்து கொள்ளல், வெள்ளைக்கல்பமாகிய கணக்கல் சுன்னமென்பது நூலந்தியம் அதாவது முடிவுபெறப் பார்க்குதல் என்பதாம் இவைகளை நன்குணர்தல் வேண்டும்.

18-வது கல்பம் செய்பாகமும் உண்ணும் அளவையுங் கூறல்.

2½- வீசை மிளகை பதினாறாம் படியிற் செப்பிய அளவின்படி பகிர்ந்து, பிரதி தினமும், பொற்றலைகையான் தகரை சமபாகமாய்ச் சேர்த்துண்ணல் வேண்டும். சூரணமோவெனின், பதினேழாம் படியிற் சொல்லிய பச்சிலைகளைத் தனித்தனி வுலர்த்தி ஆறுபலம் சூரணமாக்கி வைத்துக்கொண்டு 16-ம் படியிற் கூறிய அளவுக்குப் பகிர்ந்து சொர்ணப்பால் சமபாகமாய்ச் சேர்த்து சாப்பிடல் வேண்டும்.

கேசரிமெழுகோவெனில் கேசரியை முறைப்படி வுலர்த்தி தைலமிறக்கி 12 புட்டி தைலத்தால் மூன்று விராகனிடை லிங்கக்கட்டிக்கு சுருக்கு கொடுத்து தைலம் முடிந்தவுடன் லிங்கக்கட்டை யெடுத்து வாசிக்குதவும் பச்சிலைகளைச் சார் பிழிந்து இரண்டு படிசாற்றில் 5-பலம்

சீனி அருகன்வேர் கியாழம் ஆழாக்குவிட்டு கலக்கி மூன்றுநாட் சென்றெடுத்து மேற்படி சாற்றில் கலக்கி பசுநெய் 5-பலம் விட்டு லேகிய பதமாய்க்கிண்டி இறக்கி மேற்படி லிங்கக்கட்டை நன்னிக்கல் கல்வத்திற் பொடியாக்கி சமபாகங்களாய்பொட்டலஞ்செய்து லேகியத்தையும் பாகித்து உருண்டைகளாக அமைத்து இரண்டையுஞ் சேர்த்து உண்ணல் வேண்டும்.

19-வது கற்பமுண்ணும் காலமும் பத்தியமுங் கூறல்.

கல்பமும் அதற்கேற்ற காலமும் பத்திய பாகமும் செவ்வனே அறிந்து நடத்துதல் லெளிதாகயிராவிடினும் மேற்சொல்லிய பிரகாரம் பாகப்படுத்தி சாதனைக் காலங்களில் சூட்சும பதம்பார்த்து அருந்துதல் மிக அருமையாகவும் பெருமையாகவும் இருக்கும்.

20-வது பஞ்ச பூதியின் விபரங் கூறல்.

பிரிதிவு, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்பவைகளே பஞ்சபூதங்களென்று சொல்லப்படும் இவையுள், பிரிதிவுயென்பது நிலம் அல்லது மண், அப்புவென்பது நீர் அல்லது ஜலம், தேயுவென்பது அக்கினி அல்லது தீ, வாயுவென்பது காற்று அல்லது, வளி ஆகாயமென்பது விசும்பு அல்லது சப்தமாகிய வியோமம். இவைகள் அண்டத்துக் கேற்றதாயினும் பிண்டத்தினும் உண்டெனக் கொள்ளல் வேண்டும்.

21-வது மானிடவுருவ பஞ்ச பூதியங் கூறல்.

பிரிதிவு என்பது தேகம், அப்பு வாயு உண்டாகுமாகையால் ஜலத்துக்கேற்ற விடமெனக் கொள்க, தேயு ஒளியையுடைய கண்ணெனக் கொள்க, வாயுவென்பது காற்றுண்டாகும் நாசியெனக் கொள்க, ஆகாயமென்பது சப்தம் உண்டாகும் இடத்தை உணர்த்துங் காதென கொள்க.

22-வது சரத்தின் பஞ்ச பூதியங்களைக் கூறல்.

மேற்சொல்லிய பஞ்சபூதியங்களை சரத்தில் பார்க்குஞ் சமயங்களில் சந்திரன் நடக்கினுஞ் சூரியன் நடக்கினும் மூக்குத் தண்டிற் சார்ந்துவரும் சுவாசம், பிரிதிவு என்றும், கீழ்நோக்கி நடக்கில் அப்புவென்றும், மேல்நோக்கி நடக்கில், தேயுவென்றும், மூக்குத்தண்டில் எதிர்பக்கமாய் வருஞ்சுவாசம் வாயுவென்றும், நாற்பக்கங்களிலும் படாது பெருகவோடுவது ஆகாயமென்றும் முறையே கொள்க.

23-வது பஞ்ச பூதியங்கள் நடக்கும் அளவும் காலங்கூறல்.

பிரிதிவு 12-அங்குலமும், அப்பு 16-அங்குலமும், தேயு 8-அங்குலமும் வாயு 18-ம் ஆகாயம் 6-அங்குலமும் நடக்கும். இவைகட்கு காலமோவெனின் பிரிதிவு 1-நாழிகை அப்பு 1½-நாழிகையும், தேயு 7-நாழிகையும், வாயு 1½-நாழிகையும், தேயு 1-நாழிகையும், ஆகாயம் - 1-நாழிகையும் ஆகிய அளவாய் நடக்கும். இவைகளின் நன்மை தீமை அறியவேண்டின் பிரிதிவு அப்பு நன்மையெனவும், தேயுமத்திபமெனவும், வாயு ஆகாயம்தகாதவைகளெனவுஞ் சொல்லத்தகும். யோக அப்பியாசத்திற்கு தேயுவே தக்கதெனக்கொள்க.

24-வது பஞ்ச பூதியம் முறையே ஒவ்வொன்றுங் குறைவதைக் கூறல்.

பிரிதிவுக்கு அப்பும், அப்புவுக்கு தேயும், தேயுவுக்கு வாயும், வாயுவுக்கு ஆகாயமும் குறைந்தது எவ்விதமெனின், பிரிதிவுக்கு ஸ்பாிசம் ரூபம், ரசம், கந்தம், சப்தமுமுண்டு அப்புகந்தங் குறைந்தால் பிரிதிவுக்கு அப்பு குறைந்ததென்றும், தேயுவுக்கு கந்தமும் ரசமும் குறைந்தால் அப்புவுக்கு தேயு குறைந்ததென்றும் வாயுவுக்கு கந்தம் ரசம் ரூபம் குறைந்ததால் தேயுவுக்கு வாயு குறைந்ததென்றும் ஆகாயத்திற்கு ஸ்பரிசம் ரூபம் ரசம் கந்தம் குறைந்தால், வாயுவுக்கு ஆகாயம் குறைந்ததென்றும் முறையே கொள்ளல் வேண்டும்.

25-வது சூக்கும சரத்தின் விபரங்கூறல்

சூட்சுமசரமென்பது நிறத்தினாலறுவதாம். இதனை அறிவதருமையாதலின் சூக்கும சரமென சொல்லலாயிற்று. பிரிதிவு பொன்னிறமாகவும், அப்பு வெண்மை நிறமாகவும், தேயு செம்மை நிறமாகவும், வாயு கருமை நிறமாகவும், ஆகாயம் நீலநிறமாகவும் கொள்ளல் வேண்டும்.

26-வது சரம் நடத்துவோர் கவனிக்க வேண்டிய முக்கிய விதிகளைக் கூறல்.

முன் 8-ம் படியிலுரைத்தவிதம் நடத்தலுடன், சோம்பல், உரத்திகொட்டாவிடுதல், கோபம் அதிகரிக்கும்படி செய்து கொள்ளல். சந்தோஷத்தைப் பெருகச் செய்தல் இவை முதலியவைகள் தகாவாம்.

27-வது ஆயுள் குறையுஞ் செய்கைகளைக் கூறல்.

அதிக விரைவாயோடுதல், அதிக நித்திரை செய்தல், மிகபெருமூச்சு விடுதலுமாகா, ஏனெனின் சாதனைக்காலங்கள் தவிர மேற்சொல்லிய காலங்களிற் சுவாசம் அதிகரித்து ஒரு நாளுக்கு நடக்க வேண்டிய 21600-க்கு அதிகப்படுவதால் ஆயுள் குறைதலெனவும், மேற்சொல்லிய 21600-க்கு குறையும்படி செய்வித்தல் ஆயுள் விர்த்தியாகுதலெனவுஞ் சொல்லப்படும்.

28-வது மேற்சொல்லிய பஞ்சபூதியங்களைத் திருப்பி வசப்படுத்தும் மார்க்கங் கூறல்.

11-வது படியிலுரைத்த வண்ணம், சூரியகலை, சந்திரகலை, சுழிமுனைகளை மாற்றுவது போலவே இவைகளையு மாற்றுதல் வேண்டும். எப்படியெனின் திரேகத்தைக் கவிழ்த்து உந்தியில் மேடிருக்கச் செய்து ரேசக பூரங்களை மிதமாய் நடத்திக் கொண்டேவர திரும்பிக் கொண்டேவரும் வேண்டிய பூதியம் நிறுத்துங்கால் அச்சாதகத்தையும் நிறுத்திவிடல் வேண்டும்.

29-வது சூரியசந்திர சுழிமுனைகளுக்கும் நாடிகளுக்கும் ஒற்றுமையாதலைக் கூறல்.

திங்களெனுஞ் சந்திரன் வாத நாடியெனவும், ரவியென்னுஞ் சூரியன் பித்தநாடி யெனவும், சுழிமுனையை சிலேத்தும நாடியெனவும் சொல்லப் படும். அதாவது வாதபித்த சிலேத்துமங்கள் 5-ம் படியிற் கூறிய விதம் வாரசரம் அளவாம் நடத்துலாலத்னைச் செவ்வையாய் அறிதல் வேண்டும்.

30-வது ரேசக பூரத்தின் விபரங்கூறல்.

ரேசகமென்பது உட்புகும் சுவாசம், அதனை உட்சுவாச மெனவும் பூரக மென்பது வெளிவிடும் சுவாசம் அதனை நிசுவாசமெனவும் ரேசகத்தைச் சிவமெனவும், பூரகத்தை சத்தியெனவும் உட்புகும் சுவாசம் பிராணவாயுவெனவும் வெளிவிடும் சுவாசம் கரியமிலவாயு வெனவும், உட்புகும் சுவாசம் அமுதமெனவும் வெளிவிடும் சுவாசம் விஷமெனவும் இவைகளையே நன்மை தீமைகளாகக் கொள்ளப்படும் ஸ்ரீகளும் மேலுரைத்த விதிகளியாவையும் நடத்தலுக்கு ஒழுங்கெனவே சொல்லத்தகும்.

சுபமஸ்து.

ஔவையார் உயர்ஞான சரநூல்

முற்றிற்று.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

தினக்கிரம அலங்காரச் சருக்கம்.

முகவுரை

சர்வஜீவ தயாபர ச்டாக்ஷ வீக்ஷண்யத் திருவருட் பொழியும் வள்ளலாகிய சிவபிரானின் கருணைபெற்றிலகும் அன்பர்காள்! இவ்வுலகின்கண் வாழும் ஆன்ம கோடிகளெல்லாம் பிராரத்துவ கன்ம சம்பந்தத்தா லுண்டாகும் வியாதிகளால் கட்டுப்பட்டவர்களாகவே இருக்கின்றனரென்பது அனுபவ காட்சியன்றோ? ஆதலால் அநாதமுத்தனாகிய பதியின் காருண்யத்தினாலாண வமலத்தினின்றும் வெளிவந்த அனாதிபெத்தர்களாகிய ஆன்மாக்கள் மாயையினிடத்து பெற்ற தனு கரண, புவன போகங்களில் முக்கியமாய்த் தனுவாகிய தேகமானது, தர்மார்ந்த காம மோக்ஷமெனுஞ் சதுர்வித புருடார்த் தங்களா லுண்டாகிய பேரின்பத்தை அடைவதற்குப் பெரிய சாதகமானதா இருந்தபோதினும், இத்தகைய தேகத்திற்கு கன்மானுசாரமாகவரும் வியாதிகள் 4448-நாலாயிரத்து நானூற்று நாற்பத்தெட்டும் நீக்கவல்ல பண்டித ராகாவிடினும், சித்து புருடர்களாகிய ஜீவன் முத்தர்களின் கிருபா நோக்கத்தினால் நமக்கு முக்கியமா யேற்படுத்தியிருக்கும் நிபந்தனைகளை யாவருமுணர்ந்து நோயின்றி சுகஜீவிகளாக விளங்கற்பாலதாகவும், இதன் முதற்பாகத்தி லெழுதியிருக்கும் நூலை அனுபவிப்பவர்கட்கு மிக்க அனுகூலமாக இருக்குமென இரண்டாம் பிரிவில் 'தினக்கிரமாலங்காரச் சுருக்க' மென நாமகரணமளித்து இங்ஙனமெழுத லாயினேன், சாதுக்கள் இதினுண்மையை அலட்சியஞ் செய்யாது நன்குணர்வார்களென நம்புகின்றனன்.

இப்படிக்கு,

எழுமூர், நேட்டிவ் டாக்டர் வீ.இராமலிங்கதேவர்.

உ
சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

நலமான வாழ்வு பெற நல்ல வழிகள்

தினக்கிரம அலங்காரச் சருக்கம்.

கணேசர் வணக்கம் - நேரிசை வெண்பா.

சீருலகோர் கட்கினிதாந் தினக்கிரமா லங்காரப்
பேருலவ நற்சுருக்கம் பேசவே - நேருலவு
முத்தருடன் பத்தர்களு நித்தந்துதி லத்திமுக
துத்யவைங்க ரன்றா டுணை.

அவையடக்கம்.

அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

உற்றசிறு சங்கினா லுத்திநீர் வற்றவைக்கு
முவமை போலும்
விற்பனர்கள் தம்முனங் கல்லாதான் பேசுகின்ற
விதத்தைப் போலும்
பொற்புயரும் ஞானசர நூற்குதவி யாய்ச்சொன்ன
புலவன் வாக்கை
நற்றவருங் கற்றவரும் பிழைநீத்து கருணைசெய
நாடி னேனே.

1-வது நோயணுகா விதி.

உலகினிடத்து திருவருட் செயலால் அரிய பிறவியாகிய மானிட தேகத்தை யெடுத்திரா நின்ற மக்களனுசரிக்கின்ற பலவித நிலையிலும் கடத்தைக் காத்துக்கொள்ள வேண்டுதத்தியாவசிய மாதலால் அதற்கு முக்கியமான காரியார்த்தங்களை இங்ஙனங்கூற வந்தமையால்

முதலாவது நோயணுகா விதியென்பதை வெளிப்படுத்துகின்றது. அவை யென்னெனின், மலசலத்தையடக்காமலும் விந்துவை அதிகமாக நஷ்டப்படுத்தாமலும் உண்ணுமிடத்து நீரைக் காய்ச்சி மோரைவிளாவி, நெய்யுருக்கி உண்ணுதலுமாகிய நன்மையுள்ளவர்களின் நாமத்தை உச்சரிப்பவர்கட்கும் பிணி விலகும்.

அன்றியும் பதார்த்தங்களின் குணங்களையும், அவைகளைப் புசிக்க வேண்டிய காலபேதங்களையும் பகுத்தறிந்து புசித்து அதனால் கிடைக்கிற சுகத்தை அனுபவிப்பவர்கள் பலவாகச் சொல்லப்பட்ட வியாதிகளைக் காணாதவர்களாய்ப் புத்திரர்களையும், மலையைப்போல் உறுதியுள்ள சரீரத்தையும், இவ்வுலகத்தைச் சிருஷ்டிக்கும் பிரமாதேவனைப் போல மிகுந்த ஆயுளையும்பெற்று பதினாலுலகத் திருப்பவர்களுங் கண்டு களிக்கத்தக்கதாக வாழ்வார்கள்.

இவ்வாறே தெய்வப்புலமை திருவள்ளுவ நாயனாரும் மருந்து என்னும் அதிகாரத்திற் கட்டளையிட்டனர். அவையென்னெனின், ஒருவன் முன்னுண்டது உற்ற படியையறிந்து பின்மிக்ப்பசித்து உண்ணுமிடத்து மாறுகொள்ளாத உணவுகளைக் குறிக்கொண்டு உண்ணக்கடவன் மாறுகொள்ளாமையாவது, உண்பவன் சரீர சுபாவத்தோடு மாறுகொள்ளாமையும், காலவியல்போடு மாறுகொள்ளா மையும், சுவை வீரியங்களாற்றம் முனமாறு கொள்ளாமையுமாம், மாறுபாடில்லாத உணவுகளேயானாலும் மனம் வேண்டிய மட்டில் உண்ணாமல் பிணிவாரா அளவினா லுண்ணல் வேண்டும்.

இவ்வாறு உண்பவன் உயிர் பிணிகளாற்றுன்பமுறாமல் சுகமுறுவன். ஒவ்வொருவரும் அதி உஷ்ணகாலத்தில் விழித்துச் சுத்தோதகமெனும் நீராகாரம், அல்லது நல்ல ஜலம் பிரமாணமாகப் பருகிப் பாதசாரியாய் நடந்து, மிதவசனம் வசனித்து, மாலைவெயிலை விரும்பி, பசும்பாலையிச்சித்து, எண்ணெய் நாலுதினத்துக் கொருதரம் அப்பியங்கனஞ் செய்யும் போது வெந்நீரிற் குளித்து, பகற் காலத்தில் சையோகம் நித்திரை இவை செய்யாமல் தன் வயதுக்கு மேற்பட்ட மாதரையும் இளவெயிலையும் இச்சியாமல், மலசலங்களை அடக்காமல், சுக்கிலத்தை அடுத்தடுத்து விடாமல் இடதுகைக் கீழாகபடுத்து மூலரோகத்தை உண்டாக்கும் பதார்த்தங்களை உண்ணாமல், நீர்போலிருக்குந் தயிரைப் பருகி முந்நாமற் சமைத்த கறி அமிர்தத்துக் கொப்பானாலும் புசியாமல் பசித்த போதே சாப்பிடுதல், அவையாவது

தினமிரண்டுதர முட்கொள்ளல், மாதரை மாதத்திற் கோர்தரஞ் சேர்ந்து, மிகுந்த தாகமுண்டாயினும் போஜன முடிவிலன்றிப் பின்பு ஜலபானஞ் செய்யாமல், கருணைக்கிழங்கு தவிர மற்ற கிழங்குகளை தின்னாமல் வாழை இளம்பிஞ்சைப் புசித்து இரவிற் சாப்பிட்ட பின்பு குருநடையாக நடந்து, ஆறுமாதத்திற் கொருதரம் பேதியாகும் படியாயும் மருந்துண்டு ஒன்றரை மாதத்திற் கொருதரம் நசியஞ்செய்து மாதத்திற்கு குறைந்தது இரண்டு விசை சவளஞ் செய்து மூன்று நாட்கொருதரம் கண்களுக்கு மையிட்டுக் கொள்ளவேண்டும்

கஸ்தூரி முதலிய வாசனைத் திரவியங்களையும், புட்பங்களையும், நடுராத்திரியில் முகராமல் தூரஸ்திரீ நடக்கும்போது பறக்குந் தூசியும் ஆடு கழுதை துடைப்பம் இவைகளால் உண்டாகுந் தூசியும், மேலே படும்படி நெருங்காமல் இரவில் தீபத்தினிழல் மனிதர் நிழல் விருட்ச நிழல் இவைகளிற்றங்காமல் போசனம் ஜீரணிக்கும் காலத்திற் புணர்ச்சி செய்யாமல் நித்திரை போசனம் மலசலம் புணர்ச்சி அழுக்கு வஸ்திரம் சீப்பிட்டு சீவும்போது சிந்துகின்ற ரோமம் ஆகிய இவைகளை மாலைக்காலத்தில் நீக்கி தன்றோடு கூடிய பசுவையும் தெய்வத்தையும் பிதுர்தேவதைகளையும், ஆசிரியரையும் அம்மாலைக் காலத்தில் பூசித்து, நகச்சலமும், சிகைச்சலமும் தெரிக்குமிடத்தி னெருங்காமல் நடந்து வந்தால் நோயை முன்னிட்டு வரும் எமனுக்கு இவனிடத்தில் வேலை யில்லையென்று நோயணுகா விதியிற் சொல்லியபடியால் ஒவ்வொருவரும் இதனை அவசியகரமாய் அனுபவத்திற்குக் கொண்டு வர வேண்டும்.

2-வது சரீரம் நிலைபெறுவதற்குக் காரணம்.

சரீரமாகிய தேகம் தங்கியிருப்பதற்குக் காரணமாகிய வாதம், பித்தம், சிலேஷ்மம் இரசதாது இரத்ததாது மாமிசதாது, மேதோதாது அஸ்திதாது மச்சைதாது சுக்கிலதாது மலம் மூத்திரம் என்னும் பாரீராதி 12-களின் வருத்தி சீரணங்களினால் பிறக்காநின்ற நோய்கள் முழுமையும் நீக்குதற்கு முக்கியமாய் வேண்டிய மருந்துக்களோடு மேற்கண்ட ஜடாராக்கினியின் குணோதயத்தால் உணவுகளினின்றும் பிரிகின்ற அன்னரசத்தால் போஷிக்கப்பட்டு புஷ்டியாக்கிப் பூரிக்கப் பண்ணி பலத்தையுங் காந்தியையும் நிரந்தரமாக கொடுத்துக் கொண்டு உயிராகிய அர்சனை வாழச்செய்தல்.

கருப்புவுற்பத்திக்கு காரணமாயும் தேகத்திற் காதார்வாயுமாகிய சப்ததாதுக்களில் புருடர்கட்கு சுக்கிலமென்றும் மாதர்கட்குச் சோணித

மென்றுஞ் சொல்லப்படும் இவ்விரண்டும் முறையே சிவம் சத்தியென்றும் பெயர் பெற்றுக் கருப்பவுற்பத்திக்கும், ஆயுள் விருத்திக்கும் முக்கிய காரணமாக இருக்கின்றன. இவை அகாலபோசனம் உஷ்ணபதார்த்த பக்ஷணம் பயம், துக்கம், வியாகூலம், சிந்தித்தல், மிக சந்தோஷம் அதிககோபம் மரண ஓமம் பேதங்களால் வருகின்ற பற்பலரோகம் காலத்தினும் காமநூல் விதிப்படி அநேக பந்தங்களுடன் செய்கின்ற சையோகம் அதாவது போகம் நீடித்து நிலைக்க வேண்டும், தாய்லாகிரி சேர்ந்த ஔடாதிகளை சாப்பிட்டு செய்கின்ற சையோகம்.

மர்மஸ்தானக் கெடுதியென்னு மிவைகளினாலும் விர்த்தாப்பியத் தினாலும் நஷ்டப்படும். இவ்வித நஷ்டமுற்ற சுக்கில சுரோணிதத்தை யுடைய பலவித அசாத்திய ரோகங்களை அனுபவிப்பதுமன்றி சம்போகத்திற்கு இளைத்துக் குருவியைப்போல் புணர்ந்தும் வாயினார் பேசி இச்சை தீர்ந்தும் சந்தான விருத்தியில்லாமல் அற்ப ஆயுளை உடையவர்களாவார்கள்.

ஒருவேளை சந்தான விருத்தி இருந்தாலும் அதற்கு அற்ப பலனும் ரோக விருத்தியும் ஆயுள் குறைவும் உண்டாயிருக்கும். ஆகையால் பால் முதலிய மதுர வஸ்துகளைக் கொண்டு சுக்கிலத்தையும் எண்ணெய் முதலிய பித்த வஸ்துகளைக் கொண்டு சுரோணிதத்தையும் போஷிக்க வேண்டும்.

3-வது விழித்தவுடன் சுத்தஜலம் அருந்தலின் குணம்.

நித்திரைசெய்து விழித்தவுடன் சுத்தோதகமென்னும் நீராகாரம் அல்லது நல்லசலமும் இதுகளிலே தேனுமொன்றைப் பிரமாணமாகப் பருகில் பயித்தியதோஷம் விலகும். அன்றியும் மலசல பந்தங்களும் நீங்கும். வாதமுதலிய மூன்று தோஷங்களுந் தத்தம் நிலைகளிற் சஞ்சரிக்கும்.

4-வது விழித்தவுடன் பார்க்கத்தக்க வஸ்துக்கள்.

நித்திரை செய்து விழித்தவுடன் தாமரைப்பூ தங்கம் தீபம் கண்ணாடி சூரியன் புகையொழிந்த நெருப்பு செஞ்சந்தனம் கடல் வயல், சிவலிங்கம், முகில் சூழ்ந்த மலை கன்றையுடைய் பசு தனது வலக்கை, மனைவி, மிருதங்கம் இவற்றுள்ளே தேனும், ஒன்றைப் பார்க்கில் உத்தமம்.

5-வது விழித்தவுடன் பார்க்கத்தகாத வஸ்துக்கள்.

நித்திரைசெய் தெழுந்தவுடன் அங்கவீனம் வஸ்திரயீனம் பாவம் காவிவஸ்திரம் கிரகசங்கை ஊமை மொட்டைத்தலை செவிடு அழுகை சடை மனிதரிடத்தில் விருப்பமில்லாமை கூன் அழுக்குமேனி விரிந்த சிகைத்தலை சதாநித்திரை குஷ்டம் கொலை எண்ணெய்த்தலை மனோவியாகூலம் உன்மத்தம் தரித்ரம் க்ஷயரோகம் இதுகளையுடையவர் முகத்தையும் தீட்டு அழுகை விதவை ஆகிய மாதர் முகத்தையும் பாம்பு, பூனை, சாம்பல், எருமை விளக்குமாறு கயிறு உலக்கை முறம் என்னுமிவைகளையும் பார்த்தால் அன்றைக்கு கெடுதியுண்டாகும்.

6-வது விழித்தவுடன் கண்ணாடி பார்த்தலின் குணம்.

தூங்கி விழித்தவுடன் கண்ணாடி பார்த்தலினால் வீரிய விர்த்தியும் மகிழ்ச்சியும் சர்வ வசியமும் ஞானமும் அதிகரிக்கும்.

7-வது மிதாமித வார்த்தையின் குணம்.

மிதமானவார்த்தை வசனித்தால் உள்ளறிவும் சரீரசவுக்கிய முண்டாகும். அதிகமாக வசனித்தால் மேற் சொன்ன அறிவும் சவுக்கியமுங் கெடும். இதுவுமல்லாமல் ரசதாதுவும் ரத்ததாதுவுஞ் சுண்டும். அவ்விரண்டு தாதுகளுங் குறைவதனால் பித்தம் அதிகரிக்கும். அதனால் சிலேஷ்மரோகம் பிறக்கும் அதனால் சகலரோகம் உண்டாகும்.

8-வது பல் விளக்கலின் குணம்.

தூள்இலை கொம்பு இவைகளால் பல் விளக்கினால் பற்களுக்குக் குற்றமில்லை. வாதபித்த சிலேஷ்மங்களால் பல்லினிடத்தும் அதன்வேரினிடத்து முண்டாகிற 23-ரோகங்களும் உண்டாகாது. மேற் சொல்லிய தூளும் இலையும் கொம்பும் இயல்பான துவருள்ள துகளாய் இருக்க வேண்டும் அப்படியிருந்தால் இறுதிநாள் வரைக்கும் பல்கள் மலையைப் போல அசைவின்றி உறுதியாக இருக்கும்.

9-வது பல் விளக்கத்தக்க கொம்புகள்.

கருவேல் குச்சியால் பற்களுக்கு உறுதியும் வேப்பங் குச்சியால் ஒளியும் நீர்ப்பூலா குச்சியால் வீரிய விருத்தியும் ஆலம் விழுதால் இலட்சுமி கடாக்ஷமும் நாயுருவி வேரால் முக வசீகரமு முண்டாகும்.

10-வது பல் விளக்கத்தகாத வஸ்துக்கள்.

செங்கல் மாமணல் கரி தென்னம்பாளை வைக்கோல் இவைகளால் தினமும் பல் துலக்குபவரிடத்தில் இலட்சுமி நீங்கி மூதேவி சேர்வாள்.

11-வது பஞ்ச கற்பவிதி.

கஸ்தூரி மஞ்சள் மிளகு வேப்பம் வித்து கடுக்காய்த்தோல் நெல்லிப் பருப்பு இலைகளைக் கிரமப் பிரகாரம் காராம் பசுவின் பால் விட்டு அரைத்து கொதிக்க வைத்து ஒப்பற்ற சிரசில் தேய்த்துக் கொண்டால் எந்நாளும் அதி துல திரேகத்திற்கும் அதி சூட்சம ரோகத்திற்கும் இடமில்லை இதுவே பஞ்ச கற்ப விதி.

12- ஸ்நான கால விதி.

சித்திரை, வைகாசி மாதங்களில் உதயமான 5-நாழிகைக்குள்ளும் ஆனி, ஆடி மாதங்களில் 8-நாழிகைக்குள்ளும், ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் 4 நாழிகைக்குள்ளும், மார்கழி, தை மாதங்களில் 2-நாழிகைக்குள்ளும், மாசி, பங்குனி மாதங்களில் 3-நாழிகைக்குள்ளும் பக்குவமாக வள்ள தைலஸ்நானஞ் செய்தால் ஆரோகிய சரீரத்தைப் பொருந்துவார்கள்.

13-வது வெள்ளை வஸ்திரத்தின குணம்.

வெண் துகிலுக்கு வாதாதி தோஷங்களும் வியர்வும் விலகும். ஆயுள் விருத்தி லட்சுமி விலாசம் வனப்பு மகிழ்ச்சி அறிவு பலம் ஆகிய இவைகளுண்டாம்.

14-வது போஜனகால விதி.

இரண்டு கால போஜனமே நன்மை. தப்பிய மூன்று கால போஜனங் கொள்ளல் வேண்டும். சூரியன் இளம்பருவமாயிருக்கு முதயகாலத்தில் 3¾ மூன்றேமுக்கால் நாழிகைக்குள்ளும் காலைப்பருவமாகிய உச்சி காலத்தில் 15-நாழிகைக்குள்ளும் மேற்றிசைக் கடலிற் சேர்ந்த பருவமாகிய இராத்திரி 7½-நாழிகைக்குள்ளும் பசியாகிய தீமையுடையவர்கள் கொள்வார்கள்

சூரிய உதயமாகி 11¼ நாழிகைக்குள் உண்கிற நல்லவுண்டி தேகத்திற்குப் பொருந்தும் 15-நாழிகைக்குள் உண்கிற உணவுமிதம் என்கிற அளவில் பிணிகளை விலக்கும். 22½ நாழிகையில் புசிக்கின் ரோகசம்பவமாம் 30-வது நாழிகையிலருந்தும் அசனம் உயிருக்கு முடிவைத் தரும் இந்த நான்கில் முதல் 2-ம் கால போசனமும் மற்றவை அகாலபோசனமுமாம். போசன முதலில் மகர வஸ்துவும் மத்தியில் புளிப்பு, உப்பு, உவர்ப்பு இலைக்கறிகளும் முடிவில் துவர்ப்புச் சம்பந்தமான புளிப்புத்தயிர் ஊறு காய்களும் உண்ணல் வேண்டும். அபபடி உண்ணில் சுகத்தையடைவாய்

எவ்வித தேகிகட்கும் முக்கால் வயிற்று உணவேயன்றி முழுவுணவில்லை. அதற்கென்ன காரணமென்றால் அன்னம் பதார்த்தங்கள் கூடி அரைவயிற்று உணவு பால் மோர் சலம் கூடி கால் வயிற்று உணவு இவைபோக இன்னுங்கால் வயிற்று உணவு கொள்ளத்தக்க இடத்தை வெளியாக வைக்க வேண்டியது

அப்படிக்கு வைக்காவிட்டால் அன்னம் சீரணமாகாது அதைச் சீரணிக்கத்தக்க அக்கினியும் வாயுவுஞ் சஞ்சரிப்பதற்கிடமில்லை. துவாரத்தையுடைய தீனிப்பையிற்றங்கிய உணவானது 4- பிரிவையுறும் அவையாவன ஒருபங்கு கிருமிகளுக்கும் ஒருபங்கு மலத்திற்கும் ஒரு பங்கு ஜடராக்கினிக்கும் ஒருபங்கு தேகத்திற்குமாம் ஒருநாளுண்ட உணவினின்றும் பிரிவுற்ற அன்னரசமானது அன்றைக்குச் சதா துவை நனைத்து ஊறித்தங்கும். 2-ம் நாளுண்ட அன்னரசமான அந்த ரசதாதுவிலேற முன்பு ஊறிநின்ற ரசம் இரத்த தாதுவிற்பாயும் இவ்வாறே 3-ம் நாள் மாமிசத்தாதுவினும் 4-ம் நாள் மேதோ தாதுவினும் 5-ம் நாள் அஸ்தாரதுவினும் 6-ம் நாள் மச்சை தாதுவினும் 7-ம் நாள் சுக்கில தாதுவினுமாகச் சென்று அத்தாதுக்களை விருத்தியடைச் செய்து 8-ம் நாள் தேகத்திற்கு குன்றாத வன்மையைக் கொடுக்கும்.

15-வது உண்கல பேதம்.

மனோற்சாக போசனத்திற்கு வெள்வாழையிலையே அன்று மற்றைய இலைகள் மத்திபமாம். தங்கம் வெள்ளி வெண்கலம் இவைகளாற் செய்த உண்கலங்கள் மிகவும் நலமாம். இவைகளைவிட மட்கலமே சிறந்தது. இதிற்புசிக்கில் க்ஷயமும்பாண்டு ரோகத்தாற் பிறந்த நீர்சுரப்பும் விலகும்.

16-வது அன்னத்தின் பிரமாணம்.

அன்னமானது கொஞ்சஞ் சுடுமையுள்ள போதே உண்பது உத்தமத்திலுத்தமாம் அது வாதபித்த கபங்களினாலும் பீனசத்தினாலும் விளைகின்ற நோயையும் அரோசகத்தையும் நீக்கி சரீரத்திற் வன்மையைத் தரும் டமுங்கலரிசி அன்னத்தைப் புசிக்கின் வாதகோபமும், பலமும் வலிய ரோகங்களுமில்லை. இது நோயாளருக்கு உதவும் பச்சரிசி அன்னமானது பலத்தையும் குழந்தைகட்கு மாந்தத்தையும் உண்டாக்கும். பித்த கோபத்தையும் மூத்திரக்கிரிச் சரத்தையும் நீக்கும்.

17-வது சமைக்கும் விதமும் அதன் பயனும்.

பழைய அரிசியை தவிடு நொய் முதலியவை போம்படி நன்றாகத் தீட்டி முழு அரிசியாக ஆய்ந்தெடுத்து இள வெந்நீராற் கழுகி வஸ்திரத்திற் கொட்டிச் சற்றே ஆறவைத்து ஒரு பாண்டத்தில் அரிசிக்கு மூன்று பங்கு சலம் விட்டு அடுப்பேற்றி, அது நுரைக்கட்டி கொதிக்கும்போது, அரிசியை அதில்போட்டு முக்காற்பாக வெந்தவுடன் கரண்டியால் விழாவி வடித்துக் கொண்டு மறுபடியுந்தணலில் வைத்துப் பக்குவமாக இருக்குஞ் சமயத்தில் இறக்கிக் கொள்வதற்கு சுத்த அன்னமென்று பெயர்.

இதை நற்கறிகளோடுண்ணில் வாதபித்த சிலேஷ்மம் என்னு முத்தேகிகளுக்கும் முக்கியமாக உதவும் பத்தியங்களுக்கும், ஆகும். அன்றியும் குடலைப்பற்றிய நோய்கள் முழுமையும் விலகும் குற்றமில்லை பாலுஞ் சாதமுமாக உண்ணில் பித்தகோபமும் தாகமும் விலகும் கொஞ்சம் மந்தஞ் செய்யும். ஆனால் தேகபுஷ்டியும் உடனே வீரிய விருத்தியும் உண்டாகும். இது பால கவுமாரவிருத்தர் பரியந்தமுதவும்.

பசுவின்பாலை சாப்பிட வேண்டுமானால் புளிப்பு, துவர்ப்பு, உவர்ப்பு, கைப்பு, கார்ப்பு, இனிப்பு என்னும் 6 சுவையில் 1-வதும் 2-வதும் ஆகிய சுவையுள்ள வஸ்துக்கள் எவையும் அனுபானமாசச் சேர்த்துக் கொண்டு உண்ணலாகாது. சுக்கிலத்தை விருத்தி செய்யும்படியான கடைசியிற் சொல்லிய கார்ப்பு, இனிப்பு என்னும் 2 சுவையுள்ள வஸ்துக்களை அனுபானமாகச் சேர்த்துக்கொண்டு உண்ணெனச் சிலர் சொல்லுவர். ஆனாலும் அந்த இரண்டு சுவையில் கார்ப்புள்ள பொருள் நோயுற்ற போழ்து அனுபானமாகக் கொள்ளலாகும் மற்ற காலத்தில் பாலைத் தனியே உண்ணவேண்டும் அதற்கு அனுபானம் கற்கண்டுப்பொடி பொருந்தும்.

8-வகைக்குற்றங்கள் நீக்கிய அன்னத்துடன் உண்ணவேண்டின் மதுரமுள்ள பழம் அனுபானமாகப் பொருந்தும் ஆதலால் இவ்வாறு முறைப்படி உண்ணக்கடவை. அன்னத்திற்கு எப்போதும் குற்றமேயில்லையாயினும் பாகபேதங்களுண்டானால் 8-வகை தோஷங்களுண்டாகின்றன. அவையாவன முதலாவதாக அன்னத்தோஷம் என்பது கஞ்சி சித்திக் கொள்வதாம் இதனால் தூமம் விதூமம் என்கிற அஜீரணங்கள் பிறப்பனவாம். 2-வது பிச்சில்தோஷம் என்பது அன்னங் குழைந்து போவதாம் இதனால் ஜடராக்கனி அணைந்து விடும் 3-வது அசுசிதோஷம் என்பது மயிர் கிருமி உமி முதலியவைகளோடு சமைப்பதாம் இதனால் அரோசகமுண்டாகும் 4-வது கொதித்தோஷம் என்பது கருக்கரிசி அன்னமாம் இதனால் அலசரோகம் உண்டாகும்,. 5-வது சுக்கிலதோஷம் எ-து ஆறி உலர்ந்த அன்னமாம் இதனால் தூமவிரோகம் உண்டாகும், 6-வது தங்கதோஷம் எ-து காந்தின அன்னமாம். இதனால் ஜீரணதாதுரோகம்உண்டாகும், 7-வது விரூபதோஷம் எ-து கோழியல்ரிசி அன்னமாம் இதனால் ஆயுள் முதலானவைகள் கெடும். 8-வது அனர்த்துஜலதோஷம் எ-து நொந்து ஜலம் பிறந்து நூலிழைத்த அன்னமாம் இதனால் அதிநித்திரையும் சீதா திரேகங்களும் உண்டாகும்.

19-வது பால் அருந்துதற்கு நாழிகை.

பசுவின்பால் கறந்த மூன்றேமுக்கால் நாழிகைக்குள் அல்லது 5-நாழிகைக்குள் உண்ணல் வேண்டும். இவ்வாறுண்டால் அந்தப்பால் தேவாமிர்தத்தை யொப்பாகும். அந்தக் காலத்துக்கு மேற்பட்ட பாலை உண்டால் பிரமன் அறிதற்கரிய சிவனுண்ட விஷத்தை யொப்பாகும்.

20-வது பதார்த்த வகை.

குறிஞ்சி நிலமாகிய மலைச்சாரல் பூமியில் விளைகின்ற துவரம் பருப்பை வெந்நீரில் போட்டுச் சமைத்து போசனஞ் செய்வதற்கு முதலில் பசுவினெய்யுடன் அன்னத்திற்கலந்து புசித்தால் ஒருபிடி சதை வளரும், அன்றியும் குறிஞ்சி நிலத்தில் பயிராகிற வஸ்துக்களெல்லாம் அதிக பலமுள்ளதாயிருப்பதால் அந்த நிலத்து துவரையே விசேடமாகும்.

துவரம்பருப்பின் ரசகுணம்.
கட்டளைக்கலிப்பா.

நவரைவாழைக் கனி பலவின்கனி
நல்லமாங்கனி பாலொடுநெய்க்கறி
கவரிலப்பொழுதே மந்தமாம்பரி
காரங்கேட்கும் பயித்தியக்காரரே
எவருங்காண்க அறைகுது மன்னத்தி
லிட்டுணுங்கறி தன்னுடன் கூடவே
துவரைநீர்மிள குள்ளிலிட்டுக்கொளீர்
துட்டவாதமுந் துஞ்சிடுமுண்மையே.

(இ-ள்) வாழை, பலா, மா என்கிற முப்பழங்களையும் பால் நெய்க்கறிகளையும், மிதமின்றிப் புசிக்கின் உடனே அக்கினி மந்தம் பிறக்கும். அதை நீக்குவதற்கு வகையறியாது சிகிச்சை வினவுகின்ற பித்தர்களே; கேண்மினோ! துவரம்பருப்புக் கட்டிருந்த ஜலத்தில் மிளகு வெள்ளைப் பூண்டு முதலிய சம்பாரங்கள் சேர்த்து ரசம்வைத்து அதை நற்கறிகள் சேர்ந்த உணவுடன் சேர்த்துண்ணில் மேற்கூறிய அக்கினி மந்தமும் வாதப்பிர கோபமும் நீங்கும் என்பதாம்.

21-வது ஜலம் அருந்தும் வகை.

போஜனாந்தத்தில் திருப்தியாகும்படி வெந்நீரை ஒருதரமாக உண்டால் ரூட்சை வாகாதிக்கம் விதாகம் அலசம் வயிற்றுப்பிசம் ஆகிய இவைகள் போம். ஆயுசும் சுக்கிலமும் விருத்தியாகும். நீரை அண்ணாந்துண்ணில் பாதிரியா வாதமும் குனிந்தருந்தில் இருமலும் உண்டாம். பாத்திரத்தை வாயாற்கடித்து அருந்தில் ஒருரோகமும் இல்லை. இரவில் நீர்பூட்டிய அன்னத்தை அந்நீராகாரத்துடன் சூரியோதய காலத்தில் அருந்தில் சுக்கில விருத்தியும் உதராக்கினியும் சரீர முழுதுந் தேஜகமுண்டாம் பயித்தியவாத சிதாந்தமும் விலகும்.

22-வது கஞ்சி வகை.

துன்பமேயன்றி இன்பந்தராத சுட்க கபரோகங்களுக்கும் சரீர முழுதும் எலும்புதவிர மாமிசப்பசை யிழந்தவர்களுக்கும் பலமற்று கைகால் ஓய்ந்து வீழ்கின்றவர்களுக்கும் யவைக்கோதுவென்னும் பார்லி அரிசிக்கஞ்சியையே மருந்தாகக் கொடுத்தல் வேண்டும். கோதுமைக்

கஞ்சியானது வாதசுரம் ஜலதோஷம் கபம் சந்நிபாதம் இவைகளை விலக்கும் தேகத்திற்கு வண்மையைத்தரும்.

23-வது சேர்க்கை அகலின் குணம்.

அவலில் பாலும்நெய்யும் சேர்த்து உண்டால் சரீரத்திற்கு பலமுண்டாகும். தயிர்களிற் கலந்துண்டால் மந்தம் உண்டாகும். மோரில் கலந்துண்டால் சோபமும் எரிவும் சலத்தில் ஊறவைத்து உண்டால் உளியால் வெட்டினால் அதுவும் வாய் மடங்கத்தக்க உறுதியான வாய்வு உண்டாகும் ஆகாரமும் ஏற்றுக் கொள்ளாது எவ்வகைப் புளியையாவது சேர்த்து உண்டால் பித்தரோகம் நீக்கும் இராப்போசனஞ் செய்தவுடன் சிறுநடையாக 100 அடி உலாவிய பின் நித்திரை கொள்பவர்களுக்கு முன்பு உண்ட அன்னத்திற்சேர்ந்த விஷ பதார்த்தங்களெல்லாம் ஒன்றுறக்கலந்து சீரணிப்பதுந்தவிர அவ்வுண்டியில் திரிதோஷமுஞ் சாராதென்றுணர்க.

24-வது தாம்பூல வகை.

தாம்பூலந்தரிக்குமிடத்து முதலில் வெற்றிலையையன்றிப் பாக்கு மாத்திரம் போட்டுக் கொண்டால் குற்றம் உண்டாகும். பந்துக்களின் உறவு நீங்கும் முன்பதாக வெற்றிலையைத் தின்றுபின்பு முறைப்படிக் குப்பாக்கு வெற்றிலைகளைத் தின்னவேண்டும். இவ்வண்ணம் நடத்துகின்ற விவேகிகளிடத்தில் இலட்சுமி நிலைபெற்று வாரஞ் செய்வாளென்க.

அன்றியும் துவர்த்தல் சொக்குதல் மூர்ச்சைப்புழு உளுத்ததூள் பிசிபிசிப்பு முதலியகுணங்கள் இயற்கையாகப் பாக்குகளிலிருப்பதால் இதை முதலிற் லின்றால் உடற்கு அபாயம் நேரிடும் என்பதைக் கருதி முற்றமுறும் என்றும் பந்துக்களின் கூட்டுறவு நீங்குமென்றும் சுண்ணந்தடவாத புனிதமுள்ள ஒரு வெற்றிலையை முதலில் மென்று அந்தச் சாற்றை விழுங்கில் நெஞ்சுவாலும் கபக்கட்டும் மேற்படி பாக்கின் றோஷங்களும் விலகுவதால் இலட்சுமி வாசஞ் செய்வாளென்றும் கூறப்பட்டது. பாக்கு வெற்றிலை சுண்ணம் இவைகளை ஒன்றுற மெல்லும் போழ்து அதில் நின்று ஊரிய முதல்நீர் நஞ்சு, 2-வது நீர் மிகு பயித்தியம், 3-வது நீர் அமிர்தம், 4-வது நீர் அதியினிப்பு, 5-வது, 6-வது நீர்கள் பித்ததோஷம் அக்கினிமந்தம் பாண்டுரோகம் இவைகளை உண்டாக்கும்.

25-வது அதிஷ்டம், சதா உட்கார்ந்திருத்தல், நொந்த சோறுண்ணல் மிககாற்று விரும்புதல் இவைகளின் குணம்.

இறைக்கும்படி ஓடுதல் சதா உட்கார்ந்திருத்தல் சுடுபுகைபடும் படி உலாவல் நொந்தசோறுண்ணல் மிகுகாற்று விரும்புதல் என்னுமிச் செய்கைகளினால் முறையே க்ஷயம் அதிதூலம் கேத்திரரோகம் அக்கினி மந்தம் முதலிய நோய்வருக்கமும் மகா வாதரோகங்களும் உண்டாகும். எப்போதும் அதிகநடை நடப்பதால் காந்தியும் சகசதேக புஷ்டியும் மத்திபமாம் சுக்கிலட்சீணமும் கிழரூபம் உண்டாகும்.

26-வது சயவ வகை.

இலவம்பஞ்சுமெத்தையின் படுக்கையால் உட்சூடு நீங்கும் பருத்தி மெத்தை இரத்தம் விந்துகாமம் சுரம் இவைகளை விருத்தி செய்யும் நற்குணமுள்ள கோரைபாயிற் படுத்தால் அக்கினி மந்தமும் சுரவேகமும் நீங்கும் தேகக் குளிர்ச்சியும் சுகநித்திரையும் உண்டாகும். கழுத்திற்கும் தோளுக்குமத்தியிலிருக்கும் அளவான உயரமுள்ளதாகவும் நீளம் வேண்டியமட்டாகவும் இலவம்பஞ்சினால் தைத்த தலையணையின்மேல் சிரசுவைத்துப் படுத்துக்கொண்டால் பாதாதி கேசம் வரைக்கும் உள்ள எந்தப்பக்கத்து நரம்புகளும் பிசகாமல் சமனாக இருக்கும் அதுவுமல்லாமல் சிரசைபற்றிய ஆவர்த்த நோய்களும் நீங்கிவிடும்.

27-வது புணர்ச்சி வகை.

துயரம் அச்சம் தேக முழுதும் ரோமம் திரிதோஷகோபம் தூங்கிவிழுதல் அலித்தன்மை நாணம் பசிகருப்பம், தாகம் தன் வயதுக்கு மேற்பட்ட வயது புணர்ச்சியில் வெறுப்பு சுபமின்மை சூசிமுகயோனி ரோகம் அலட்சியம் கோபம் அழகின்மை கற்றாழை நாற்றம் கோள் சொல்லுதல் அதிதுலரோகம் ஆகிய இவைகளையுடைய மாதர்கள் போகம் சகலரோகங்களுக்கும் காரணமாம். இதன்றி தேவஸ்திரீ குருபத்தினி இராஜபத்தினி ஏழை ஸ்திரீ தூரஸ்திரீ பழிமாது விதவை ஆகிய இவர்களைப் போகிப்பவர்களை தரித்திரமும் துன்பமும் தொடருமேயல்லது இவர்களைவிட்டு மற்ற யாரைத்தொடரும்.

28-வது அரோகசந்தனப் புணர்ச்சி.

பதினாறு வயதுள்ள ஸ்திரீயும் இருபது வயதுள்ள புருஷனும் சரீரம் முழுவதும் மினுப்பின்மையாகவும் இருவர்க்கும் ஆசையொன்றாகியும் போகம் ஒன்றாகியும் மாதத்துக்கோர் நாள்

இராத்திரி காலத்தில் சரீரசம்பந்தப்பட்டு கூடுங்காலத்து உண்டாகும் தருவானது தாய் தந்தைகளுக்கு உள்ளபலத்தை தன் சரீரத்திற் பொருந்தி தேகம் திடமுள்ளதாகவிருக்கும். வியாதி வராது வந்தாலும் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கிவிடும். (தாய்க்குந் தந்தைக்கு ந் தேகம் உறுதியாயிருப்பதுமன்றி வியாதியுமணுகாதென்பது கருத்து) மேற்சொல்லிய ஸ்திரீக்குக் கருப்பப்பையும் சோனிதமுஞ் சுத்தமாயிருக்க வேண்டும். இவ்வாறிருந்தால் நல்லகருத்தறிக்கும்

முன்சொன்ன முறைப்படி கூடுவதும் ஸ்திரீக்கு மாதாந்தருதுகாலமாகிய பனிரண்டு நாளுக்குள் கூடவேண்டும் ஏனெனில் அந்தநாட்களில் சுக்கிலம் போய்த் தங்குகின்ற கருப்பப்பையின் துவாரமானது இராத்திரி காலத்தில் தாமரைப்பூவைப்போல மூடிக்கொள்ளாம லிருப்பதனாலென்று கொள்க. ருதுவான முதல் மூன்று நாளும் அசுத்தநாளாகையால் புருஷன் சேரக்கூடாது அதன் விபரம் கருப்பப்பையின் முகத்துவாரமாகிய யோனித்துவாரம் பிரமாணத்தைத்தப்பி அதிகமாகத்திறந் திருப்பதால் அவ்வழியாக சுக்கிலத்தின் பங்கு மிகுதியாகச் செல்லப்படுகின்றது அப்போது அவிடத்துச் சோணிதமும் இதுவும் ஏற்றக் குறைச்சலின்றி சமமாகத்திரண்டு ஆணும்பெண்ணும் அல்லாத அலிப்பிள்ளையாகப் பிறக்கும் இது ஏதுவைப்பற்றியே முதன் மூன்றுநாளும் அசுத்தநாளென்றும் சேரக்கூடாதென்றதுமாம் மற்ற 9-நாளுக்குள் இரட்டத்த நாட்களிற் சேர்ந்தால் ஆண்குழந்தையும், ஒற்றைப்பட்ட நாட்களிற் சேர்ந்தால் பெண்குழந்தையும் உற்பவிக்கும். இந்த விபரத்தையெல்லாம் சாரீரமெனுஞ் சாத்திரத்தின் முதல் அத்தியாயத்தில் காண்க.

29-வது தினப் புணர்ச்சியின் குணம்.

கொக்கோக சாஸ்திரத்திற் சொல்லும் பலவித லீலைகளுடன் இரவும் பகலும் நித்திரையில்லாமல் புணர்ச்சி செய்கின்றவர்களிடத்தில் மிகுதியாயுண்டாகும் வியாதிகளை அளவிடத் தொடங்கினால் அதற்கு முடிவில்லை அதற்கு பரிகாரஞ்செய்யு மருத்துவன் வகைக்கும் ஒய்வில்லையென்று உணரவேண்டும்.

30-வது இரவில் நித்திரைப் பங்கத்தின் குணம்.

இராத்திரியில் நித்திரை செய்யாதவர்களிடத்தில் நிலையாய் இருப்பதற்குச் சித்தமயக்கமுதல் மந்தம் வரையிற் சொல்லிய நோய்கள்

வந்து பொருந்தும் அன்றியும் வேடருடைய நாய்கள் கௌவுதல் போலப் பலவியாதிகளுங் கௌவிக் கொள்ளும்.

31-வது பகல் நித்திரையின் குணம்.

பகல் நித்திரையானது தண்டம மேட்டாட்சியம் ஊருத்தம்பம் சருவாங்கம் உக்கிராக்கிரகம் சுப்தி அனுத்தம்பம் திருக்குத்தம்பம் சோணிதம் ஆட்டியம் புருவாடோபகம் கிருத்தரசி ஊர்த்துவம் சம்பூகம் அவபேதம் அவதந்திரம் அவதாமை விவுர்தாசியம் என்னும் பதினெட்டு விதவாத ரோகங்களை விளைவிப்பதற்கு ஒருவித்தாகும். ஆகையால் பகல் நித்திரை செய்யக் கூடாதென்பதாம் இந்த வாதரோகங்களின் விபரங்களையெல்லாம் 'நயனாமிர்தம்' என்னுஞ் சாத்திரத்தில் எட்டாவது அத்தியாயத்திற் காண்க.

தினக்கிரமாலங்காரச் சருக்கம் முற்றிற்று.

❖❖❖❖❖

பீர்முகமது

திருவாய்மலர்ந்தருளிய

திருமெய்ஞ்ஞான சரநூல்.

காப்பு

ஆரணத்தி லரும்பொருளா யுரைந்தநாதி
யகண்டபரி பூரணமாய் நிறைந்த சோதிக்
காரணத்திக காரணனைத் துதித்து நாளுங்
கதிமுகம்ம திறசூலைக் கருத்துள் வைத்து
வாரணத்தின் சதுயார்கள் பதங்கள்போற்றி
மாற்றுமௌலி மார்கள் பதம் வணங்கி வாழ்த்திக்
தாரணியோர்க் குணர்வுதிப்பத் திருமெஞ்ஞானக்
சரநூலை முறைமுறையாய்ச் சாற்றுவேனே.

ஆரணத்தின் அரும்பொருளாகி உரைந்த நாதியாகவும் அகண்ட பரிபூரணமாய் நிறைந்த சோதியாகவும் காரணத்தின் காரணனுமாகியவனைத் துதித்து தினந்தோறும் முகம்மது ரசூலைக் கருத்தில் வைத்து, மதிப்புக்கும் மரியாதைக்கும் உரியவர்களின் திருவடிகளைப் போற்றி மௌலிமார்களின் பதம் வணங்கி வாழ்த்திப் பூமியிலுள்ளவைகளுக்கு உணர்வு உதிக்கும் வண்ணம், திருமெய்ஞ்ஞான சரநூலாகிய இந்த நூலை முறைப்படி முறையாக எழுதி வழங்குகிறேன்.

நூல்

எண்சீரடி ஆசிரிய விருத்தம்.

பொன்னான மெஞ்ஞானச் சரநூலென்னும்
புகழ்பெரிய சாஸ்திரத்தின் புதுமை தன்னை
இந்நிலத்தி லறியாத மாந்தர்க் கெல்லா
மெடுத்துரைக்கும் பரிசுதனை யியம்பக்கேண்மோ

முன்னான சாஸ்திரமாங் குசக் கலத்தின்
முன்னிலையிற் றடியென்ற பெருமைதோன்றக்
கன்னல் ரசச் செந்தமிழின் கவிதையாகக்
கருத்துறயான் கழலலுற்றே னுலகத்தோரே. (1)

பொன்னான மெய்ஞ்ஞான சரநூல் என்னும் புகழ் பெறத்தக்க இந்த நூலின் புதுமையினை இந்த உலகில் புரியாமலும் அறியாமலும் இருக்கிற மாந்தர் அறியும்படியாக எடுத்துரைக்கின்றேன். கேளுங்கள். முன்பெல்லாம் சாஸ்திரமாக எழுதப்பெற்றுள்ள முன்னிலையில் இந்த நூலின் கருத்துக்களை அடியேன் கரும்புச் சாற்றின் மதுரத்தைப் போன்ற செந்தமிழில் கவிதையாக உலகத்தாருக்கு வழங்குகின்றேன்.

உலகவர்க்குச் சரநூலை யொளிப்பில்லாம
லோதும்வகை யேதெனவே யுவந்துகேளாய்
நிலகரும நிலையாது நெறியாய்க்கூறு
நீடூழி வாழ்வரசு நிலைப்பதோடு
விலகுவதும் வருங்காலஞ் செல்காலங்கள்
வியனுறவே நிகழ்கால மரணகாலம்
கலைபெரிய விந்நூலின் காரணத்தின்
காட்சிதனைக் கருதிப்பார் காணுந்தானே. (2)

உலகிலுள்ளவர்களுக்கு இந்தச் சரநூலை ஒளிவு மறைவு இல்லாமல் ஓதுவதற்குக் காரணம் என்ன என்று என்னைக் கேட்பீர்களாயின் பூமியில் செய்யும் செயல்கள் நிலையான துன்பதையும் கூட நெறியாகக் கூறவேண்டும். நீடூழி வாழ்கின்ற அரசுகளும் நிலைப்பதுவும் விலகுவதும் வருங்காலம், கடந்த காலம் செல்லுகின்ற காலங்கள் நிகழ்காலம், மரணகாலம் ஆகியவற்றையெல்லாம் இந்த நூலிற் கூறப்படும் கலைகளனைத்தையும் கருத்துகளையும் காட்சி இலக்கணமாய்க் கருதிப் பார்த்தால் கண்டறிந்து கொள்ள முடியும்.

கருநிலையிற் றரித்தகன்ற பொறியின் காட்சி
கதித்துலவும் வாயுவொரு கலந்தொன்றாகி
உருவெடுத்து வுயிரென்று வுடலைச் சூழ
வோடிவருஞ் சரமாக வுடலுக்குள்ளே
திருநிலையி லைவரையும் பிரியநாடித்
திசைவாயு திரிகோண மறுகோணத்திற்
சுருக்குவலை தாமரை நூற் பொருகும் வாராய்ச்
சுழன்றுவரும் ராட்டினத்தின் சுழலைப்போலே. (3)

கருவுருகின்ற நிலையினிலே கருவானது, அதற்குரிய கனற் பொறியில் எங்கும் சஞ்சரித்து காற்றினோடு கலந்து ஒன்றாகி உருவெடுத்து, உயிருடன் கூடிய உடலைச் சூழ்ந்து ஓடிவருவதுடன் உடலுக்குள்ளும், சரமாக பஞ்சபூதங்களின் குணங்களையும் தன்னுட் பிரியமாகக் கொண்டு தச நாடிகளிலும் திரிகோணம் அறுகோணம் ஆகிய சக்கரங்களிலும் சுழன்று வருகிறது. எவ்வாறெனில் மலர்களைக் கோர்த்து நிற்கும் தாமரை நூல் போல, ஆறாதார சக்கரங்களைப் பிணைத்துக் கொண்டு ராட்டினம் போல் சுழன்று வருகிறது எனலாம்.

சுழன்றுவரு மிருகலையு மொன்றே ரண்டாய்ச்
சொல்லுகிற விடகலை சந்திரனேயாகும்
உழன்றுவரும் வலகலை சூரியனே யாகு
மொருமித்த விருகலைதான் சுழினை தீயாம்
எழும்பிவருஞ்ச சரமொன்றின் விதமேயஞ்சு
வியல்பாக வியம்புகிறே னறிந்து பாராய்
வளம்பெரிய வாயுவுதான் மேலே நோக்கி
வந்தோடு நாழிகை யொன்றோய்ந் திடாதே. (4)

இவ்வாறு கழன்று வருகின்ற கலை ஒன்றேயாயினும் இரண்டாய்ச் சுழன்றுவருகின்றது. அவ்வாறு உடலினுள்ளே சுழன்று வருகின்ற கலையினிலே இடது நாசித்துளை வழியாய் வரும் இடகலையானது சந்திரனேயாகும். வலது நாசித்துளை வழியாக வருகின்ற வலதுகலை சூரியனேயாகும். அவ்வாறின்றி இரு நாசித் துளைகளின் வழியாகவும் இரு கலைகளும் ஒருமித்து வருவது சுழினை. இது அக்கினியின் கூறாம். இவ்வாறு எழும்பி வரும் சரம் ஒன்றேயாயினும் அதன் தன்மை ஐந்து வகையாம், இவையனைத்தும் இயல்பாக அமைந்தது வளமை மிக்க வாயுதான். மேல் நோக்கி ஓடிக் கொண்டே இருக்கின்றது. அந்த வாயு ஒரு நாழிகை நேரம் கூட ஓய்ந்திருப்பதில்லை.

நாழிகைதா னொன்றரையாய்ப் பூமியோடு
நலமான கீழ்த்திசையே நளினமாக
நாழிகைதா னொன்றே காண் மூக்கந்தண்டின்
நடுவாக வோடுமது வப்புத்தானே
நாழிகைமுக் காற்பக்க விளிம்புபற்றி
நன்றாக வோடுமது தேயுவாகும்
நாழியரை யாகாச நடுவதாக
நாடாமலோடுமடா நாளிற் பாரே. (5)

ஒன்றரை நாழிகை நேரம் நாசியின் அடிப்பக்கமாக ஓடுவது பூமியாகிய பிருத்வி சரமாகும். மூக்குத்தண்டின் நடுவாக ஓடுவது அப்புசரம். இது ஒன்றேகால் நாழிகை நேரம் ஓடும். மூக்குத்தண்டின் விளிம்பை ஒட்டி ஓடுவதும் முக்கால் நாழிகை நடப்பதும் தேயு சரம் ஆகும். நடு மையமாக எதிலும் படாமல் அரை நாழிகை நேரம் ஓடும் சரம் ஆகாயசரமாகும்.

நாழியொன்றுக் கரையாகக் கலையொன்றுக்கு
நடக்குமினி யறுகலையினற்றுப் போகும்
நீளாம விருகலையுஞ் சேர்ந்தேயோடு
நிலையாது சுழிமுனையே நெருப்புமாச்சு
நாழிகைதா னொன்றிற்குச் சரத்தினோட்ட
நடக்குமடா முந்நூற்று வறுபதாக
நாளொன்றுக் கிருபத்தோ ராயிரத்து
நாலொருபத் தைந்துசர நடக்கும் பாரே. (6)

நாழிகை ஒன்றுக்கு அரையாக, ஒவ்வொரு கலையும் நடக்கும் எனில் அந்தக் கலையினியல்பே அற்றுப் போய்விடும். அவை நீளாமல் இருகலையும் சேர்ந்தே ஓடுகின்ற நிலைதான் சுழி முனை என்பதாகும். அதுவே தான் நெருப்புமாச்சு. அதுவே அக்கினியாகும். இத்தகைய சரமானது நாழிகை ஒன்றிற்கு முன்னூற்று அறுபதாகிறது. ஒருநாள் அறுபது நாழிகைக்கு. 60 X 360 = 21600 இருபத்தோராயிரத்து அறுநூறாக இயங்கிக் கொண்டிருக்கும்.

பாரப்பா வெள்ளிதிங்கள் புதனேதான்றும்
பக்குவமாய் விடிகாலஞ் சந்திரனோடும்
சேரப்பா செவ்வாயுஞ் சனிஞாயீறுஞ்
செங்கதிரோ னோடுமடா விடியுங்காலம்
வாரப்பா விதியொருநாள் வியாழன் மட்டும்
வளர்பிறைக்குச் சந்திரனே வளர்ந்துவோடும்
கூரப்பா தேய்பிறைக்குச் சூரியன்றான்
குதிகொண்டு வோடுமடா கோணந்தானே. (7)

வெள்ளிக்கிழமை, திங்கள்கிழமை, புதன்கிழமை ஆகிய மூன்று நாட்களிலும் விடியற்காலையிலிருந்து சந்திரன் சரம் ஓடும். செவ்வாய்கிழமை, சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமைகளில் விடியற் காலத்திலிருந்தே சூரியன் ஓடும். அடுத்த வியாழக்கிழமை ஒரே ஒருநாள்

மட்டும் வளர்பிறையாயிருந்தால் அன்று சந்திரன் வளர்ந்து ஓடும். தேய்பிறையாயிருந்தால் சூரியன் தான் ஓடும்.

தானான வார மது வேழுஞ் சொன்னேன்
றப்பிவரும் சரத்துடைய பயனைக்கேளாய்
வேனான ஞாயிறிலே சரமேதப்பில்
வியாதியது மெய்தனிலே வளரும்பாராய்
ஆனான திங்களிலே சரமேதப்பி
லறுதியினா லவர்காலம் முடிவுமாகும்
கானுலவுஞ் செவ்வாயிற் சரமேதப்பிற்
கலக்கமுறும் பெரியவொரு கலகமாச்சே. (8)

இவ்வாறு வாரத்தில் ஏழுநாட்களில் சரம் ஓடும் கஜத்தைச் சொன்னேன். இதில் தப்பி வரும் சரத்தினுடைய பயனைக் கேட்பாயாக. ஞாயிற்றுக்கிழமையன்று சரமானது தப்பில், உடலினிலே வியாதியானது வளரலாகும். திங்கள்கிழமையன்று சரமானது தப்பி ஓடினால், அவர்க்கு வியாதியினால் அவருடைய காலத்திற்கே முடிவு ஏற்படும். செவ்வாய்கிழமையன்று சரமானது தப்பி ஓடுமானால் மனக்கலக்கமும் பெரியதொரு கலகமும் விளைய நேரும்.

ஆச்சப்பா புதனிலே சரமேதப்பி
லபாயமடா தொடுத்தவகை பலியாதப்பா
நீச்சப்பா குருவாரஞ் சரமேதப்பி
விலையாது பொருட்சேத நினைந்ததெல்லாம்
சூட்சமமாய்ச் சுக்கிரனிற் சரமேதப்பிற்
சொல்லுகிறேன் மக்களுக்குச் சேதமாகும்
தாழ்ச்சியடா சனிவாரஞ் சரமேதப்பிற்
றனக்குவொரு தத்துவந்து தப்புவாயே. (9)

புதன் கிழமையன்று சரமானது தப்பியோடின் அபாயங்கள் உண்டாவதுடன் தொடங்குகின்ற காரியம் பலியாது. வியாழக்கிழமை அன்று சரமது தப்பியோடினால் எதுவுமே நிலையாது. பொருட் சேதமுண்டாகும். நினைத்த காரியம் நடக்காது. வெள்ளிக்கிழமையன்று சரமது தப்பியோடினால் மக்களுக்குச் சேதம் உண்டாகும். சனிக்கிழமையன்று சரமது தப்பியோடினால் தனக்கே ஒரு கண்டம் (தத்து) வந்து தப்ப நேரும்.

தப்பாக விருகலையுந் தவறியோடிற்
றனக்குவருஞ் சனிதோஷந் தடையில்லாமல்
ஒப்பாக வொருபுறத்தி லொரு நாளோடி(ல்)
லொருமூன்று வருடத்தி லிறந்துபோவான்
அப்படியே யொருபுரத்தில் நாளோறோடி
லாறாகு மாதமடா விறுதிக்காலம்
செப்புகிறேன் சந்திரனி விரவேயொன்றுஞ்
செங்கதிரோன் பகலொன்று மியங்கிற்றானால். (10)

இரு கலைகளுமே தப்பாகவும் தவறாக ஓடுமாகில் தனக்கே வருகின்ற சனிதோஷம் தடையே இல்லாமல் வந்து சேரும். ஒரே மாதிரியாக ஒருபுறமாக ஒரு நாள் முழுவதுமே சரம் ஓடுமானால் மூன்று ஆண்டுகளுக்குள்ளாகவே அவன் இறந்து போவான். அப்படியே ஒருபுறத்தில் ஆறுநாட்கள் ஓடுமானால் ஆறுமாதங்களில் அவன் இறந்து போவான். சந்திரனில் இரவு ஒன்றும் சூரியனில் பகல் ஒன்றிலும் இயங்குமாகில் அதற்குரிய பயனையும் சொல்லுகிறேன் கேட்பாயாக.

ஆனாலு மருளான யோகியானா
லவன்பெருமை யெவராலு மறியொண்ணாது
போனசர மீளாமற் சுழலுமாகிற்
போகுமடா லொருமூன்று மாசத்துள்ளே
நாணாம விருசரமு மொன்றாயோடி
னாற்பதா நாளிலல்லோ நமனைக்காண்பான்
போனசரம் மீளாமல் மேலேவாங்கிற்
பொய்யல்ல வறுதியென்று வறிந்துபரே. (11)

அவ்வாறு சரமானது ஓடிற்றாயின் அவன் அருள நிறைந்த யோகியாவான். அவனுடைய பெருமையை எவராலும் அறிய முடியாது. இவ்வாறு போன சரம் மீளாமற் சுழலுமானால் மூன்று மாதங்களுக்குள் இறந்து போவான். இருசரங்களும் ஒன்றேயாக ஓடுமானால் நாற்பது நாட்களுக்குள்ளாகவே அவன் நமனைக் காண்பான். போன சரம் மீண்டும் திரும்பாமல் மேலே வாங்கினால் பொய்யல்ல, அப்போதே இறுதிக்காலம் வந்தது என்பதை அறிந்து கொள்வாயாக.

அறிந்துகொள்ளச் சொல்லுகிறே னின்னுங்கேளே
யப்பப்பா சந்திரன்றா னியங்கும்போது
சிறந்தமனை குடிபுகுதத் தனம்புதைத்தச்
சேராம விருந்தவரைச் சேர்த்துவைக்க

விரைந்தேறும் விஷமிறக்க விதைவிதைக்க
வேந்தர்களைத் தெரிசிக்க வேள்விசெய்ய
பிறந்தபிள்ளை பேர்குறிக்கப் பிணியுந்தீர்க்கப்
பிரியமுடன் யாபாரம் பலவுங்கொள்ள. (12)

நீ அறிந்துக் கொள்வதற்காகவே சொல்கிறேன் கேட்பாயாக. நாசியில் சரம் இடது நாசியில் சந்திரகலையாக இயங்கும் காலத்தில் சிறந்த மனைக்கு குடிபுகுதல், தனம் புதைத்தல் சேராமல் இருந்தவர்களைச் சேர்த்து வைத்தல், விரைந்து ஏறும் கொடிய விஷத்தை இறக்குதல், விதை விதைத்தல் வேந்தர்களைத் தரிசித்தல், வேள்வி செய்தல், பிறந்த பிள்ளைக்குப் பெயர் சூட்டுதல் நோய்தீர்த்தல், பிரியமுடன் வியாபாரம் செய்தல் முதலிய கிரியங்களுக்கும்.

கொள்ள மணங் கோதையரை நாட்குறிக்கக்
கொடிதான பார்ப்பவரிடம் மொழுகிச் சொல்ல
வெள்ளமடா கீழ்க்கிணறு வெட்டிக்காண
வேந்தர்முத லமைச் சருக்குத் தூதனுப்ப
அள்ளியிரு கையாலு மையமீய
வார்குமடா வித்தனையுஞ் சந்திரன்மீது
தெள்ளியதோர் சூரியன்றா னியங்கும்போது
தீர்க்கமாய்ச் செய்வகையைச் செப்பக்கேளே. (13)

திருமணம் செய்து கொள்ளும் நாள் நிச்சயிக்கவும் பெண் பார்க்கச் செல்லவும் கொடிய பண்புடையவரிடம் சமாதானம் செய்து கொள்ளவும். கிணறு வெட்டல், வேந்தர் அமைச்சர் முதலானவர்களிடம் தூதனுப்பவும் இரண்டு கைகளாலும் அள்ளி வாரிக் கொடுக்கும் தான தர்மஞ் செய்வதற்கும், ஆகிய இத்தனையும் சந்திர கலை நடக்கும் போது செய்வீர்களாயின் மிகவும் நன்மையான பயன் உண்டாகும். சூரியகலை நடக்கும் போது தீர்க்கமாகச் செய்யத்தக்கவைகள் எவை என்றும் கூறுகிறேன் கேட்பாயாக.

செப்பக்கே ளரமனை களம்பலங்கள்
சிறப்புடைய மாளிகைகள் சித்ரகூடம்
ஒப்பரிய சித்ரபடா மொளிர்விதான
முடமைவகை முமருந்துவகை யாவுஞ்செய்யக்

கப்பலடா கடன்மேலே பயணம்பண்ணக்
கடிதான பேய்பூத மலகையோட்டச்
செப்பணியு முலையாளைச் சேர்ந்துவாழச்
செய்மாகப் படைபொருது வழக்குரைக்க. (14)

அரண்மனைகள், அம்பலங்கள், சிறப்புடைய மாளிகைகள், சித்திரகூடங்கள், சொல்வதற்கும் அமைப்பதற்கும் அரிய சித்ரபதாகைகள் ஒளிர்வதாகிய உடைமைகளை அமைப்பதற்கும் பெறுவதற்கும் நன்மையுண்டாகும். மருந்துவகைகள் யாவையும் செய்ய நன்மையுண்டாகும். கடல் மீது கப்பற்பிரயாணம் செய்வதற்கும் நன்மைதரும். பேய் பூதம் அலகை என்ற பிசாசு ஆகியவற்றை ஓட்டுவதற்கும், அழகிய மங்கை நல்லாளைச் சேர்ந்து அவளுடன் வாழ்வதற்கும் வெற்றியடைய வேண்டும் என்ற எண்ணத்துடன் படையெடுத்துச் சென்று சண்டை செய்யவும். வழக்குரைக்கவும் நன்று.

உரையான மந்திரமுத லேதுஞ்செய்ய
வொழுங்காகக் கலையோதச் சரங்களுன்ன
திருவான தேவர்முதற் பெரியோர்மற்றத்
தேவரையுந் திருமுன்னே வரவழைக்க
குருபாதம் பணிந்துபதேசங்கேட்கக்
கொள்ளையிடப் பதியேறக் குளிக்கநீரில்
தருகாத பூமியுள்ள தன்மெடுக்கத்
தம்பனமே செய்ய நலமாகும்பாரே. (15)

எத்தகைய செயலைமுடிப்பதற்கும் உரிய மந்திரங்களை ஓதி மாந்திரீகம் செய்யவும் ஒழுங்கான முறையில் அரிய அருங்கலைகளைக் கற்றுக்கொள்ளவும் கற்றுக் கொடுக்கவும், தேவர்கள் முதல் பெரியோர்கள் வரையுள்ள போற்றுதற்குரியவர்களை வரவழைக்கவும் குருநாதரைத் தேர்ந்தெடுத்து அவரது திருவடி களைப்பணிந்து உபதேசம் கேட்பதற்கும், கொள்ளையடிப்பதற்கும், ஒரு பதியில் ஏறிச் செல்வதற்கும், புண்ணிய நதி நீரில் குளித்து முழுகவும், பூமியிலுள்ள புதையலை எடுக்கவும் ஸ்தம்பனம் செய்யவும் நன்று.

பாடியவோ ரிருசரமு மியங்கும்போது
பலியாது சுழிமுனையே பழியுமாச்சு
ஆடியவோர் சரமோடும் புறத்தைத்தானே
யதிகமதாய்ப் பூரணமென்றுரைக் கலாச்சு

சாடியேவோர் சரமோட்டாப் புறத்தைத்தானே
சாற்றுகிறேன் சூனியமென்றறி தற்காகத்
தேகமிக வந்தொருவ னுன்னைக் கேட்டாற்
றீர்க்கமாய்ச் சொல்குறியைச் சொல்லக்கேளே. (16)

இரண்டு சரங்களும் ஒன்றாகச் சுழினையில் இயங்கும்போது எடுத்த காரியம் எதுவும் பலியாது. சுழிமுனை என்பதும் இதுவேயாகையால் இதனை பழிசொல்லவுமாயிற்று. ஒரே சரமாக ஓடும்போது, அந்தச்சரம் ஓடும்பக்கத்தையே பூரணம் என்று உரைக்கலாச்சு! சரமே ஓடாத பக்கத்தைச் 'சூனியம்' என்று கூறுவதாயிற்று. சரம் பார்த்துப்பயன் அறியவதற்கு உன்னைத் தேடி ஒருவன் வந்து கேட்டால் அவனுக்கு உறுதியாக சொல்வதற்கு அடையாளம் சொல்லுகிறேன் கேட்பாயாக.

சொல்லக்கேள் கர்ப்பிணியாள் கர்ப்பந்தன்னிற்
சூலவாணோ பெண்ணோவென் றுன்னைக்கேட்டால்
வல்லகலை சூரியனில் வலமேகேட்கில்
வளர்ந்திருக்கும் பாலகன்றா னாணேயாகும்
அல்லலவன் சூனியத்தி னின்றுகேட்கி
லாணாகு மதன்கால மற்றுப்போகும்
நல்லகலை சந்திரனிற் பூரணந்தா
னாரியின்சூல் பெண்ணென்று நாட்டுவாயே. (17)

கர்ப்பமுற்றிருக்கும் பெண்ணிற்குப் பிறக்கவிருக்கும் குழந்தை ஆணா அல்லது பெண்ணா என்று ஒருவன் வந்து உன்னைக் கேட்டால் அவன் வலிமையான கலையான சூரிய கலையில் சரம் ஓடும் பக்கத்தில் நின்று கேட்பானாகில் கர்ப்பத்தில் வளர்ந்து கொண்டிருக்கும் சிசுவானது ஆண்தான் என்றும் அவன் சரம் ஓடாத சூனிய பக்கத்திலிருந்து இதே கேள்வியைக் கேட்பானாகில் ஆண் குழந்தை பிறந்து இறந்து போகும் என்றும் சொல். நல்ல கலைகளையுடைய சந்திரனில் சரம் ஓடும் பூரண பக்கத்தில் நின்று கேட்பானாகில் 'கர்ப்பத்திலிருக்கும் குழந்தை பெண்' என்று உறுதியாகக் கூறுவாயாக.

நாட்டிடுவாய் சூனியத்தி னின்றேகேட்கி
நாரியின்சூல் பெண்ணதுவு நமனைச் சேரும்
நாட்டிலின்ன மாதினுக்கு மதலையுண்டோ
நன்றாகச் சொல்லுமென்று வொருவன்கேட்கில்

கூட்டியதோர் பூரணமே குழந்தையுண்டு
கொடிதான சூனியமே குலமற்றுப்போம்
தீட்டியநாள் சூரியனுந் திங்கண்மாது
தீர்க்கமாய் நீயெவர்க்குஞ் செப்பலாமே. (18)

இதைவிட்டுச் சூனிய பக்கமாக வந்து நின்று பயனைக் கேட்டால், அப்பெண்ணின் கர்ப்பத்தில் வளரும் பெண் குழந்தை பிறந்து இறந்து போகும் என்று சொல். ஒரு பெண்ணுக்குக் குழந்தை பாக்கியம் உண்டோ இல்லையோ என்பதைச் சொல்லுங்கள் என்று யாரேனும் உன்னிடம் வந்து கேட்டால் அப்போது சரமாவது பூரணமாக நடந்து கொண்டிருக்கும் பக்கத்தில் நின்று கேட்டால் 'அந்தப்பெண்ணுக்குக் குழந்தை பாக்கியம் உண்டு' என்றும் சரமானது சூனியமாக இருக்கும் பக்கத்தில் வந்து கேட்டால் 'குலமற்றுப்போகும்' என்றும் கூறுவாயாக. சூரியனும் திங்களுமாக சரமானது வலது அல்லது இடமாக நடக்கும்போது இத்தகைய பலன்களை நீ எவர்க்கும் உறுதியாகச் சொல்லலாம்.

செப்பியதோர் கருமந்தா னேதென்றாலுஞ்
செயமாமோ குறைவாமோ வென்றுகேட்கில்
தப்பாது சூரியனிற் பூரணந்தான்
தப்பிவிட்ட நாளாகுஞ் சூனியத்தில்
மெய்யான சந்திரனின் மெதுவாய்ச்சேரும்
வேறாகுஞ் சூனியத்திற் கருமமெல்லாம்
ஒப்புடனே காணாத முதலைக்கேட்கி
லுடன்வருமே பூரணசந்திரனிற் றானே. (19)

எந்தக் காரியமானாலும் எடுத்த காரியம் ஜெயமாகுமா அல்லது தோல்வியடையுமோ என்று கேட்கப் பெற்றால், சூரியனில் சரமானது பூரணமாக நடக்கும் போது கேட்கப்படுமானால் காரியம் வெற்றிகரமாக முடியும் என்றும் சூனியமாயின் காரியம் நடவாது என்றும் கூறலாம். சந்திரனில் பூரண பக்கமாயின் காரியம் நிதானமாக நடந்து முடியும். சூனிய பக்கமானால் அறவே அற்றுப் போகும். காணாமற் போன பொருளைப்பற்றி அது கிடைக்குமா? அல்லது கிடைக்காதா? என்று கேள்வி கேட்கப் பெற்றால் பூரண சந்திரனாக சந்திரனில் சரம் ஓடிக் கொண்டிருந்தால் உடனே கிடைத்து விடும் என்று உறுதியாகக் கூறிவிடலாம்.

சந்திரனிற் சூனியமும் பிரயாசந்தான்
சார்ந்துபோஞ் சூரியனிற் பூரணந்தான்
எந்திரமாஞ் சூரியனிற் சூனியந்தா
னெத்தேச காலமில்லை யெழுந்துபோச்சு
சந்திரனில் யாத்திரை செய்வோர்க்குமேற்குத்
தப்பினதாற் சங்கடங்க டமக்கேயாச்சு
உந்திவருஞ் சூரியனிற் கீழ்வடக்கு
வுற்றவகை தப்பினதா லுனக்காகாதே. (20)

சந்திரன் சூனிய பக்கம் இருந்து கேட்பானாயின் 'தேடிக் கண்டுபிடிக்கப் பிரயாசையுடன் முயற்சிக்க வேண்டும்'. சூரியனில் பூரணமும் சூரியனில் சூனியமுமாக சரம் ஓடிற்றானால் எந்தத்தேசம், எந்தக்காலம் என்று எடுத்துரைக்க இயலாது. சந்திரனில் யாத்திரை செய்வோருக்கு மேற்குத் திசை செல்வது நலம் தப்பினால் சங்கடங்கள் உண்டாகும். சூரியனாயின் கிழக்கு வடக்குத்திசை யாத்திரை செய்வதானால் நல்லது. திசைமாறினால் உடலுக்காகாது.

உனக்காகச் சூரியனிற் பயணம்போக
வொற்றையடி மூன்றுதரம் வலதுகாலால்
இனிதாகக் குதித்தல்லோ தத்திப்போத
வியல்பாகு மிருசரமு மொன்றுமாகில்
தனக்குள்ள விருகாலு மொன்றாய்க்கூட்டித்
தத்திப்போ மூன்றுதரம் மூச்சடக்கித்
தனையல்லான் மற்றொருவ றறியொண்ணாது
தங்காம னிரைத்துவரும் படையக் கண்டால். (21)

சூரியசரம் நடக்கும்போது அதற்குரிய திசையான வடக்கு கிழக்கு செல்லாமல் மாறாகச் செல்ல வேண்டுமானால் வலது காலை முன் வைத்து ஒற்றையடியாக மூன்று அடி தூரம் நடந்துவிட்டுப் பயணத்தை தொடங்க வேண்டும். இயல்பாக இரண்டு சரங்களுமே ஒன்றாக ஓடுமாகில் இரண்டு கால்களையும் ஒன்றாகக் கூட்டி வைத்து மூச்சடக்கி சரம் தன்னை மூச்சை அடக்கிக் கொண்டு தத்தித்தத்தி மூன்று முறை சென்று பின் பிரயாணம் செய்ய வேண்டும். இதனையெல்லாம் தன்னைத் தவிர மற்றவர்கள் அறியும்படிச் செய்யக்கூடாது. தன்னை நோக்கிப் படையெடுத்து விரைந்து வரும் படையைக் கண்டால் என்ன செய்வது என்று கேட்பாயாக.

படைபொருதச் சந்திரனிற் கச்சைகட்டிப்
பரிவுடனே சூரியனிற் பாய்ந்துச் செல்லச்
சடுதிவரும் படையானாற் சந்திரனாகிற்
சறுகுதலாய்ப் பின்பறித்து முன்னேசெல்ல
அடவுடனே சுழிமுனைதா னியங்குமாகி
லகலாம லிருகாலுங் கூட்டியொன்றாய்
இடைகாணா நிலைபிரிய திருத்து மூச்சை
யெழும்பிநின்று மேனோக்கி யேற்றுவாயே. (22)

தன்னை எதிர்த்து வரும் படையுடன் சண்டை செய்ய வேண்டுமானால், சந்திரனில் கச்சை கட்டிக் கொண்டு, சூரியன் நடக்கும்போது போர் புரியச் சென்றால் நன்மை தரும். அதற்குள் எதிரியின் படை விரைவில் வந்துவிட்டால் சந்திரன் சரம் ஓடுமாயின் சற்று தங்கியிருந்து நிலமையறிந்து முன்னேறிச் செல்ல வெற்றியுண்டாகும். சுழிமுனை இயங்கும்போது எங்கேயும் செல்லாமல் இரண்டு சரங்களையும் கூட்டி ஒன்றாக்கி இடைகிலையாகஞ் செய்து அந்த நிலையினின்று பிரிந்து போகாதிருந்து மூச்சை எழுப்பி நின்று மேல்நோக்கி ஏற்றிக் கொள்வாயாக.

ஏற்றிடுவாய் சூரியனில் மாற்றான் தன்னை
யேறிடுவாய் பூரணத்தி லெதிரிபட்டான்
ஒற்றையடா சூரியனா ராணேயாகு
முத்தமியாள் சந்திரனு மொருரண்டாகும்
ஒற்றைநிலை கைக்கருவு மாண்பாலப்பா
வோடிவருஞ் சந்திரனி லொரு பெண்ணாகும்
விந்தையடா வுடலுக்கு ளடைந்தவாவி
வெளிதழன்று வெறுங்கூடாம் விதத்தைக்கேளே. (23)

ஏற்றிச் சூரிய சரம் ஆடும்போது, மாற்றான் தன்னை எதிர்த்துச் செல்ல வேண்டும். பூரணத்தில் படையெடுத்துச் சென்றால் எதிரி தோல்வியுறுவான்.

இனி, மகப்பேறு பற்றிக் கேள்வி வந்தால் சூரியகலை தனியாக இயங்கினால் பிறக்கப்போவது ஆண். சூரிய சந்திர கலைகள் இரண்டும் நடந்தால் இரட்டைக் குழந்தைகள் ஆண் ஒன்று பெண் ஒன்று.

சூரியன் ஒற்றையடிப் பூரணமாகச் சரத்தில் ஓடிக்கொண்டிருக்கும் போது ஆணா அல்லது பெண்ணா என்று கேட்டால் ஆண் என்று கூறலாகும். சந்திரனாயின் பெண் என்று சொல்லலாகும். இவற்றையெல்லாம் சொல்வதற்குப் பயன்படும் இந்த சரமானது மனித உடலுக்குள் அடைந்துள்ள ஆவியே யாகும். இந்த ஆவியானது உடலை விட்டுச் சென்று விட்டால் இந்த உடலானது வெறுங்கூடே யாகும்.

விதமாக வுடலுக்கு ளடைந்தமூச்சு
விர்த்தியோடு சூஸ்திரமா யிருக்கும்போது
இதமாக ஈராறுங் குலமேயோடு
மிருநான்கு வங்குலமே யேறுமுள்ளே
துதியாகப் பேசுகையிற் பதினாறாறோடுந்
துடியாக விருநான்கு தொடுத்துள்ளேறும்
கதிநடையி லிருபதுபோய்ப் பத்துமீளும்
கடும்வேலைக் கறுநான்கில் நந்தான்கேறும். (24)

இவ்விதமாக உடலுக்குள்ளே அடைந்த மூச்சுக் காற்றானது விருத்தியடைந்து சரமாக இயங்கும்போது ஈராறு அங்குலம் ஓடிடும். அதாவது பன்னிரண்டு அங்குலம் ஓடும். அதில் உள்ளே ஏறுவது சாரம் இரு நான்கு அதாவது எட்டு அங்குலம். இதைப் பற்றிப் பேசுவதானால் சரம் பதினாறு அங்குலம் ஓடுவதில் எட்டு அங்குலம் மட்டுமே தொடுத்து உள்ளே ஏறும். வேகமாக நடந்து செல்லும்போது இருபது போய் பத்து மீளும். கடினமாக வேலைசெய்யும் போது அறு நான்கு = இருபத்து நான்காகவும் முன் நான்கு = பன்னிரண்டு அங்குலமாகவும் இயங்கும்.

முன்னேறுஞ் சண்டையிலே யாறாறோடின்
மூவெட்டு பக்குவமே முறையிற்செல்லும்
கண்மூடிச் சயனமிடி லாறெட்டோடிக்
கடுகிவரு மையாறு கருதிப்பாராய்
உன்னியுன்னி யோடுகையி லொன்பத்தாறு
வொன்றுக்குப் பாதியடா வுயரமுறும்
இன்முலையாள் சேர்க்கையிலே யெட்டெட்டோடி
யெண்மூன்று வங்குலமே யேறும்பாரே. (25)

சண்டையிலே முன்னேறிச் செல்லும் போது மூச்சுக்காற்றானது ஆறாறு அதாவது முப்பத்தாறு அங்குலம் ஓடுமாயின் மூவெட்டுப் பக்குவமே முறையில் செல்லும், அதாவது இருபத்து நான்கு

அங்குலம்தான் உள்ளே செல்லும். கண்மூடித் தூங்கும்போது 'ஆறு எட்டாக ஓடுமானால்' அதாவது நாற்பத்தெட்டாக ஓடுமாயின், 'கடுகி வருவது ஐயாறு' அதாவது வெளியேறுவது முப்பது அங்குலம் என்பதையும் கருதிப்பார்ப்பாயாக. வேகம் வேகமாக ஓடும்போது 'ஒன்பத்தாறு' அதாவது ஐம்பத்து நான்கு அங்குலம் மூச்சு ஏறினால் அதில் பாதியளவு அதாவது இருபத்து ஏழு அங்குலம் உயர மேறும். போகம் துய்க்கும்போது 'எட்டெட்டு ஓடும்' அதாவது அறுபத்து நான்கு அங்குலம் ஓடுமாயின் அதில் 'எண்மூன்று அங்குலமே ஏறும்' அதாவது இருபத்துநான்கு அங்குலமே உள்ளே ஏறும்.

பாரப்பா விவ்விதத்தா லாவியெல்லாம்
பறந்தோடிப் போனதினாற் பிராணன்போச்சு
நீரப்பா கால்வயிறே யருந்தவேண்டும்
நத்தியமு மறைவயிறே யமுதருந்தல்
நேரப்பா முப்பாகந் தினமொன்றுக்கு
நித்திரையை நெடுநாளி னிறுத்திப்போடு
சீரப்பா வறுகோணத் தெழுந்தவாய்வைச்
சிந்தையிலே யுள்ளடக்க விதத்தைக்கேளே. **(26)**

பாரப்பா. இப்படியெல்லாம் மனிதனுடைய உயிர்க்காற்றாகிய ஆவியெல்லாம் பறந்தோடிப் போவதனால் தான் பிராணன் உயிரே போய் விடுகின்றது. எப்பொழுதுமே தண்ணீரை அருந்தும்போது கால் வயிறு அளவுதான் தண்ணீரைக் குடிக்க வேண்டும். தினந்தோறும் அரைவயிறுதான் உணவை உட்கொள்ள வேண்டும். தினமொன்றுக்கு மூன்றில் ஒருபாக அளவுக்கு இரவில் மட்டும் நித்திரை செய்ய வேண்டும். அதாவது எட்டுமணிநேரம் இரவில் நித்திரை செய்ய வேண்டும். அறுகோணங்களில் எழுந்த வாயுவைச் சிந்தையின் உள்ளே அடக்கும் விதத்தைக் கேட்டுக் கொள்வாயாக.

விதமென்ன வொழியாம லோடுநாடி
வீசிவரு மோரெழுத்தை விளம்பிக்கொண்டு
இதமான வாசானை யெழுத்தைக்கேட்டு
வெள்ளளவும் பிசகாமற் சரத்திலூன்றி
ஓதுறவே வாய்திறந்தா லொழுகிப்போச்சு
வோகோகோ சரமதனை யொன்றாய்மாட்டி
மாதிறத்தின் வாய்மூடி மனதிற்பூட்டி
வாசித்தான் மரணகலை சாகாதப்பா. **(27)**

என்ன விதம் என்று சொல்லாமலேயே ஒருகணம் நில்லாமல் நாடியானது ஓடிக் கொண்டே இருக்கிறது. வீசி வரும் ஒரெழுத்தை விளம்பிக் கொண்டுதான் ஓடுகிறது. அந்த எழுத்து என்ன எழுத்து என்பதை இதமாக குருநாதனிடத்தில் கேட்டுத் தெரிந்துக் கொண்டு அதனை எள்ளளவுகூடப் பிசகாமல் சரத்தில் ஊன்றச் செய்து ஓதும்போது வாய் திறந்துவிட்டால் அந்தக் காற்றெல்லாம் ஒழுகி வீணாகப் போய்விடும். சரம் அதனை ஒரே நிலையில் ஒரே சரமாக ஓடும்படிச் செய்து கொள்வாயாக. இதனை மிகவும் திறமையாகவும் வாயைமூடிக் கொண்டும் மனதை அடக்கிக் கொண்டும் சுவாசித்தால் மரணகலையானது சாகாதப்பா! அதாவது மரணம் என்பது வந்து சேராதப்பா!

சாகாது தவறாம லோடி நாடிச்
சரமொன்று தப்பிவிடிற் சற்றேபோச்சு
வாகாக வோரெழுத்தா லிழுத்துமூச்சை
வாசித்து வெறிவீச வழக்கமாகும்
ஓகோகோ வொருமூச்சுக் கிருக்காலோது
வுத்தமனே யொருமூன்று நாலிற்றேறு
பாகமதா யொருபதுநூ றாயிரந்தான்
பழக்கமதாய்க் கொண்டு வச மணையேநாளில். (28)

சரமானது தவறாமல் ஓடிற்றானால் மனித உடல் சாகாது. சரமொன்று தவறிச் செல்லுமாயினும் சாகும்தேகம். அந்நிலையிலும் வாகாக ஓர் எழுத்தால் பிராண வாயுவை உள்ளே இழுத்து இருமுறை நிறுத்தி ஓதிவந்தால் இரு மூச்சுக்கள் நடை பெற வேண்டிய நேரத்தில் ஒரே மூச்சு நடைபெறும். இனிதமாக உத்தமனாகிய நீ செய்வாயானால் மூன்றே நாட்களில் தேறிவிடுவாய்; அப்படிச் செய்வாயானால், 'ஒருபது நூறு ஆயிரம் தான்' பழக்கமான வகையில் நாள்தோறும் மூச்சுக்காற்றைச் சுவாசிப்பது வழக்கமாகிவிடும். அதாவது ஒருநாளில் வழக்கமாக நடக்கும் சுவாசம் இருபத்தோராயிரத்து அறுநூறைப் பாதியாகக் குறைப்பதில் வெற்றியடையலாம்.

நாளுக்கு நாட்பழக்க மதிகமாக
நடந்தேரு நாதத்தை நன்றாய்ச்சூட்டி
வேழத்தைத் தும்பியிலே கட்டொண்ணாது
விதமென்ன கலையதையே விரும்பிக்கொள்ளு

நாளுக்கு நாளாவி வளர்ந்தேயேறு
நலமான சுத்திதனைச் செய்துகொள்ளு
நீடூழி காலமெல்லா முண்டேநாலு
மூலகவர்க்கு விந்நூலை யோதினேனே. (29)

நாளுக்குநாள் இந்தப்பழக்கம் அதிகமாகும். அப்போது களம் நடந்து செல்கின்ற நாதத்தை நன்றாகச் சூட்டிக் கொள்வாயாக. மூச்சை அடக்குவது என்பது மத யானையை நூல்கயிற்றினால் கட்டிப்போடுவது போன்றதாகும். அதனால் நாளுக்கு நாள் சரமானது வளர்ந்து ஏறுகின்ற வகையில் விரும்பிப் பழகிக் கொண்டு வரும்போது அவ்வப்போது நலமான சுத்திதனையும் செய்து கொள்ள வேண்டும். இவ்வாறு செய்துவந்தால் நீடூழிக் காலம் எல்லாம் வாழலாம். நான்கு உலகங்களைச் சேர்ந்தோர்களும் பயின்று பயன்படுத்திக் கொள்ளும் விதமாக இந்த நூலைக் கூறினேன்.

ஓதுகின்ற சரமதனை யுலகத்தோர்க்கு
வொளியாம லுறைத்தவித முவந்தபேர்க்கு
வேதகுல வாவாஞ்சி பேரானான
வேந்தனெனும் சிறுமலுக்க கான்றபாலன்
நீதமிலா திந்நூலைப் பொய்யெண்ணாம
னிலைநிறுத்தப் பீர்முகம்ம தென்போன்யானே
வேதமெனு மெய்ஞ்ஞான சரநூலென்றே
விளம்பினேன் கவிமுப்பதாக முற்றே. (30)

ஓடுகின்ற சரத்தைப்பற்றிய உயிர்க்காற்றின் இயக்க நிலையினை உலகத்தில் உள்ளவர்கள் அனைவருக்கும் ஒளியாமலும் மறைக்காமலும் நான் வழங்கியுள்ளேன். இந்தச் சரநூலை நான் சொல்லி யுள்ளவிதமாகவே செய்வதற்கு மனமுவந்து ஏற்று கொண்டவர்களுக்கு, வாவாஞ்சி என்பவரின் பெயரனும் வேந்தன் என்று வழங்கப்பட்ட சிறுமலுக்கான் அவர்களுடைய மகனும் ஆகிய பீர்முகமது என்ற பெயரில் வழங்கப்படுபவனாகிய நான் இந்த நூலை பொய் என்று மனத்தாலும் எண்ணாமல் நிலைநிறுத்த வேண்டும் என்ற பெருநோக்கத்துடன்தான், வேதம் என்று சொல்லும் படியான மெய்ஞ்ஞான சரநூல் என்றே இந்நூலை முப்பது செய்யுட்களாக விளம்பியுள்ளேன்

பீர்முகமது திருமெய்ஞ்ஞான சரநூல்
முற்றிற்று.

❖❖❖❖❖

பாடல்களின் வரிசைப்படி
ஞான சரநூல்

வாழ்த்துவா முன்னம்	19
உமைமாதுக் ீசனுரைத்த	"
செய்ய மனந்துணிந்து	19
சந்திர பானிலக்கணமுங்	20
இந்த வுடலுயிர்	"
சொல்லாரும் நெடுங்கயிற்றின்	22
மூங்கிற்பாய் மிடி	23
சொல்லிய வாதனங்கள் பல	25
நவ்வி விழியாய்	26
பார்க்கிலிடையிடமதுவே	27
சொல்லுங்கால் கதிரவனுஞ்	28
கேட்கிலிடந் தூதாடை	29
பார்க்கில் வலம்	30
காலிரண்டு மொத்தக்காற்	32
முயலுங்கால்	33
காணவொரு கருமத்தைக்	35
கேடென்றோன் பறிகொடுத்தோன்	36
கேட்டவனோ ருயிர்	37
கிடைக்கின்ற மைந்தனும்	38
பார்க்குங்கா லிடமெனினும்	39
நிலம் பொன்நிறம்	40
சொல்லிய வான்	41
பாராகும் முதுகுநீர்	42
கால்மூலை தொடங்கியழல்	43
ஆகியநோய் புருடர்க்குப்	44
இறக்கு முப்யந்தனக்	45
கேளிதனை நிலநீருங்	47

போக்கரிய புகர்	51
நோவுடனே சாவாமெட்டாகில்	52
தெளிகதிர் செய்	53
தேறுநீயிவையெலாஞ்	54
சித்தமுடனிரேசகத்தில்	55
மாறிவளரும் பக்கங்	56
நடப்புடைய	57
மாறிவரு வாயுமனோ	58
பற்றினுஞ் சொன்னபடி	59
உண்பவனுக் கப்புவிட	60
கால்கொண்டு கணக்கறிய	61
பாரிலொத்த நிலத்தகல்வான்	62
காட்டிய கால்	64
குறிகொள் நிறைமதியங்	65
அழிந்திடுங்கை கால்நெற்றி	66
போம் வாயு சிவம்	67
உரைத்தொருவன்	68
வெல்வன் அமர்	69
இரட்டையாம் உபயத்திற்	70
நிகழ்புவிக்கு மூலம் நீர்	71
பாரிதனைக் கதிர்மதிதான்	72
நாமுரைத்த தொகையளவுஞ்	73
செல்லுமதி தனில்	"
ஒட்டிய வானிற் செபிக்க	74
நன்றான மறைவல்லோர்	75
புன்பிறப்பிற்	76
ஔவையார் உயர்ஞான சரநூல்	79
நலமான வாழ்வு பெற நல்ல வழிகள்	
தினக்கிரம அலங்காரச் சருக்கம்	92

பீர்முகமது திருமெய்ஞ்ஞான சர நூல்

ஆரணத்தி லரும் பொருளா	106
பொன்னான மெஞ்ஞான	”
உலகவர்க்குச் சரநூலை	107
கருநிலையிற் றரித்தகன்ற	”
சுழன்றுவரு மிருகலையுமொன்றே	108
நாழிகைதா னொன்றரையாய்ப்	”
நாழியொன்றுக் கரையாகக்	109
பாரப்பா வெள்ளிதிங்கள்	”
தானான வாரமது	110
ஆச்சப்பா புதனிலே	”
தப்பாக விருகலையுந்	111
ஆனாலு மருளான	”
அறிந்து கொள்ளச்	”
கொள்ள மணங்கோதையரை	112
செப்பக்கே ளரமனை	”
உரையான மந்திர	113
பாடியவோ ரிருசரமு	”
சொல்லக்கேள் கர்ப்பிணியாள்	114
நாட்டிடுவாய் சூனியத்தி னின்றே	”
செப்பியதோர் கருமந்தானே	115
சந்திரனிற் சூனியமும்	116
உனக்காகச் சூரியனிற்	”
படைபொருதச் சந்திரனிற்	117
ஏற்றிடுவாய் சூரியனில்	”
விதமாக வுடலுக்கு	118
முன்னேறுஞ் சண்டையிலே	119
பாரப்பா விவ்விதத்தா லாவி	”
விதமென்ன வொழியாம	120
சாகாது தவறாம	”
நாளுக்கு நாட்பழக்க	121
ஓதுகின்ற சரமதனை	”

இந்த நூல்

- புரியாத ஒரு நூலுக்கு அதைவிடப் புரியாத ஒரு உரை அதனாலேயே மங்கியது இந்நூல். தெளிவான விளக்கமான உரை வரவேற்கப்படும் என நம்புகிறோம்.

- சிவ பெருமான் கூற்றாக அமைந்தது முதல் நூல். அதனுடன் ஔவையார் உயர்ஞான சரநூல், பீர்முகமது திருமெய் ஞான சரநூல் இரண்டுமே எளிதாகப் புரிந்து கொள்ளக்கூடியது.

- நலமான வாழ்வு பெற நல்ல வழிகள்! அன்றாட வாழ்வில் நாம் கடைப்பிடிக்க வேண்டியவை.